

கல்கி
KALKI
19.3.1961
30



பேதி
மருந்துக்கு
அடிமையாகாதீர்
கடுமையான பேதி மருந்துகள் உங்கள் குடலின் தசை நார்களை பலவீனப்படுத்துகின்றன...அதனால் சீக்கிரத்திலேயே மேன்மேலும் கடுமையான பேதி மருந்துகளை நாடி நிவாரணம் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. பேதி மருந்துக்கு அடிமையாகாதீர்! உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவை உபயோகியுங்கள்.
பிலிப்ஸ் மிகவும் இதமானது; ஆகவே அது குழந்தைகளுக்கும் சிபார்சு செய்யப்படுகிறது. ஆயினும் அது மிகவும் பலன் தரக்கூடியது; முதல் தடவை அதை உட்கொண்ட உடனேயே பூரண நிவாரணம் அளிக்கிறது. பிலிப்ஸ் குணம் தருவது இவ்வாறுதான்...
மீண்டும் இந்தியாவில் கிடைக்கிறது
1. கடுமையான பேதி மருந்துகளைப் போலன்றி
2. ஒற்றை நோக்கு பேதி மருந்துகளைப் போல
GENUINE
PHILLIPS
MILK OF MAGNESIA
பிலிப்ஸ்
உண்மையான மில்க் ஆப் மக்னீஸியா
பூரண விநியோகஸ்தர்கள்:
டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்
கல்கத்தா-பம்பாய்-டெல்லி-சென்னை-பாட்னா-கௌஹாத்தி-கட்டாக்

கல்கி பொருளடக்கம்

சார்வரி, பங்குனி 6 ※ மார்ச் 19, 1961

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே



ஆடம்பரப் பொருளாகக் கருதப்படினும், அரசன் முதல் ஆண்டிவரை புகையிலையை ஏதேனுமொரு விதத்தில் உட்கொள்ளாதவர்களே இல்லை. இந்தியாவிலும் சரி, பொடியோ, புகையிலையோ போடும் பழக்கத்தைவிட புகைபிடிக்கும் பழக்கமே மக்களை மேன்மேலும் கவர்ந்துள்ளது. இதன் பயனாக ஆண்டுதோறும் 3200 கோடி சிகரெட்டுகளுக்கு மேலாக உபயோகிக்கப்பட்டு வருகிறதென இன்று உத்தேசக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

புகையிலையின் வரலாறு... 8



பம்பாய்—57.

பனமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது

GT 708 TM

Greens



மலர் 20 | தமிழ்த்திரு நாடுதனைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 33

ஏமாற்ற முடியாது

ஏற்கனவே மிகவும் உயர்ந்துள்ள விலைவாசிகள் குறைவதற்கு வகை ஏதாவது உண்டா, இந்த விலை உயர்வினால் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களுக்குப் பரிகாரம் உண்டா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் மக்களுக்கு மத்திய சர்க்கார் 'பட்ஜெட்' சமர்ப்பிக்கப்பட்ட பின், இவ்விஷயத்தில் இருந்த அரைகுறை நம்பிக்கையும் மறைந்து விட்டது. விளைப் பண்டங்கள் விலையும் உற்பத்திப் பொருள்களின் விலையும், சர்க்காரின் வரிவிதிப்பு முறைகளினால் மேலும் உயரத்தான் செய்யுமே தவிர குறைவதற்கு வழியில்லை என்பது வெட்ட வெளிச்சமாகிக் கொண்டு வருகிறது.

மூன்றாவது திட்ட காலத்தில் வரிகள் மூலம் 1600 கோடி ரூபாய் வசூல் செய்தே ஆக வேண்டும் என்ற கொள்கையை அமுல் நடத்த காங்கிரஸ் சர்க்கார் தயங்காது என்பதை எடுத்துக் காட்டுவது போல, முதல் வருஷ வரி முறைகள் மூலம் ஐந்தில் ஒரு பங்கை திரு மொரார்ஜிதேசாய் வசூலிக்கத் தொடங்கிவிட்டார். முதலாண்டு நடவடிக்கையை ஓர் அறிகுறியாகக் கருதினால், வரப் போகும் ஆண்டுகளில் வரிகளின் கொடுமை இன்னும் அதிகரிக்கும் என்றே எண்ண வேண்டும்.

விலைவாசிகள் பொதுவாக உற்பத்திக் கட்டத்திலேயே-தொழிற்சாலைகளிலேயே-உயரத் தொடங்கியிருக்கின்றன. மூலப் பொருள்களின் விலை உயர்வாலும், கச்சாப் பண்டங்களின் விலை உயர்வாலும் ரயில்வே போக்குவரத்துக் கட்டண உயர்வாலும், ஊதியக் கமிஷன்களின் சிபாரிசுகளை அமுல் நடத்துவதனால் ஏற்படும் அதிக செலவுகளாலும், உற்பத்திச் சாமான்களின் அடக்க விலை எல்லாப் பொருள்களுக்குமே அதிகரித்திருக்கிறது. இதற்கும் மேல் வரிகளின் இறுக்கம்.

விலைகள் உயரக் கூடாது என்று சர்க்கார் ஜபம் செய்கிறார்கள். வரிகள் விதிப்பினால் விலைகள் ஏறவில்லை என்பதை மிகவும் பிரயாசைப்பட்டுக் கணக்குப் போட்டுக்கூடச் சொல்லுகிறார்கள். தேயிலை வரியினால் கிலோ எடைக்கு அரை நயாபைசா மட்டுமே விலை உயரலாம் என்கிறார்கள். மண்ணெண்ணெய் வரியினால் சாதாரண மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்கிறார்கள். தீக்குச்சிகளின் விலை உயரக் காரணமே இல்லை என்கிறார்கள். இப்படி ஒவ்வோர் இனத்துக்கும் கணக்குச் சொல்லுகிறார்கள்.

ஆனால் சர்க்கார் கணக்குப்படி மார்க்கெட்டில் விலைகள் ஏறுவதுமில்லை, இறங்குவதுமில்லை. வியாபாரிகள் மீது பழி சுமத்தி அவர்களைக் குறை கூறலாம். சில சமயங்களில் ஓரிரு வியாபாரிகளின் நடவடிக்கைகளும் இப்படிக் குறைகூற ஏதுவாகி விடுகின்றன. ஆனால் விலை ஏற்றத்துக்கு அப்படிப்பட்ட சில பேர்களின் நடவடிக்கைகள் மட்டும் காரணமாகாது. எந்தப் பொருளும், உற்பத்தியாகும் கட்டத்திலிருந்து உபயோகிப்பவர் கட்டத்தை அடையும் வரை, பல கைகள் மாறியாக வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பொருளும் மொத்த வியாபாரிகள், ஏஜண்டுகள், பிராந்திய விநியோகஸ்தர்கள், சில்லறை வியாபாரிகள் என்று பலரைக் கடந்து சென்று கடைசியாகத்தான் உபயோகிப்பவர்களை வந்தடைகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் சில்லறைச் செலவுகளும், விற்பனை வரி போன்றவைகளும், இதர இனங்களும் கூடிக் கொண்டே செல்கின்றன. கடைசிக் கட்டத்தில் இவையெல்லாம் சேர்ந்து, விலையைப் பார்த்தால், வரிக்கும் விலை உயர்வுக்கும் சம்பந்தமே இராமல் போகலாம். இதுதான் வியாபாரத்தில் காணப்படும் நிலை. வரிகள் விதிக்கப்படும் முன்னரே அவற்றின் முழு விளைவுகளையும் ஆராய்ந்து பார்த்தல் அவசியம்.

வரிகளின் சுமையை, மக்கள் தலையில் சுமத்தாமல், உற்பத்தியாளர்களே தாங்கிக் கொள்வார்கள் என்று சர்க்கார் சில சமயம் நினைத்து விடுகிறார்கள். அவ்வாறு நினைப்பது தவறு. நடைமுறையில் அப்படி நடப்பதில்லை.

நிதி மந்திரி திரு மொரார்ஜிக்கு இதெல்லாம் தெரியாதது அல்ல. அவருக்குக் கணக்குத் தெரியாது என்றும் சொல்லிவிட முடியாது. இவ்வரி முறைகளினால் மக்கள் கஷ்டப்படுவார்கள், அவர்களுடைய வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும், உண்மை வருமானம் குறையும் என்றெல்லாம் அவருக்குத் தெரியும். தெரியாவிட்டால் அவர் நிதி மந்திரியாகச் செயலாற்றத் தகுதியற்றவர் ஆவார்.

மக்களுக்குக் கஷ்டம் ஏற்படும் என்று தெரிந்தும், வரிகளைப் போட்டு, அவர்களை ஏன் கஷ்டப்படுத்த வேண்டும்?

திட்டத்தை எப்படியும் நிறைவேற்றியாகவேண்டும். திட்டத்துக்கு எவ்வளவு பணம் தேவைப்படுகிறதோ அவ்வளவையும் மக்களிடமிருந்து எந்த முறையிலாவது வசூல் செய்தே ஆகவேண்டும். அதுதான் காங்கிரஸ் கட்சியின் கொள்கை.

ஆகவே, இந்தச் சூழ்நிலையில், காங்கிரஸ் ஆட்சி முறையில், மக்களின் உண்மை முன்னேற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கைக்கு வழி இல்லை. வாழ்க்கைத் தரம் உண்மையிலேயே உயரும் என்று எதிர்பார்க்க முடியாது. தேசிய வருமானம் பெருகி விட்டது; சுபிட்சம் ஏற்பட்டு விட்டது; திட்டத்துக்குத் திட்டம் மக்கள் நிலைமை முன்னேறிக் கொண்டு வருகிறது என்று புள்ளிக் கணக்குப் போட்டு மக்களைச் சில காலத்துக்கு வேண்டுமானால் ஏமாற்றிவிடலாம். ஆனால் விலை உயர்வினால், மேன்மேலும் கஷ்டத்துக்கு உள்ளாகி வாடும் சாதாரண மக்களை நீண்ட காலத்துக்கு ஏமாற்ற முடியாது.

திட்டத்தையும், புள்ளிக் கணக்குகளையும் காட்டித் தங்களை மேலும் சில காலத்துக்குப் பதவியில் இருத்திக் கொள்ளக் காங்கிரஸ் கட்சி திட்டமிடுகிறது. ஜனநாயக முறையில் மக்களின் வோட்டை எப்படியாவது ஜாலங்கள் செய்து பெற்றுவிடலாம் என்று கோட்டை கட்டுகிறார்கள் ஆளும் கட்சியினர். ஆனால் உண்மையில் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு வரும் சாதாரண மக்கள், இந்த ஆண்டு பட்ஜெட்டைப் பார்த்த பிறகு, ஆளும் கட்சியினரை அகற்றும் ஆயுதம் தங்களிடம் இருக்கிறது என்பதை மறக்க மாட்டார்கள்.

பதவிப் பித்துப் பிடித்தவர்களுக்கு ஒரு முறையாவது பதவியை விட்டு விலகி நின்றால்தான் சாதாரண மக்களின் கஷ்டங்கள் தெரியும். அவற்றை அவர்கள் உணரும்படி மக்கள் செய்ய வேண்டும்.

பம்பாய்
3-3-61

அங்கங்கே சமயம் வாய்த்தபொழுது கடிதம் எழுதச் சொல்லியிருந்தீர்கள். அதன்படி பம்பாயிலிருந்து எழுதுகிறேன். முதலில் என்னுடைய உடல் நிலையைப் பற்றி—கவலை வேண்டாம். சரியாகவே இருக்கிறது. ஆண்டவன் அருள். இவ்விடம் வந்த விஷயம் வெற்றிகரமாகவே நடந்தது என்று சொல்லலாம். நம்முடைய நிதி நிர்வாகஸ்தர்கள் திருப்தியாக இருக்கிறார்கள். அவர்கள் மூன்று கூட்டங்கள் நடத்தினார்கள். வெகு முக்கியஸ்தர்கள் வந்து கலந்து கொண்டார்கள். என் விளக்கமும் அவர்கள் கேள்விகளுக்குச் சொல்ல வேண்டிய சமாதானங்களும் எல்லாருக்கும் திருப்தியளித்தன. இன்று 'ஃப்ராங்க் மொரேய்ஸ்' தலைமையில் ஒரு பத்திரிகைப் பணியாளர்களின் கூட்டம் நடந்தது. நல்ல கூட்டம். விருந்துக்குப் பின் மொரேய்ஸ் பேசினார். மிக அன்போடும் உணர்ச்சியோடும் பேசி வரவேற்றார். நானும் முக்கிய அம்சங்களைப் பற்றிப் பேசிக் கூட்டம் நல்ல முறையில் முடிந்தது. நேற்று இரவு 10 மணி. மாதுங்கா நப்பூ மைதானத்தில் பெருங்கூட்டம் நடந்தது. மைதானமும் சுற்றியுள்ள தெருக்களும் நிறைய, மக்கள் உற்சாகமாகக் கூடியிருந்தார்கள். மிக ஒழுங்காகவும் சிறப்பாகவும் கூட்டம் நடந்தது. நான் வழக்கம்போல் விஷயத்தைத் தெளிவாக அந்தரங்க சுத்தியுடன் விளக்கி அரைமணிதான் பேசினேன். பம்பாய்ப் பத்திரிகைகளில் சாராம்சம் பிரசுரமாகியிருக்கிறது. 'ப்ரீ பிரஸ் ஜர்னலி'ல் நன்றாக வெளியாகியிருக்கிறது. 'டைம்ஸ் ஆப் இந்தியா'விலும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'ஸிலும் வெளியாகியிருக்கிறது. புது வரிகளின் கெட்டக் கேட்டைப் பற்றி முக்கியமாகப் பேசினேன். இன்று டில்லி போகிறேன்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

சேதி தெரியுமா...?


ப(ெ)ல கைகாரர்கள்!
தேர்தல் நிதி உதவுங்கள்
காங்கிரஸ் கட்சி மட்டும் ஏன் தேர்தலுக்கு நிதி திரட்டக் கூடாது? — சி. சுப்பிரமணியம்
காங்கிரஸ்
பர்மிட்
அடக்குமுறை
பதவி
லைசென்ஸ்
கம்பெனிகள்
அங்கும்
இனவெறிக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்!
காமன் வெல்த் மகாநாடு லண்டன்
இங்கும்
இனவெறி கொண்டவர்கள் இவரோடுதான் சேரவேண்டும்
காமராஜரை ஆதரிப்பதே என் லட்சியம்
சென்னையில் சர்க்கஸ்
போலீசார் பிழைப்பு கம்பியில் நடப்பது போல்தான். — பக்தவத்சலம்

என்ன சேதி?

காங்கோ செல்ல அவசரம்

காங்கோவில் அமைதியை நிலை நாட்ட ஐ. நா. ஸ்தாபனம் விடுத்த கோரிக்கைக்கு இணங்கிக் காங்கிரஸ் அரசாங்கம் ஐயாயிரம் இந்தியத் துருப்புகளைக் காங்கோவுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. காங்கோவில் இந்தியாவுக்கு அதிக மதிப்பு இருக்கிறதென்று சொல்ல முடியாது. ஸ்ரீ ராஜேசுவர் தயாள், ஐ.நா. ஸ்தாபனப் பிரதிநிதியாகத் தேசச் சார்பின்றி நடுநிலைமை வகித்துப் பணியாற்றினாலும், அவரைப்பற்றிக் கடுமையாகச் கடுசொற்கள் வீசப்படுகின்றன. வேண்டப்படாத ஓர் இடத்தில், நமது துருப்புக்களை அ வ ச ர ம் அவசரமாக அனுப்பியுள்ள காங்கிரஸ் சர்க்காருக்குப் பாரத நாட்டின் எல்லையில் சுமார் 40,000 சதுர மைல் அந்நிய நாட்டினரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி யிருக்கிறது என்பது கவலை அளித்ததாகவே தெரியவில்லை. தங்கள் சொந்த நாட்டின் எல்லையைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியாத ஒரு நாடு, தன்னுடைய அயல் நாட்டுத் தகராறுகளை சுமுகமான முறையில் தீர்த்துக்கொள்ளத் தெரியாத ஒரு நாடு, காங்கோவில் சமாதானத்துக்குப் பாடுபட விரைகிறது என்பதை நினைத்தால் சிரிப்புத்தான் வரும். ஆனால், காங்கிரஸ் நிர்வாகத்தில் இப்படிப்பட்ட கேலிக்கு இடமான நடவடிக்கைகளைத் தானே காண முடியும்!

ஏற்றுமதியின் லட்சணம்!

ஏற்றுமதி செய்துதான் நாட்டின் தேவையான அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்க வேண்டும் என்று சர்க்கார் வற்புறுத்திப் பல பொருள்கள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால் எல்லா ஏற்றுமதிகளுமே லாபகரமாக நடப்பவை அல்ல. உதாரணத்துக்குச் சர்க்கரை ஏற்றுமதியைக் குறிப்பிடலாம். சர்க்கரை உற்பத்தி விலை நம் நாட்டில் டன்னுக்கு 700 ரூபாய். ஆனால் உலகச் சந்தையில் இதை விற்றால் கிடைப்பது ரூ. 400 மட்டுமே. இந்தக் குறைந்த விலையில் விற்றதினால் நடப்பு ஆண்டாகிய 1960 - 61ல் நாட்டுக்குக் கிடைத்த அந்நியச் செலாவணி ஒன்றரைக் கோடி ரூபாய். ஆனால் உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஒன்றே கால் கோடி. இந்த நஷ்டத்தை அவர்கள் எப்படி ஈடு செய்கிறார்கள்? உள்நாட்டில் விற்பனையாகும் சர்க்கரை விலையை உயர்த்தி வைத்து அயல் நாடுகளில் உண்டான நஷ்டத்தை மக்கள் தலையில் சுமத்தி விடுகின்றனர். சர்க்கரை உற்பத்தி அமோகமாக இருந்தும் விலை குறையாமல் இருப்பதற்கு இப்போது காரணம் தெரிகிறதல்லவா? இதுதான் நமது ஏற்றுமதியின் லட்சணம்!

மந்திரி வாதமா? மந்திரவாதமா?

சென்னைச் சட்டசபையின் பட்ஜெட் விவாதத்துக்கு நிதிமந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அளித்திருக்கும் பதிலைப் படிப்பவர்களுக்கு நாம் தமிழ் நாட்டில்தான் இருக்கிறோமா என்றே சந்தேகம் எழக்கூடும். தமிழ்நாடு அடைந்துள்ள அமோக அபிவிருத்தி பற்றி மந்திரியார் சொன்னாரோ சொன்னாரோ அப்படிச் சொன்னார். ஏதோ மந்திரம் போட்டு ராஜ்யத்தையே மாற்றி விட்டாற் போலப் பேசினார். தொழில் துறையா, விவசாயமா, வாழ்க்கைத் தரமா, தலா வருமானமா — எல்லாவற்றிலும் சென்னை முன்னணியில் நிற்கிறது என்று முழக்கி யிருக்கிறார். ஆனால் கனம் மந்திரிக்குச் சில உண்மைகளை 'ஞாபகமாக' மறந்து போகும் சாதுரியம் இருக்கிறது. வேறு சில அம்சங்களிலும் தமிழ்நாடு முன்னுக்கு நிற்பதை அவர் சௌகரியமாக மறந்து விட்டிருக்கிறார். அவை என்ன என்று அறிய, சமீபத்தில் வெளியான தேசீயப் பொருளாதார ஆராய்ச்சிக் கவுன்சிலின் அறிக்கையைப் பார்க்க வேண்டும்.

"வேலையில்லாத் திண்டாட்டமும், முழுநேர வேலையின்மையும் சென்னை ராஜ்யத்தில் வேறெங்கும் விடப் பரந்து விரிந்து கிடக்கின்றன" என்கிறது அது. மந்திரி கூறியிருப்பதற்கு மாறாக, தொழில் வளம் அப்படியொன்றும் பெருகிவிடவில்லை, கச்சாப்பொருளும் எரிபொருளும் கிடைக்காததால் போதிய அபிவிருத்தி ஏற்படவில்லை என்கிறது. மனம் குன்றிப் போகுமளவுக்கு இந்த ராஜ்யத்தின் வாழ்க்கை நிலை தாழ்ந்திருக்கிறது என்றும் கூறுகிறது. டில்லி உள் துறை அறிக்கையொன்றோ, வாழ்க்கைச் செலவு உயர்ந்து வருவதால் தமிழ் நாட்டில் திருட்டுக் குற்றங்கள் பெருகி வந்துள்ளன என்கிறது.

வேறொன்றும் மந்திரி மறந்துபோனார். தலா வருமானம் 38 சதம் உயர்ந்திருக்கிறது என்று தெரிவித்தவர், விலைவாசிகள் அதைப்போல் எத்தனை மடங்கு உயர்ந்துள்ளன என்றும் கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

கிராம மக்கள் பெருமளவில் நகரங்களுக்குக் குடி பெயர்ந்திருப்பதில் மந்திரிக்கு ஏகப் பெருமை! இது நாட்டின் தொழில் வளர்ச்சியைக் காட்டுகிறதாம்; வருகிற ஆண்டுகளில் இந்த வளர்ச்சி பெருகப் பெருகக் கிராமங்கள் மேன் மேலும் காலியாகுமாம். சரி, அப்படி



தோற்றம் : 10.9.1887 • மறைவு: 7.3.1961.

பதினைந்து நாட்களாக நினைவு இழந்து எந்தச் சமயத்திலும் மரணம் ஏற்படலாம் என்று ஒருவாறு எதிர்பார்த்திருந்தாலும், பண்டித கோவிந்த வல்லப பந்த் மரணமடைந்தார் என்ற செய்தி மக்களைத் துயரத்திலாழ்த்தி விட்டது. சுதந்திரச் சிற்பிகளின் வரிசையில் முன்னணியில் நின்றவர்; தடியடிபட்டு உடல் வலிமை இழந்தும் நெஞ்சுறுதி இழக்காதவர்; உத்தரப் பிரதேசத்தின் முடிசூடா மன்னர் என்று புகழ் பெற்றவர் பண்டித பந்த். எல்லாவற்றையும் விட சுதந்திர இந்தியாவில் ஆக்க வேலையும் நிர்வாக ஆற்றலும் மிகுதியாகத் தேவைப்பட்ட போது விடுதலைப் போரில் காட்டிய அதே தீரத்துடன் முன்வந்து சட்டசபையிலும், சட்ட சபைக்கு வெளியிலும், அரும்பணியாற்றி வெற்றி கண்டவர். மத்திய அரசாங்கத்தில் முக்கிய புருஷராகத் திகழ்ந்ததுடன் நேருஜிக்கு ஆலோசகராகவும், வலதுகை போலவும் விளங்கினார். ஊன் உடல் மறைந்தாலும் பண்டித பந்த் மக்கள் மனத்தில் நிரந்தரமாக நிலைபெற்றிருப்பார்.

யாலும் கிராம சுயாட்சி என்று வாய்ப்பந்தல் போட்டபடி பஞ்சாயத்துத் திட்டம் கொண்டு வருகிறார்களே, அது எதற்கு, யாருக்கு?

இந்தக் கிராம மக்களையெல்லாம் வேலைக்கு எடுத்துக் கொள்ளும் அளவுக்குத் தொழில் துறை முன்னேறவில்லை, அவர்கள் நகரங்களில் வேலையின்றியோ, அரைவயிற்றுக்குக் கிடைக்கும் சில்லறை வேலைகளிலோதான் திண்டாடுகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. பின்னர் இவர்கள் ஏன் கிராமங்களிலிருந்து வெளியேறுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் சர்க்காரின் விதண்டாவாத நிலச் சட்டங்கள்தாம். அந்த விதண்டாவாதத்தை வேரெறிந்த வாதத்தாலும் மறைக்க முடியாது.

பரிசுப் பத்திர உபத்திரவம்

பரிசுப் பத்திர விற்பனையில் சர்க்கார் கடைப்பிடித்து வரும் கண்ணியக் குறைவான முறையை இவ்விதழ் 'வட்ட மேஜை'யில் பிரசுரமாகியுள்ள இரண்டு கடிதங்கள் எடுத்துச் சொல்கின்றன. இதேபோல் இன்னும் பல கடிதங்கள் வந்துள்ளன.

'பல துளி பெரு வெள்ளம்' என்பதற்கிணங்க, சிறு சிறு தொகைகளாகச் சேர்த்தும் தனது பகாசுரத் திட்டங்களுக்குப் பொருளீட்ட முனைந்திருக்கிறது சர்க்கார். ஆனால் இந்தத் 'துளி'கள் ஏழை மக்கள் சிந்திய வியர்வைத் துளிகள் என்பதை உணராமல் — உணர்ந்தாலும் அப்படிக் காட்டிக் கொள்ளாமல்-இப்பத்திரங்களைப் பலாத்கார முறையில் அவர்கள் தலையில் கட்டுகிறது. ஏழை மக்களின் அறியாமையிலிருந்தே இந்தத் தொகைகளைக் கட்டாயமாகப் பிடித்துக் கொள்ளும் அக்கிரமத்தைப் பற்றியும் கேள்விப்படுகிறோம். ஆசை காட்டுவது, ஜாலம் பலிக்கா விட்டால் பலாத்காரத்தில் இறங்குவது - இதுவே காங்கிரஸ் சர்க்காரின் செயல் முறையாகி விட்டது.

திரு கோடம்ராஜு ராம ராவ்

இந்திய பத்திரிகை உலகில் திரு கே. ராம ராவை ஜாம்பவான் என்று கூறுவது முற்றிலும் பொருந்தும். இருபத்தாறு பத்திரிகைகளில் அவர் தமது ஜீவிய காலத்தில் பணியாற்றியிருக்கிறார் என்பதை நினைத்தால் பிரமிப்பு ஏற்படும். ஆந்திராவில் ஓர் ஏழைப் பள்ளி ஆசிரியர் புதல்வராகத் தோன்றி, காகிநாடாவிலும் சென்னையிலும் கல்வி பயின்று, அகில இந்திய அரங்கில் பல பத்திரிகைகளில் பணியாற்றி, அவற்றை வளர்த்ததுடன் தாமும் வளர்ந்தார். உத்தரப் பிரதேசத்தைத் தமது தாயகம் போலவே கருதி 'நேருஜியின் பத்திரிகை' என்று புகழ்பெற்ற நேஷனல் ஹெரால்ட் ஆசிரியராகக் கீர்த்தி அடைந்தவர். திரு ராமராவ் ஓடும் ரயிலிலிருந்து தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தி பத்திரிகை உலகுக்கு ஓர் அதிர்ச்சியை அளிக்கிறது.

ஒரு சிறந்த பத்திரிகையாளருக்கு இன்றியமையாத தைரியம், சளியாத உழைப்பு, வேகமாக மாறிக் கொண்டு செல்லும் சூழ்நிலையிலும் உற்சாகத்தைத் தளரவிடாத மனத்திண்மை அனைத்தையும் பெற்றுப் பிரகாசித்தவர். அவர் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் குடும்பத்தினருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



மார்ச் 16உ
முதல்
சென்னை
சாந்தி
ஸ்ரீகிருஷ்ண
ராக்ஸி
மற்றும் தென்னுடெங்கும்
BUDDHA PICTURES
புத்தா பிக்சர்ஸ்
பாவ
மன்னிப்பு
பாடல்கள் · கவிஞர் கண்ணதாசன் · இசையமைப்பு · விஸ்வநாதன் · ராமமூர்த்தி
வசனம் · M.S.சோலைமலை
திரைக்கதை
டைரக்ஷன்
A.பீம்சிங்
ஸ்டுடியோ
ஏவிஎம்
இப்படத்தின் பாடல்களை கொலம்பியா இசைத்தட்டுகளில் கேளுங்கள்



நீங்களே எங்களது
கண்ணியமான
விருந்தாளிகள்
பி. ஓ. ஏ. ஸி. காமட் ஜெட்-லைனரில் நீங்கள்
ஏறின தருணத்திலிருந்தே நீங்கள் எங்களது கண்ணிய
மான விருந்தாளியாகிவிடுகிறீர்கள். எமது இந்திய
ஹோஸ்டஸ் உங்களை ஆசார உபசாரத்துடன் வரவேற்று,
பிரயாணத்தின்போது உங்களுக்கு வேண்டிய ஒவ்வொரு
தேவைக்கும் கண்ணும் கருத்துமாக வினயமுடன் பணியாற்றுவர்.
உயர்தர ஐரோப்பிய உணவுகளிலும், முன்னறிவிப்பினால்
தயாரிக்கப்படும் பலவகை இந்திய மரக்கறி உணவுகளிலும்
உங்களுக்கு எது வேண்டுமோ அதைத் தேர்ந்தெடுத்துக்
கொள்ளலாம். ஒரே ஒரு தடவை பி. ஓ. ஏ. ஸி. காமட்டில்
செல்லுங்கள்... அதன் சொகுசான சௌகரியத்தையும்,
வினயமுடன் அளிக்கப்படும் உயர்தர சேவையையும்
நீங்கள் என்றுமே மறக்கமாட்டீர்கள்.
B·O·A·C
பி. ஓ. ஏ. ஸி. உங்களை நன்கு பேணுகிறது.
பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏயர்வேய்ஸ் கார்ப்பரேஷன், ஏயர்-இந்தியா மற்றும் குவான்டாஸ்,
இவர்கள் கூட்டுறவால் நடத்தப்படுகிறது

61

ஆருக்கு என் சொல்லுகேன்?
அன்னைமீர்காள்!
ஆர்உயிர் அளவு அன்று
இக்கூர் தண்வாடை;
கார் ஒக்கும் மேனி நம் கண்ணன்
கள்வம்
கவர்ந்த அத் தனி நெஞ்சம்
அவன் கணத்தே;
சீர்உற்ற அகில்–புகை, யாழ் நரம்பு
பஞ்சமம்; தண் பசும் சாந்து
அணைந்து.
போர் உற்ற வாடை, தண்
மல்லிகைப் பூப்
புதுமணம் முகந்து கொண்டு,
எறியும், ஆலோ!

பெண் பாவத்தில் ஆழ்வார் மனத்தை உருக்கும் வண்ணம் பாடுகிறார்.

அன்னைமீர்காள்! யாருக்கு எதனைச் சொல்லுவேன்?

இக்கூர் தண்வாடை ஆர் உயிர் அளவு அன்று – குளிர்ச்சி மிகுந்த இவ் வாடைக் காற்றின் செயலை என் உயிர் பொறுக்கவில்லை. என் உயிரின் சக்திக்கு மேல் வருத்துகிறது

ஆர் உயிர் – உயிரில் இவள் வைத்திருக்கும் பாசத்தைக் காட்டுகிறது.

கார் ஒக்கும் மேனி நம் கண்ணன் கள்வம் – மேகத்தைப் போன்ற நிறத்தை உடைய நம் கண்ணனுடைய கள்ளச் செயல்கள்

கள்வம் கவர்ந்த அத்தனி நெஞ்சம்– கண்ணனுடைய செயல்களால் கவரப் பட்ட தன் தனிமையை எடுத்துக் காட்டுகிறது.

அத்தனி நெஞ்சம் அவன் கணத்தே– கவரப்பட்ட என் நெஞ்சம் அவனிடமே இருக்கிறது.

பஞ்சமம்–ஒரு ஸ்வரம்.

போர் உற்ற வாடை – என் மேல் யுத்தம் செய்யும் இந்தக் காற்று. "காற்றானது அகில்புகை, யாழ் நரம் பின் பஞ்சம ஸ்வரம், பசும் சாந்து இவற்றையும் சேர்த்துக் கொண்டு வந்து என் மேல் வீசி யுத்தம் செய்து மல்லிகைப் புது மணத்தை முகர்ந்து கொண்டுபோகிறது. நெருப்புப் போல் எரிக்கிறது. ஐயோ!" என்கிறாள்.

விரகாக்னியை வைத்துத் தம் பக்தியைப் பாடுகிறார்.

இவ்வாறு இன்னும் சில பாசுரங்கள் ஆழ்வார் நாயகி சுபாவம் பூண்டு பாடுகிறார்.

இப்படிக் காதல் பாட்டுக்கள் பக்தி உபதேசத்துக்கு என்னத்துக்கு என்று சிலர் எண்ணலாம். ஆண்டவனுடைய நிறத்தையும் அழகையும் ஆபரணங் களையும், மனித சுபாவத்தை வைத்துத் தான் எல்லோரும் பாடுகிறார்கள் தங் கத்துக்கு மேல், தாமரைக்கு மேல், வானத்துக்கு மேல் அழகு நமக்குத் தெரியாது. அந்தப் பொருள்களை வைத்துத் திருமாலைத் தியானிக்கிறோம். எல்லா பாரத்தையும் அவன் திருவடி யில் வைத்துவிட்டு மருள் தீர்ந்து பரிசுத்தமடைந்த பக்தர்களின் பக்தியை, பரம வேகத்தை யடைந்த அவர்களின் ஆசையை எப்படி விளக் குவது? காமமிருந்த குற்றமற்ற பெண் ணின் காதலை வைத்துப் பாடுவதற்கு மேல் என்ன செய்ய முடியும்? நாம் இவ்வுலகில் கண்ட ஆனந்தம், இவ் வுலகில் பட்ட விரகதாபம் இவற்றை வைத்துத்தான் பக்தர்களுடைய தாபத்தையும் ஆசையையும் ஒருவாறு சொல்ல முடியும். இதற்கு மேல் சுகம் இல்லை, இதற்கு மேல் துக்கம் இல்லை என்று சொல்லக் கூடிய சுகமும் விரக தாபமும் நாயக நாயகி சம்பந்தத்தில் தான் நாம் இவ்வுலகத்தில் காணக் கூடியது. ஆனபடியால் அதை வைத்து நம்மாழ்வாரும் இன்னும் பல பக்த கவிஞர்களும் பாடுகிறார்கள்.

கூடலின் அலைகள் மோதுகின்ற மதில்களால் சூழப்பட்ட திருக்கண்ண புரத்தில் எழுந்தருளி யிருக்கும் திருமாலை யடைந்து அவன் திருவடிகளைக் காலையிலும் மாலையிலும் தாமரைப் பூக்களை வைத்து அருச்சித்து உங்களுடைய வினைகள் தீர்ந்து உய்யப் பெறுங்கள் என்கிறார்.

மாலை நண்ணித்தொழுது எழுமினோ,
வினைகெட,
காலைமாலை கமலமலர் இட்டு, நீர்—
வேலை மோதும் மதிள்சூழ்
திருக்கண்ணபுரத்து
ஆலின்மேல் ஆல் அமர்ந்தான்
அடி-இணைகளே.

மாலைநண்ணி—திருமாலின் திருவடிகளைக் கிட்டி.

தொழுது எழுமின்—வணங்கிக் கரை ஏறுங்கள்.

'மாலை நண்ணித் தொழுது எழுமின்'—என்பதற்கு வேறு பொருளும் கூறுவார்கள் மால் என்றால் அன்பு. மாலை — இரண்டாம் வேற்றுமை. அதாவது பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்து வணங்கி வீடு பெறுங்கள் என்பதாகப் பொருள் கூறுவார்கள்.

வினைகெட - பகவானை அடைவதற்குத் தடையாக உள்ள வினைகள் தீர்ந்து போக.

காலை மாலை – இறைவனைப் பற்றுவதற்குக் காலவரையறை இல்லை என்பது இதன் பொருள் எல்லாக் காலங்களிலும் என்றபடி.

கமல மலர் – தாமரை. எல்லா மலர்களுக்கும் உபலக்ஷணம். 'ஆலின்மேல் ஆல்' என்பதில் முதல் 'ஆல்' ஆலிலை. இரண்டாவதான 'ஆல்' அசைநிலை.

ஒரு திருத்தம்

சென்ற இதழில் 61-க்குப் பதிலாக 62 - ம் எண்ணுள்ள பக்திநெறிக் கட்டுரை பிரசுரமாகி யிருக்கிறது. இந்த இதழில் 61-ம் எண்ணுள்ள கட்டுரையைப் பிரசுரித்திருக்கிறோம்.

மெய்யன் ஆகும், விரும்பித்
தொழுவார்க்கு எல்லாம்;
பொய்யன் ஆகும், புறமே
தொழுவார்க்கு எல்லாம்;
செய்யில் வாளை உகளும்
திருக்கண்ண புரத்து
ஐயன் ஆகத்து அணைப்பார்கட்கு
அணியனே.

தன்னையே புருஷார்த்தமாகக் கொண்டு வேறு பிரயோஜனங்களைக் கருதாமல் தொழுகின்றவர்களுக்கு பகவான் கைபுகுந்து மெய்யன் ஆவான். வேறு பிரயோஜனத்தைக் கருதுகின்றவர்களுக்கு அதனைக் கொடுத்து விட்டு அகல நிற்பான்.

விரும்பும் பிரயோஜனத்தைத் தந்து விடுவான். ஆனால் அந்தப் பிரயோஜனத்தைப் பெற்றவர்கள் அதனில் பற்று வைத்து மேலும் மேலும் ஆசைகள் உண்டாகிப் பகவானை அடைய மாட்டார்கள். இதனால் அவன் அகல நிற்பான் — 'பொய்யன் ஆவான்.'

பாண்டவர்கள் கண்ணனை விரும்பினார்கள், அவர்களுக்கு மெய்யன் ஆனான். அவனால் வேறு பிரயோஜனம் அடைய விரும்பிய கௌரவர்களுக்கு விரும்பியதைக் கொடுத்துப் பொய்யன் ஆனான் என்று இந்தப் பாசுரத்துக்கு ஈட்டு விளக்கம்.

செய்யில் வாளை உகளும் — வயல்களில் வாளை மீன்கள் விளையாடிக் கொண்டிருக்கும் திவ்ய தேசம்.

ஐயன் ஆகத்து அணைப்பார்கட்கு அணியன்—தன்னை மனத்தில் வைப்பவர்களுக்குப் பகவான் அருகில் நிற்கும் கையானைப் போலிருப்பான்.

திருக்கண்ணபுரத்தில் தரிசனம் தரும் அமரர் பெருமானை இறைஞ்சுங்கள், அவன்தான் சரண்: அன்பு செலுத்தும் அன்பர்களுக்கு அவன் அன்புமயம் ஆவான்; மெய்யான உள்ளத்துடன் அவனையே விரும்பி அவனை அடையுமவர்களுக்கு அவன் மெய்யனுமான், வேறு பிரயோஜனங்களைக் கருதி இறைஞ்சும் பக்தர்களுக்கு அவன் அவற்றைக் கொடுத்துவிட்டுத் தான் அகல நின்று "பொய்ய"னுவான். (துரியோதனனுக்குப் படையும் சேனையும் கொடுத்துவிட்டுத் தான் அகல

னின்ற மாதிரி): இவ்வாறெல்லாம் பாடியபின் அவன் திருப்பாதத்தை அடைந்தவர்களுக்கு அவன் பரம பதத்தை விட்டு இறங்கி அணிய ஞவான் என்கிருர்.

அணியன் ஆகும், தனை தாள்
அடைந்தார்க்கு எல்லாம்:
பிணியும் சாரா: பிறவி
கெடுத்து ஆளும்:
மணிபொன் ஏய்ந்த மதிள் சூழ்
திருக்கண்ணபுரம்—
பணிமின் நாளும்—பரமேட்டி-
தன் பாதமே.

அணியன் — நெருங்கிய அன்பன், கலடான் கோய்கள் தன் பக்தர்களைச் சாராமல் காப்பான் மறுபிறப்பு இல்லாமல் செய்வான் மணியும் பொன்னும் பொருந்தி விளங்கும் மதிள் சூழ்ந்த திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானின் பாதங்களைத் தினமும் பணியுங்கள்.

நாளும் - தினமும்.

பரமேட்டி - பரமேஷ்டி - பரம பதத்திலிருக்கும் பெருமான்.

• • •

எனக்கு இனி என்ன குறை. அவனை வணங்கினேன் என்று மகிழ்ச்சி பரவசமாகப் பாடுகிருர்.

பாதம் நாளும் பணிய, தணியும் பிணி:
ஏதம் சாரா; எனக்கேல்
இனி என் குறை?
வேத நாவர் விரும்பும்
திருக்கண்ணபுரத்து
ஆதியானை அடைந்தார்க்கு
அல்லல் இல்லையே

ஏல்-மகிழ்ச்சியைக் காட்டும் அசை நிலை.

வேத நாவர்-வேதம் ஓதுகிறவர்கள்

பிணி தணியும் ஏதம் சாரா-முன் ஈட்டிய வினைப் பயன்களாகிய நோய்கள் தீரும், வரும் பிணிகளும் வாராமல் காக்கப்படும்

ஆதியானை அடைந்தார்க்கு அல்லல் இல்லை— தாய் மடியிலே கவலையின்றிப் படுக்கும் குழந்தை போல் ஆதியானை அடைந்தார்க்குக் கவலை இல்லை.


G.E.C.
அறிமுகப்படுத்தும்
புதிய
சிறப்பிக்கப்பட்ட
"EVEREST"
ஸீலிங் ஃபான்
ஒப்பற்ற பிரத்தியேக உரிமைபெற்ற அமைப்பு
நேர்த்தியான டிசைன்
உன்னத உழைப்பு
எப்பொழுதும் நம்பகமாக இயங்கக்கூடியது
விலை மிகவும்
குறைக்கப்பட்டிருக்கிறது
ரிஜிஸ்டர்ட் டிசைன்
பேடென்ட் நம்பர் 55248
ஆப் 22-8-1955
தி ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி
ஆப் இந்தியா பிரைவேட் லிட்.,
தி ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி லிட். ஆப்
இங்கிலாந்தின் பிரதிநிதி
GEC/P/172

அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்

சோமு

16. ஒளி நிலயம்


இந்த உலகில் தங்கள் பெயரை மங்காமல் மறையாமல் நிலைநாட்டுகிற மனிதர்களிலே இரண்டு வகை உண்டு. அறங்கள் செய்து, மாபெரும் கலை விந்தைகளை ஆக்கி, மக்களுடைய உள்ளங்களைக் கவர்ந்து, அதன் மூலம் நற்புகழோடு நிரந்தரமாக வாழ்கிற சான்றோர்கள் ஒரு வகை. தீமைகள் இழைத்து, மக்களைத் துன்புறுத்தி, நல்லவர்களுக்கு இன்னல்கள் விளைத்து, அவற்றின் மூலம் தங்கள் பெயரை நிலைநிறுத்தி விட்ட கொடிய கயவர்கள் இன்னொரு வகை! இந்த இரண்டு வகையான மனிதர்களுமே உலக சரித்திரத்தின் முக்கிய பாத்திரங்களாக அமைகிறார்கள். இந்த இருவகையான மன இயல்புகளையுமே கதைகளும் கவிதைகளும் வர்ணிக்கின்றன. கலைகள் சித்திரிக்கின்றன! மதாம் துஸாட் என்ற அம்மையார் உருவாக்கி நிறுத்தியுள்ள பொம்மைகளிலும் இந்த இரண்டு விதமான மனிதர்களையும் பார்க்கிறோம்.

ப்ரான்ஸ் தேசத்திலிருந்து இங்கிலாந்துக்கு வந்த புதிதில், துஸாட் அம்மையார் ஒவ்வொரு ஊராகச் சென்று தமது பொம்மைக் கொலுவை நடத்திவந்தபோது, கேம்ப்ரிட்ஜ் நகரத்திலே 1718ம் ஆண்டில் ஒரு முக்கிய நிகழ்ச்சி நடந்தது. பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் அம்மையாரோடு பலமாகச் சண்டைக்கு வந்து விட்டார்! உத்தமர்களின் உருவங்களோடு போக்கிரிகளின் உருவங்களும் அணிசேர்ந்து அருகருகாக அமர்ந்திருப்பது சரியில்லை என்று கோபித்தார் அந்தப் பேராசிரியர்! துஸாட் அம்மையார் பேராசிரியரின் வார்த்தையை ஒப்புக் கொண்டார். தீயவர்களின் பொம்மைகளையெல்லாம் தனியாகப் பிரித்து அவற்றை ஒரு தனியறையிலேயே வரிசைப்படுத்தி வைத்தார்! வியாபார நுட்பம் தெரிந்த பெண்மணியானதால், இந்தத் தனியறைக்குள்ளே சென்று பார்ப்பதற்குத் தனியான கட்டணம் அதிகப்படியாகக் கொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்தார்! கூட்டம் ''எக்கச்சக்கமாக''க் கூடியது!

''மதாம் துஸாட்ஸ்'' என்ற பெயரில் லண்டன் நகரத்திலே நிலையான ஒரு கட்டடம் அமைத்து அங்கே இந்த மெழுகுப் பொம்மைகளைக் குடியேற்றியபோது, 'தனியான அறை' (The separate room) என்ற பெயரில் விசாலமான ஓர் இடம் கட்டி, அங்கே கொடியவர்களின் காட்சியைக் கொலு வைத்தார் துஸாட் அம்மையார்! இதைப் பார்த்து விட்டுப் ''பஞ்ச்'' என்ற உலகப் புகழ் பெற்ற பத்திரிகையிலே ஒரு பெரிய எழுத்தாளர் விமரிசனம் எழுதினார். அந்த மதிப்புரையில், இந்தத் தனியான அறைக்குப் ''பயங்கர அறை'' (The Chamber of Horrors) என்றே பெயர் சூட்டினார் அந்த எழுத்தாளர்! துஸாட் அம்மையார் மிகவும் சாமர்த்தியமாக இந்தப் பெயரையே கொண்டு அந்த அறைக்குப் புதிதாக நாமகரணம் செய்து விட்டார்! புதிய பெயர் நிலைத்து விட்டது!

மேனாட்டுச் சரித்திரத்தில் பஞ்சமாபாதகங்கள் செய்த தீய மக்கள், கடுந் தண்டனைகளுக்குள்ளான பயங்கரக் குற்றவாளிகள், கொலையாளிகள், மந்திரவாதிகள் ஆகியோரின் உருவப் பொம்மைகளும், அக் காலத்துச் சிறைகளிலே சித்திரவதை நடந்த காட்சிகளும், குற்றவாளிகள் பெற்ற கொடிய கொடிய தண்டனைகளும், பார்த்தாலே அச்சம் தருகிற பெரிய ஆயுதங்களும், பூதங்களின் காட்சிகளுமாக இந்தப் பயங்கர அறையிலே மெழுகுக் கொலு நிற்கிறது! உள்ளே சென்ற சில விநாடிகளுக்குள் எப்பொழுது வெளியே வருவோம் என்று தோன்றியது எனக்கும் நண்பர்களுக்கும்! காட்சியின் பயங்கரத்திலேயே எங்களுக்கு மூச்சு முட்டியது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். ஒருவருக்கு முன்னே ஒருவராக நாங்கள் போட்டி போட்டுக் கொண்டு வெளியே வந்தோம். வரும் போதே அந்த அறையைப் பற்றிய ஒரு ரசமான செய்தியையும் ஒரு சிறு குறிப்பிலே படித்துத் தெரிந்து கொண்டேன்.

1850ம் ஆண்டில் டிக்கென்ஸ் ஆசிரியர் நடத்தி வந்த "Household Words" என்ற பத்திரிகையில் இளம் எழுத்தாளர்களுக்கு ஒரு யோசனை பிரசுரமாயிற்றாம்! மதாம் துஸாட்ஸ் என்ற பொம்மை நிலயத்துக்குச் சென்று, அங்கே யுள்ள ''பயங்கர அறை''யிலே நுழைந்து, ஓர் இரவு முழுதும் இளம் எழுத்தாளர் ஒருவர் தனியாக இருந்து பார்க்க வேண்டும் என்றும், அந்த அநுபவத்தைக் கட்டுரையாக அவர் எழுதி யனுப்பலாம் என்றும் ஒரு குறிப்பு வெளியாயிற்று. வேடிக்கைக் குறிப்புத்தான்! என்றாலும் இதன் விளைவாக லண்டன் நகரத்தில் ஒரு பெரிய வதந்தி உலாவ ஆரம்பித்தது! பொம்மை நிலயத்தின் பயங்கர அறைக்குள்ளே இரவு முழுதும் தனியாக ஒருவர் இருந்து விட்டால், அவருக்குப் பெரிய வெகுமதி அளிக்கப் படும் என்று யாரோ கதை கட்டி விட்டு



விம்லி ஜுவல்லர்ஸ் அதிபர் திரு எச். வி. ஷா அவர்களின் குமாரர்கள் திரு ஜஸ்வந்த்லாலும் திரு தேவேந்திர குமாரும் முறையே சௌ. நயன்ஸ்குமாரியையும், சௌ. ஜோதிபாலாவையும் பம்பாயில் மணம் புரிந்து கொண்டார்கள். இத் திருமணத்தை யொட்டி சென்னை அபட்ஸ்பரியில் பிப்ரவரி 18ந் தேதி நடைபெற்ற வரவேற்புக்குச் சென்னை நகரப் பிரமுகர்களும், வர்த்தகர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

விட்டார்கள்! இதனால் என்ன நேர்ந்தது என்று நினைக்கிறீர்கள்? நாளது தேதி வரையில் வீர சூரர்கள் பலர் விண்ணப்பங்கள் அனுப்பி வருகிறார்களாம்! இந்த விண்ணப்பக் கடிதங்களிலே மிகவும் அருமையான ஒரு கடிதம் ஒரு பெண்மணியிடமிருந்து சில ஆண்டுகளுக்குமுன்பு வந்ததாம். அதில், அவளுடைய காதலன் அடிக்கடி அவளிடம் வந்து தனது வீரப் பிரதாபங்களைக் கொட்டி அளக்கிறான் என்றும், உண்மையில் அவன் ஒரு கோழை என்றும், எப்படியும் அவனுடைய வீரத்தைப் பரிசோதித்துப் பார்க்க விரும்புவதால் ஒரு நாள் இரவு இந்தப் பயங்கர அறையிலே அவன் ஏகாந்தமாகத் தங்குவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்றும் மிகவும் பணிவோடு கேட்டு எழுதியிருந்தாளாம் அந்தப் பெண்! பழைய பழங் கதைகளிலே கதாநாயகியை மணப்பதற்காகக் கதாநாயகன் பெரிய வில்லை வளைத்தான், அம்பைக் குறி பார்த்து எய்தான் என்றெல்லாம் எத்தனையோ விதமான சுயம்வர முறைகளைப் பற்றிப் படிக்கிறோம். துஸாட்ஸின் பயங்கர அறையுங் கூட இப்படி ஒரு விசித்திரச் சுயம்வர மண்டபமாக இந்த இருபதாம் நூற்றாண்டில் விளங்க முடியும் என்றால் உலக அதிசயங்களுக்கு முடிவு ஏது?

அதிசயபுரியாகிய பொம்மைக் கொலு நிலையத்திலிருந்து, சொப்பனபுரியாகிய ஒளி நிலையத்துக்குள் சென்றோம்.

'ப்ளானெடேரியம்' என்ற ஒளிக் கூடத்துக்குள்ளே நுழைந்ததும் அதன் அமைதி எங்களைக் கவர்ந்தது. வட்டவடிவமான மாபெரும் கூண்டுக்குக் கீழே வட்ட வடிவத்திலே பல இருக்கைகள் போடப்பட்டிருந்தன. அவற்றிலே போய் உட்கார்ந்தோம்.

சில நிமிஷங்களில் பகல் மறைந்தது. லண்டன் நகரத்தின் ஆட்ட பாட்டங்களிலிருந்து விடுபட்டு ஒரே விநாடியில் சாந்தமயமான வானுலக யாத்திரை தொடங்கியது! பட்டப் பகலைப் போன்று ஒரே வெளிச்சமாக எரிந்து கொண்டிருந்த விளக்குகள் எல்லாம் அணைந்தன! இன்பமான பல வாத்தியங்களிலிருந்து இனிமையான சங்கீதம் எழுந்து இணைந்து ஒலித்தது. எங்கள் தலைக்கு மேலே ஒரு மாபெரும் வெண் குடை போன்று கவிந்து நின்ற வெள்ளை நிறக் கூண்டிலே இப்பொழுது நீலம் படர்ந்தது. கட்டடத்திலிருந்து வெளியே வந்து பல மைல்கள் நடந்து சென்று, ஒரு பெரிய மலையின் உச்சியிலே போய் ஏறி நின்று, வானத்தை அண்ணாந்து பார்ப்பது போன்ற ஒரு பிரமை உண்டாயிற்று. இதோ இசை மெதுவாக நலிந்து மறைகிறது. தெளிவான ஒரு குரல், அறிவிப்பாளரின் நிதானமான பேச்சு கேட்கிறது!


அதோ விடிவெள்ளி முளைக்கிறது. கிழக்கு வானம் வெண்மை படர்கிறது. சூரியன் உதித்து விடுகிறான். வானப் பாதையிலே அவனைப் பின் தொடர்ந்து செல்கிறோம். மத்தி வானம் ஆகிறது. உச்சியில் நின்று அனலைக் கொட்டுகிறான் ஆதவன்! மீண்டும் அவனுடைய யாத்திரையைப் பின் தொடருகிறோம். வானம் மேற்கே செந்நிறம் கொள்கிறது. மஞ்சள் வெய்யிலும் செவ்வெயிலும் வானக் கோடியிலே புரளுகின்றன. இதோ சூரியன் அஸ்தமிக்கிறான்.

எங்கள் கண்முன்தெரிந்த பரிசுத்தமான நீல வானத்தில் ஆயிரம் ஆயிரம் நட்சத்திரங்கள் மின்னின! பூரணமான வட்ட வடிவத்திலே சந்திரன் உதயமாகுன். அதோ ஐந்து நட்சத்திரங்கள் அங்குமிங்கும் உலவுகின்றன!

தெளிவும் நிதானமும் கொண்ட அறிவிப்பாளரின் குரல் நன்றாகக் கேட்கிறது. வான உலகத்தின் அதிசயங்களைச் சிறுவர்களும் புரிந்து கொள்ளும்படி எளிமையோடு விளக்கம் செய்கிறார் அவர். அவர் பேசும்போதே ஒரு நீண்ட அம்புக்குறி வானப் படலத்திலே தோன்றி வந்து ஒவ்வொரு முக்கிய நட்சத்திரத்தையும் நமக்கு அடையாளம் காட்டுகிறது. அதோ அங்குமிங்கும் உலவுகிற ஐந்து நட்சத்திரங்களும் உண்மையில் நட்சத்திரங்கள் இல்லை, ஐந்து முக்கிய கிரகங்களே என்கிறார் அறிவிப்பாளர்! செந்நிறமான செவ்வாய், வளையங்களோடு கூடிய வியாழன், வட்டங்களோடு தோன்றுகிற சனி இவற்றோடு சின்னஞ் சிறிய புதனும் அழகுச் சுடரான சுக்கிரனும் வானத்திலே நம்முன் நின்று காட்சி தருகிறார்கள்!

மூவாயிரத்து நூறு மைல் குறுக்களவுள்ள புதன், ஏழாயிரத்து எழுநூறுள்ள சுக்கிரன், நாலாயிரத்து இருநூறுள்ள செவ்வாய், 88700 மைல் குறுக்களவுள்ள வியாழன், 74200 கொண்ட சனி என்றெல்லாம் கூறுகிற அறிவிப்பாளர் சூரியனும் ஒரு நட்சத்திரமே, நட்சத்திரங்கள் எல்லாம் உண்மையில் சூரியர்களே என்று தொடருகிறார்!

பூமி என்பது தன்னைத்தான் சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிற ஒரு பம்பரம்; சந்திரன் பூமியைச் சுற்றுகிறது! சூரிய சந்திரர்களும் கிரகங்களும் பூமியும் எல்லாமாகச் சேர்ந்த இந்தப் பிரபஞ்சத்தின் சுழற்சியிலே வாரங்களும், மாதங்களும், ஆண்டுகளும் உருளுகின்றன! பூமியின் சுழற்



ப்ளானெடேரியமும், அதனருகே மதாம் துஸாட்ஸ் நிலையமும்.
படத்திலே தெரியும் கூண்டுக்குள்ளேதான் வானக் காட்சிகள் நடைபெறுகின்றன.

வெளியிலே, கிழக்கில் உதயமும் மேற்கில் மறைவும் நம் கண்முன் தோன்றுகின்றன என்றெல்லாம் அறிவிப்பாளரின் குரல் சுழலும்போது,

" சாட்டி நிற்கும் அண்டமெலாம்
சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆட்டு விக்கும் "

ஆண்டவனை எண்ணிக் கரம் குவிக்கிறோம். இதோ வானத்தில் " ஆகாச கங்கை " (The Milky Way) தெரிகிறது. காலக் கிரமப்படி வந்து தோன்றுகிற நட்சத்திரக் கூட்டங்களை அம்புக் குறி அங்கங்கே சென்று தொட்டுக் காட்டுகிறது! அறிவிப்பாளர் விளக்கம் சொல்லுகிறார்! அதோ நட்சத்திரங்கள் மறைய ஆரம்பிக்கின்றன. கிழக்கே வெள்ளி முளைக்கிறது. உதய காலத்தின் ஒளி மாயங்கள் மறுபடியும் வானத்திலே தெரிகின்றன. இதோ மீண்டும் சூரியன் உதிக்கிறான்!

இருபத்து நான்கு மணி நேரம், ஒரு பகலும் ஓர் இரவும், கழிந்துவிட்டது! இந்த ஒரு நாளில் வானம் என்ற வர்ண அரங்கிலே ஒளி வேடம் தாங்கிய நட்சத்திர நடிகர்களும், கிரக நாயகர்களும், இரவின் ராணியான வெண்ணிலவு என்னும் நாயகியும் காவியமான நாடகத்தை நம் கண்முன் நடத்திக் காட்டிவிட்டார்கள். எத்தனை கோடி ஆண்டுகளாக நடந்து வந்துள்ள நித்திய நாடகம் இது! யுக யுகாந்தரமான இந்த எல்லையற்ற கதையை, காலமும் இடமும் அறிய ஒண்ணாத இந்தப் பெரு நடிப்பை ஒளி நிலையத்தின் கூண்டுக்குள்ளே நாற்பது நிமிஷ நேரத்துக்குள் நம் முன் படத்திக் காட்டுகிறது விஞ்ஞானம்!

ஒளி அதிசயமான இந்த அற்புதக் காட்சியைக் கண்டுத் திரையிலே விசி வழங்குகிற மாபெரும் இயந்திரத்தைச் செய்தவர்கள் ஜெர்மானியர்கள். இந்த ஒளி நிலையத்தின் கீழே, பூமிக்கு அடியிலே, பாதாள ரயில் ஓடுகிறது! ஒளி நிலையத்தைச் சுற்றி லண்டனின் ஓட்ட சாட்டமான தெரு வீதிகள்! பூமியின் ஆட்டமோ அதிர்ச்சியோ, தெரு வீதிகளின் சத்தமோ இரைச்சலோ எதுவும் நிலையத்துக்குள்ளே வந்து விடாதபடி, ஒளி யமைப்பை இத்தனை நுட்பமாக நிர்ணயம் செய்து, அறுபத்து ஏழு அடி குறுக்களவு கொண்ட அரிய கூண்டை எதிரொலியே ஏற்படாதவாறு கட்டி முடித்தவர் ஜார்ஜ் வாட் (George Watt) என்ற கட்டட நிபுணர்! இந்த ஒளி நாடகத்தை வகுத்து நடத்தி வருகிற வான ஆராய்ச்சி நிபுணர்களின் தலைவர் டாக்டர் ஹென்றி சார்ள்ஸ் கிங் (Dr. Henry Charles King) என்னும் ஆங்கிலேயர்! இந்த அற்புதமான ஒளி நிலையம் இருக்கும் இடம் 'பேகர் வீதி' வட்டாரம்! நட்சத்திரங்களும், கிரகங்களும் இயந்திரத்துக்குள்ளேயிருந்து உதித்து வந்து பிறகு இயந்திரத்திலேயே அஸ்தமித்தும் விடுகின்றன இந்தப் 'ப்ளானெடேரி'யக் காட்சிச் சாலையிலே!

லண்டன் நகரத்தில் கலை நிலையங்களும், காட்சிச் சாலைகளும் ஏராளமாக இருக்கின்றன. என்றாலும் நவீன அறிவுக்கு ஒரு நிலையமாகவும், மனிதனுடைய சாதனைக்கு ஒரு சிறந்த சான்றாகவும், கல்வி புகட்டுவதற்கு ஒரு நேர்த்தியான சாதனமாகவும், இந்த ஒளி நிலையம் அமைந்திருப்பதால், இங்கிலாந்துக்குச் செல்லும் மக்களிலே பலரும் இந்தக் காட்சியைக் காணத் தவறுவதில்லை. மற்றப்படி நிஜமான நீல வானத்தையும் நிஜ சூரியனுடைய நிஜ வெய்யிலையும் ஆங்கிலேயர்கள் எப்படி அனுபவிக்கிறார்கள் என்பதை நேரிலே காண வேண்டும் என்றால், ப்ரைட்டன் என்ற அழகு மிகுந்த கடற்கரைப் பட்டினத்துக்குச் செல்ல வேண்டும்! (தொடரும்)



வெறி!

தங்கன்

"ஊரெல்லாம் குழப்பமும் அதுவுமாக இருக்கு. அம்பாறையில் இருந்து சிங்களக் காலிப் பயல்களெல்லாம் நம்ம ஊர்ப் பக்கமும் படையெடுத்து வருகிறாங்களாம். இங்கு வந்து என்ன அட்டூழியம் செய்யப் போகிறாங்களோ, தெரியாது...நாம் வெறுங் கையோடு சும்மா இருக்கிறது அவ்வளவு நல்லாயில்லே..."

"ஆமாம்......" என்று பதில் கூறினானே தவிர, 'திக் திக்'கென அடித்துக் கொண்டது நடேசனின் உள்ளம்.

"தம்பீ! உன் முகத்துக்காகத்தான் சொல்லுறம். கடைக்காரச் சில்வாவுக்கு எப்பவோ சொல்லிப் போட்டம். இங்க இருந்தால் ஆபத்தென்று எங்கயோ ஓடிப் போயிட்டான் புத்திசாலித்தனமாக. நீ சிங்களக் குட்டியைக் கலியாணம் பண்ணிக்கொண்டு வந்து ஊருக்கு நடுவில் இருக்கிறாய். விசயம் மோசமாவதற்கு முன்னால் ஆக வேண்டியதைப் பார்த்துக்க. பிறகு எங்களைக் கோவிக்கப் புண்ணியமில்லே."

"சீ! நீங்களும் மனிதர்களா?" என்று கேட்டு அவர்கள் முகத்திலே காறி உமிழ வேண்டும் போலிருந்தது நடேசனுக்கு. ஆயினும், "பாருங்க அண்ணை, இப்படிச் சிங்களவரும் தமிழரும் அடிச்சுக் கொண்டு சாகிறதுக்காக ரெண்டு சாதியும் கண்ணீர் விடுகிற காலம் சீக்கிரம் வரும். அவங்கதான் வெறித்தனமாக நடக்கிறார்கள் என்றால், நாமுமா அப்படி நடக்கிறது? நம்மோடு நன்றாகத் தின்று பழகினது களுக்கா தீமை நினைக்கிறது?"

"நாமும் நீயும் வேணுமென்றால் அதை ஒப்புக் கொள்ளலாம், தம்பி. ஆனால் ஊர் சனம் கேக்காதே...? சிங்களவர்கள், பொலநறுவை, மகோயா, அம்பாறை மற்ற மற்ற இடங்களில் எல்லாம் தமிழ் ஆட்களுடைய உடைமைகளையும் பறிச்சி...ஆண், பெண், பிள்ளைகள் என்று பாராமல் சித்திரவதை செய்து இரத்த ஆறு ஓடச் செய்திருக்காங்களாம். அதை யெல்லாம் கேட்டு, ஊர்ச்சனத்தின் நெஞ்சம் கொதிக்கும் பொழுது நாம் எப்படி? ஏதோ நம்ம பொடியனுக்சே என்று விசயத்தைச் சொல்லிப் போட்டம். ஆபத்து வந்தால் நாங்கள் பொறுப்பில்லே. எங்களைக் குறை நினைக்கவும் கூடாது" என்று ஒருவித வெறியுடன் பேசித் தீர்த்தான் நற்குணம்.

"......" நடேசனுக்கு எதுவுமே பேச முடியவில்லை.

"நாங்க வாறம்." நற்குணம், தியாகு, மற்றும் அவர்கள் கோஷ்டியினர் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

மட்டக்களப்புப் பட்டணத்தை அடுத்த ஒரு கிராமந்தான் கல்லாறு. அந்தக் கிராமத்தில் ரௌடித்தனத்துக்குப் பெயர் எடுத்தது நற்குணம் கோஷ்டி. இப்படி ஊர் மக்களே கொதித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் கேட்க வேண்டுமா, என்ன?

நடேசன் கொழும்பில் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்த சமயந்தான் மாலினிக்கும் அவனுக்கும் திருமணம் நடந்தது. அவன் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்தபோது விடாப்பிடியாக அவனுடன் வந்து விட்டாள் மாலினி. அவள் சிங்களத்தி என்பது உண்மைதான். ஆனால், அவன் மனைவியாயிற்றே! 'கொழும்பில் இருக்கும் அவள் பெற்றோர் வீட்டுக்கு அவளை அனுப்பி விடலாம். ஆனால், நாட்டிலே இரத்த ஆறு ஓடும் இந்த வேளையில் எப்படி அனுப்புவது? ஐயோ, கடவுளே! அவர்கள் வந்து சொல்லி விட்டுப் போனதை அவள் அறிந்தால் அவள் பட்டு உள்ளம் எப்படி வேதனைப்படும்; பதை பதைக்கும்! ஆண்டவா!' அவன் இதயம் வேதனையால் வெம்பியது, புழுங்கியது.

மெதுவாக எழுந்து அறையினுள் சென்றான்.

புத்தபிரானின் திருவுருவப் படம்—நிஷ்டையில் ஆழ்ந்திருப்பதுபோல. அதன் முன்னே தேங்காயெண்ணெய்த் தீபம் எரிந்து கொண்டிருந்தது. கூப்பிய கரங்களுடன், கண்களை மூடியபடி உருக்கி வார்த்த சிலையென நின்றிருந்தாள் மாலினி. அப்படியே பின்புற

மாக நின்று இமைக்காது அந்தக் காட்சியைப் பார்த்தான் நடேசன். காலையில்தான் அவன் புத்தபிரானை வணங்குவது வழக்கம். இப்போது? இந்தப் பிற்பகல் வேளையில்...?

மேலே பார்வையைத் தூக்கி, கருணையினால் உலகை வென்ற அன்பு வள்ளலின் சாந்தம் தவழும் முகத்தைப் பார்த்தான். வெறிக்க வெறிக்க உற்றுப் பார்த்தான். அந்த இமைக்காத பார்வையில் அந்த உருவம் பெரிது பெரிதாகி அந்த அறை முழுதுமே வியாபித்தது. அவன் கண்களிலே பனித்திரை படர்ந்தது. 'பலத்தினால் வெல்பவனுக்குப் பகைவர் அதிகரிப்பர், அன்பினால் வெல்பவனுக்குப் பகைவரே இரார் என்றாயே, அன்பு வழி போதித்தாயே, இங்கே உன் போதனைகள் செத்து மடிந்து மண்ணோடு மண்ணாகின்றனவே! இந்த நாட்டில் இனவெறிப் பிரச்னைக்கு மருந்தே கிடையாதா, பெருமானே!'—அவன் சூடான கண்ணீர்த்துளிகள் தரையிலே விழுந்து தெறித்தன. அவைகளிலே அந்தத் தீபத்தின் மங்கலான ஒளி பிரதிபலித்தது.

''மாலினி!'' மெதுவாக அழைத்தான்.

''......'' கண்களிலே பிதுந்து வடிந்த நீர்த்துளிகளைத் துடைத்து விட்டுக் கொண்டு திரும்பினாள் அவள்.

''என்ன ஒருமாதிரியாக இருக்கிறாய்..?''

அவள் அதரங்கள் துடித்தன. சட்டென்று அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

''என்ன மாலினி...?''

பொங்கி வந்த அழுகையை அடக்க முடியாமல் அழுது - விம்மிக்கொண்டே — அவன் பரந்த மார்பிலே முகத்தைப் புதைத்தாள்.

''என்னிடம் சொல்லலாகாதா, மாலினி?'' மெதுவாக அவள் கார் குழலைத் தடவி விட்டான். அவள் வெம்மையான கண்ணீர், அவன் மார்பிலே இலேசான வெப்பத்தை உண்டாக்கியது.

விக்கலுக்கிடையே பேச ஆரம்பித்தாள் அவள். ''அடுத்த வீட்டுக் கமலா அக்கா, வதனி அக்கா ஒருவரும் என்னிடம் இன்றைக்குச் சரியாகப் பேசவே யில்லே. எப்பவும் எவ்வளவு அன்பாகப் பேசுறவங்க...இப்ப என்னை அதிசயப் பிறவியைப் பார்க்கிறது போலப் பார்க்கிறாங்க. என்னைப்பற்றி அவங்க எல்லாரும் ஏதோ கூடிக் கூடிப் பேசிக்கிறாங்க. என்னத்துக்கு இப்படி என்னை...?''

''இதுக்குத்தானா அழுகிறாய்...? அதெல்லாம் ஒன்றுமில்லே. எல்லாம் மனப்பிராந்தி.''

''பொலநறுவை, மினேரியா பகுதிகளில் தமிழ்ப் பெண்களெல்லாம் மானத்துக்குப் பயந்து கிணத்தில் குதிச்சுச் செத்துப்போறாங்களாம்... என்னையும் அப்படிச் செய்யச் சொல்லிச் சொல்லாமல் சொல்லுறாங்களா?'' என்றாள் அழாக்குறையாக.

''மாலினி!'' அவள் வாயைப் பொத்தினான் நடேசன். ''இதென்ன பேச்சு? அப்படி யெல்லாம் ஒன்றும் நடந்து விடாது...''

'' என்னிடம் ஏன் மறைக்கிறீங்க? அந்த ஆட்கள் வந்து உங்களோடு பேசிக் கொண்டிருந்ததை யெல்லாம் என் இந்தக் காதுகளாலேயே கேட்டேன்.''

நடேசனின் தலையில் ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு அடிப்பது போலிருந்தது. இதயம் சுக்கலாகச் சிதறுவது போன்ற பிரமை. இந்த விஷயம் யாருக்குத் தெரியக் கூடாதென்று நினைத்தானோ, அவளுக்குத் தெரிந்து விட்டது. சிறிது நேரம் எதுவும் பேசாமல் திகைத்து நின்றான். பின் சமாளித்துக் கொண்டு, ''பயப்படாதே! எதற்கும் நான் இருக்கிறேன்'' என்றான். வெள்ளம் தலைக்கு மேல் போன பிறகு அவளிடம் மறைத்துப் பயன் என்ன?

புத்தர் படத்தின் முன்னிருந்த தீபத்தின் திரி தீய்ந்து நெடி வீசியது. அவள் தேங்காய் எண்ணெயை எடுத்து ஊற்றி மறுபடியும் ஏற்றினாள். அவன் இதயத்தைத் துடைத்துக் கொண்டு வந்த நீண்ட மூச்சை எதிர்க்கத் திராணியற்ற அத் தீபம் மீண்டும் அணைந்தது.


• • •

சிந்தித்துச் சிந்தித்து அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. எவ்வளவு நேரம் சிலையாக உட்கார்ந்திருந்தானோ தெரியாது. அவன் கால்கள் அவனை அறியாமல் வாவிக்கரையோரமாக இழுத்துக் கொண்டு சென்றன.

வற்றாது வளைந்துச் செல்லும் மட்டக்களப்பு வாவி தெளிந்து, பரந்து கிடந்தது. கரையோரமாகப் பச்சைப் பசேலென்ற வயல் நிலங்கள். ஆங்காங்கே வயலுக்கு நீர் பாய்ச்சுவதற்காகக் கட்டப்பட்ட முக்காலிகள் தலை நீட்டின. அவைகள் தவிரப் பரண்கள் வேறு...

வயல் நிலத்தை அடுத்துப் பசும் தென்னை மரக் கூட்டங்கள். வாவியிலே தவழ்ந்து வந்த குழந்தைப் பருவ வாடைக் காற்று தென்னோலைகளிடையே புகுந்து, மழலைமொழி பேசியது. அதைக் கேட்டு இன்புற்றவை போலத் தென்னை மரங்களும், மருத மரங்களும் தலையசைத்தன.

மட்டக்களப்புக்கு 'மீன் பாடும் தேன் நாடு' என்ற பெருமையை ஏற்படுத்திக்





பிறந்தகத்திலிருந்து கணவன் வீடு திரும்பிய பெண், டாக்ஸிக்குச் சில்லறை கொடுத்து விட்டுக் கூறினாள்:

''இந்தாப்பா டிரைவர்! ஒரு அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணு. உள்ளே போய் என் மாமியாரைக் கிளப்பி அனுப்புகிறேன்; ஸ்டேஷனுக்கு ஏற்றிக் கொண்டு போகலாம்!''

கொடுத்தது அந்த வாவி தான். ஆழமான இடங்கள் பாடும் மீன்களுக்கு உறைவிடமாகின்றன. கரையோரங்களோ கழனிகளுக்கு நீர் பாய்ச்ச உதவுகின்றன. இதனாலேதான் இங்கு ஆற்றிலே மீன் பாட, நாட்டிலே தேன் பாய்கிறது என்கிறார்கள். ஆனால் இன்று அப்படிக் கூற முடியாது. இங்கு விளையும் அத்தனையும் பிற இடங்களுக்கு ஏற்றுமதியாக...இங்கு பற்றாக்குறையல்லவா காணப்படுகிறது?

இவை எதையும் கவனிக்கக் கூடிய நிலையில் நடேசன் இல்லை. எங்கோ சூனிய வெளியில் பார்வையைச் செலுத்திக் கொண்டு நடந்தான்.

கழுவடித் துறையில் பெரும் ஆரவாரமாகக் கேட்டது. என்னவாக இருக்கும்? அவன் மேலிட வேகமாக நடந்தான். வழியில் அழுக்குத் துணியுடனும், தண்ணீர்ப் பானை, கேட்டிக்கம்பு சகிதம் மாட்டுக்காரப் பையன் சிவலிங்கம் வந்தான்.

''என்னடா தம்பி சத்தம் அது...?''

''அண்ணே, போய்ப் பாரண்ணே! சிங்கள வங்க செய்திருக்கிற அநியாயத்தை!''

'திக்'கென்றது நடேசனுக்கு.

கழுவடித் துறையில்—

ஒரே கூட்டம்; சந்தடி. அங்கே குழுமியிருந்தவர்கள் அனைவரும் அகதிகள்—இறந்தவர்கள் போக மீதிப்பேர்கள் அம்பாறை, இக்கினியாகலை, வளக்கடை முதலிய குடியேற்றப் பகுதிகளிலிருந்து சிங்கள இன வெறியர்களுக்கு அஞ்சி, கால் நடையாகப் பல மைல்கள் நடந்து, அன்னமலை, சேனைக் குடியிருப்பு முதலிய இடங்களுக்கு வந்தார்களாம். பின் தோணிக்காரர்கள் அக்கரையில் இருந்து இக்கரைக்கு ஏற்றி வந்தார்களாம். இன்னும் ஏற்றி வந்து கொண்டுதான் இருக்கிறார்கள். மட்டக்களப்பை யொட்டிய மண்ணை மிதித்ததும் அவர்களுக்குக் கொஞ்சம் தெம்பு ஏற்பட்டுவிட்டது.

அகதிகளை உபசரிப்பதில் பலர் முனைந்திருந்தனர்; ஓடி ஆடி உற்சாகமாக உழைத்தனர், சிலர் வெறும் கட்டளைகள் மட்டும் பிறப்பித்துக்கொண்டு நாட்டாண்மை புரிந்தனர்.

அந்தக் கழுமரத்தின் கீழ் அகதிகளுக்காக ஒரு பெரிய அண்டாவில் பெரிய அவியல் நடந்து கொண்டிருந்தது. ஒரு புறத்தில் பழந் துணிகள் குவிந்து கிடந்தன. அத்தனையும் அந்த ஊர் மக்கள் கொடுத்தவை.

இத்தனை சந்தடியையும் கிழித்துக்கொண்டு அவ்வப்போது அகதிகள் எழுப்பிய வேதனை ஓலங்கள் கிளம்பிக் கொண்டிருந்தன.

''ஐயோ, என் பிள்ளை எங்கே போச்சு?'' என்று அழுதாள் ஒரு பெண்.

''புருசனையும் பிள்ளைகளையும் பலி கொடுத்த நான் என்னத்துக்கு இன்னும் உயிரோடு இருக்க வேணும்?'' என்று புலம்பினாள் இன்னொரு பெண்.

இப் பரிதாபக் காட்சிகளையெல்லாம் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்ற நடேசனின் விழிக்கோணங்களிலே நீர் முட்டியது. கண்களிலே படர்ந்த பனிப் படலத்தினூடே அங்கிருப்பவர்களெல்லாம் கண்ணீர் வெள்ளத்தில் அமிழ்ந்திருப்பது போல் அவனுக்குப் பட்டது. அவன் உடம்பிலே ஒருவித விறு விறுப்பு ஏறியது; துடிதுடிப்பு ஏற்பட்டது. தலை விறைப்பேறியது. ஒருவித மயக்க நிலை அவனுக்கு. வெறி பிடித்தவன் போல் வந்த வழியே வேகமாக ஓடினான்.

மாலையாகியும், விளக்கேற்ற மறந்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் மாலினி. விடெங்கும் இருள் படர்ந்து பயங்கரம் நிலவியது. அவள் முகத்தை உற்று நோக்கினான் நடேசன். அவள் பட்டுக் கன்னங்களிலே கண்ணீர் காய்ந்து உப்புப் பொரிந்திருந்தது.

''LDTலினி! நீ அறைக்குள்ளே படுத்துக்கோ. நான் மண்டபத்துக்குள்ளே படுக்கிறேன்...!''

''நீங்களும்....அறைக்குள்ளே...''


''நான் சொல்வதைக் கேளு, மாலினி! நீ உள்ளே போய்ப் படுத்துக்க!''

''...ம்...சரி...!''

அவள் அறையை உள்ளே தாழ்ப்பாள் போட்டுக்கொள்ளும் சத்தம் அவன் நெஞ்சிலே இனம் தெரியாத இன்னலை உண்டாக்கியது.

படுக்கையிலே வெறுமனே புரண்டு புரண்டு படுத்தான். சாமத்துக் கோழி கூவியும் நித்திராதேவி அவனை அணைத்துக் கொள்ளத் தயங்கினாள். தொலைவில் அகதிகள் கூட்டத்திலிருந்து எழுந்த பரிதாப ஓலம் இரவின் அமைதியைப் பிளந்து கொண்டு பெரிதாகக் கேட்டது. அவன் நெஞ்சத்தை ஏதோ ஒரு பெரிய ஆயுதம் கொண்டு பிளப்பதுபோலிருந்தது. அவன் தன் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

இன வெறியும், இதய பாசமும் ஒன்றையொன்று மேவிப் போரிட்டுக்கொண்டிருந்தன. தமிழச்சி என்பதற்காகத் தாம் மணந்து கொண்ட பெண்மணிகளைச் சிங்களவர்கள் கொன்றார்கள் என்று அவன் கேள்விப்பட்டிருந்தான். அதேபோல் மாலினியை... அவன் மனத்திலே வெறி மூண்டது. சாதாரணமான வெறியல்ல, மனிதனை வெகு



டாக்டர் கே. எம். நித்தியானந்தம் எம்.பி.பி. எஸ்.க்கும், செல்வி: ராமதிலகத்திற்கும் 19-2-61-ம் தேதி கொடுமுடியில் நடைபெற்ற திருமணத்திற்கு நேரில் வந்திருந்தும், பரிசுகள் வழங்கியும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும் மணமக்களுக்கு ஆசி கூறிய அனைவருக்கும் எங்கள் நன்றி.

கொடுமுடி
9-8-61

கே. எம். மருடபதி
கே. ஆர். பாலசுப்பிரமணியம்

மிக லாபகரமான ஒரு முதலீடு

சிறு விதை பெரிய விருக்ஷமாக வளருவதுபோல மாதாமாதம் நீங்கள் செலுத்தும் சிறிய தொகை 46 மாதங்களுக்குப் பிறகு கணிசமான அளவிற்குப் பெருகி வருகிறது.



திட்டத்தின் முக்கியாம்சங்கள்!

* பிரதி மாதமும் குறைந்தது ரூ. 10 முதல் 500 வரை ஒரே சீராக தொகை செலுத்தி வரலாம்
* அவசர சந்தர்ப்பங்களில் ரிகரிங் டிபாசிட்டின் பேரில் கடன் வாங்க வசதி உண்டு
* ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் கூட்டாக ஆரம்பிக்கலாம். மைனர்களின் பெயர்களிலும் கணக்கு ஆரம்பிக்கலாம்
* மாதத் தவணைகளை கிரமப்படி செலுத்துவதற்கான நிரந்தர ஏற்பாடுகளும் ஒப்புக் கொள்ளப்படும்.
* இந்தியாவிலுள்ள பாங்கின் 137 கிளைகளில் எந்த ஒரு கிளையிலும் தவணைத் தொகைகளை உபரிக் கட்டணமின்றிச் செலுத்தலாம்

இந்தியன் பாங்க் லிட்.

தலைமை ஆபீஸ் : முதல் லைன் பீச், சென்னை-1

ரிகரிங் டிபாசிட் திட்டத்தின் மூலம் லாபம் அடையுங்கள்

அருகாமையில் உள்ள பாங்கின் கிளைகளில் விசாரித்து முழு விவரமறியவும்.

G. S. சுந்தரம்
காரியதரிசி

இலகுவாக — வேகமாக— லாகவமாகப் பற்றிக் கொள்ளும் இரத்த வெறி — இன வெறி !

இந்த வெறி பிடித்து விட்டால் மனிதன் பேயாகவே மாறி விடுகிறான். அந்த வெறி பிடிப்பதற்குமுன், தளிர் விட்டுப் படர்ந்திருந்த அன்பை யெல்லாம் சிந்தித்துப் பார்க்க அவனுக்கு நேரமிருப்பதில்லை!

இடீரென்று யாரோ மண்டபக் கதவைத் தட்டினார்கள். இந்த வேளையில்...? ஒருகணம் இதயத் துடிப்பு நின்று விட்டது.

''யாரது...?''

'' நாங்கள்தான் தம்பி ...கொஞ்சம் கதவைத் திற...'' வெளியிலிருந்து பதில் வந்தது.

'தம்பி' என்ற சாந்தமான பதத்தைக் கேட்டதும் அவனுக்குத் தைரியம் பிறந்தது. மெதுவாக எழுந்து சென்று கதவைத் திறந்தான்.



நந்தமிழ் நாட்டு அமரகவி பாரதியின் நெருங்கிய நண்பரும், அவரது நூல்களை முதன் முதலில் அச்சிட்டு வெளியிடும் பெரும் பணி புரிந்தவரும், காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின் பற்றித் தாய்மொழிக்கும் தமிழ்நிக்கும் அளவிறந்த சேவை செய்தவருமான பண்டித ஹரிஹர சர்மாவின் எழுபத்தோராவது பிறந்த நாளைச் சென்ற மாதம் 5–ந் தேதி சென்னை மக்கள் மந்திரி திரு பக்தவத்ஸலம் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடினர். தங்கள் அன்பைக் காட்ட அவருக்குச் சிறு நிதியும் சேர்த்து வழங்கினர்.

நற்குணமும் ஆட்களும்தான் வந்திருந்தார்கள். நடேசனுக்குப் பேயறைந்தது போலாகி விட்டது. எப்படியோ தைரியத்தை வரவழைத்து. '' சீ...! நீங்களென்று தெரிந்திருந்தால் கதவைத் திறந்தே இருக்க மாட்டேன். நீங்கள் எதற்கு வந்திருக்கிங்களென்று தெரியும். ஒரு பொம்புளையைக் கொலே செய்வதனுல் உங்களுக்கு என்ன லாபம்?'' என்றான்.

'' தம்பீ !'' என்றான் நற்குணம்.

'' தம்...பி...! உங்களுக்கு யார் சொந்தம்? நீங்களெல்லாம் மிருகங்கள் !''

'' தம்பி! நீ நம்ம பொடியன். அவசரப் படாதே. நமக்குள்ளே என்னத்துக்கு வேற்றுமையும் பகையும்? நீ கட்டியிருக்கிறது சிங்களத்தியானாலும் உன் மனைவி ! நம்ம இனத்தோடு சேர்ந்து விட்டது. ஏதோ, நம்ம சனங்களைச் சிங்கள வெறியர்கள் வெட்டிக் கொல்றாங்க என்பதற்காக, ஆத்திரத்தில் இன்றைக்குப் பின்னேரம் வந்து பேசி விட்டோம். அதை மறந்திரு. அந்தப் பெண்ணைக் காப்பாற்றவேண்டியது நம்ம கடமை. இல்லாவிட்டால் அந்த வெறியனுங்களுக்கும் நமக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்.''

நடேசனுல் எதுவும் பேச முடியவில்லை. சிலையாக நின்றான்.

'' பயப்படாதே, தம்பி !'' மாணிக்கம் தொடர்ந்தான். '' இந்தக் கல்லாத்துக் கிராமத்தில் எந்தச் சண்டியன் இந்த வளவுக்குள்ளே கால் வைக்கிறான் பார்ப்போம். நாங்கள் போய்விட்டு வருகிறோம், தம்பி. ஏதாவது உதவி தேவையென்றால் ஒரு குரல் கொடு. போதும்!'' நற்குணமும் தோழர்களும் நடந்தார்கள். நடேசனின் விழிகளிலே படர்ந்த பனித்திரையினூடே அவர்கள் நடந்து செல்வது மங்கலாகத் தெரிந்தது.

திறந்திருந்த கதவின் வழியே உள்ளே வீசிய குளிர் காற்றினுல் அவன் மண்டபத்தில் ஏற்றி வைத்த விளக்கு மடிந்து போகத் துடிதுடித்தது. குளிர் காற்றை நெஞ்சு நிறைய அடைத்துக் கொண்டு, மண்டபக் கதவைச் சாத்தி விட்டான். மெதுவாக அறைக் கதவை நெருங்கித் தட்டினுன். பதிலில்லை.

மீண்டும் தட்டினுன், பதிலில்லை.

நீண்ட நேரத்துக்குப் பின் கதவு திறந்து கொண்டது. மாலினி அழுதாள். ஏதோ பேசினுள். வார்த்தைகள் தெளிவாக வெளி வரவில்லை. தள்ளாடும் நிலையிலே காணப் பட்டாள் அவள்.

நடேசனுக்கு எதுவும் புரியவில்லை. தற்செயலாக அவன் பார்வை அவள் படுத்திருந்த பாயின் அருகில் சென்றது. எந்தப் புத்த பிரானை அவள் வணங்கினுளோ, அவர், கண்ணுடி உடைந்து, தரையிலே கிடந்தார். பக்கத்திலே கண்ணுடித் துண்டுகள் பொடியாக்கப்பட்டிருந்தன. அவனுக்குப் புரிந்து விட்டது. ஆனுல், பேச்சுத்தான் வெளிவரவில்லை. தொண்டை அடைத்துக் கொண்டது.

'' நான் அவசரப்பட்டு விட்டேன். அந்த ஆட்கள் கதவு தட்டின உடனேயே ஆயத்தமாக வைத்திருந்த கண்ணுடித் தூளைத் தின்று விட்டேன்.'' மேலும் பேச ஆசைப்பட்டாள். முடியவில்லை. விழ இருந்தவளைத் தாங்கிக் கொண்டான் அவன்.

'' மாலினி !'' என்று அலறினுன். அமைதியைக் கிழித்துக் கொண்டு அந்தப் பிரதேசம் முழுதும் கேட்டது அவன் குரல்.

அவள் இருமித் துப்பினுள். அவ்வளவும் இரத்தம். விழிகள் எங்கோ செருகின.

அவனது சூடான கண்ணீர்த் துளிகள் அவள் ஏற்படுத்திய இரத்தக் குளத்திலே விழுந்து சிதைந்தன.

அரசியல் மேதை ஆட்லி

சில தினங்களுக்கு முன் பாரதம் வந்த பிரிட்டிஷ் ராணியை மக்கள் பேரார்வத்துடன் வரவேற்றார்கள் அல்லவா? வரலாறு கண்டறியாத அந்த வரவேற்புக்குக் காரண புருஷராகிய ஆங்கிலப் பிரமுகர் சென்ற 3, 4, 5 தேதிகளில் சென்னைக்கு விஜயம் செய்து, சிந்தனையைத் தூண்டிவிடும் பல உரைகள் ஆற்றினார். அவர்தான் திரு ஆட்லி பிரபு. இங்கிலாந்தின் தொழிற்கட்சித் தலைவர். பிரிட்டனின் முன்னாள் பிரதமர். இவற்றைவிட முக்கியமாக இந்தியாவுக்குச் சுதந்திரம் அளித்தவர். 'நாங்கள் உங்கள் அரசிக்கு அமோக நல்வரவு அளித்ததற்குக் காரணம் நீங்கள் எங்களுடைய சுதந்திரத்துக்கு வழி வகுத்ததுதான்' என்று ஸ்ரீ வி. பி. ஆட்லியை வரவேற்றுப் பேசியிருக்கிறாரே!

சோஷலிஸவாதிதான் இந்த ஆட்லி. ஆனால் சோஷலிஸத்தில் எத்தனையோ நிறுசுகள் உண்டு. ஆட்லியின் சோஷலிஸத்தில், தேசிய மயமாக்குவதென்பது சமூக நலனென்ற லட்சியத்துக்கு இட்டுச் செல்லும் ஒரு மார்க்கந்தான். அது ஒரு மார்க்கம் என்றுதான் அவர் சொன்னாரே ஒழிய ஓரே மார்க்கம் என்று சொல்லவில்லை.

இனி ஜனநாயகம் பற்றிய அவரது பல்வேறு கருத்துக்களையும் தெரிந்து கொள்வோம். 'அதிகார வர்க்கத்தைக் கொண்டும், கம்யூனிஸ வழியிலும் சோஷலிஸத் திட்டங்களை நிறைவேற்றினால் ஜனநாயக சுதந்திரம் அழிந்து போகக்கூடும்; தனி நபர் உரிமைகள் குறைந்து போகும்' என்கிறார் ஆட்லி. கம்யூனிஸ வழி என்பது பலாத்கார முறைதான்.

எல்லாவற்றையும்விட முக்கியமாக அவர் மக்களுக்குக் கூறுவது, அம்மக்களுடைய கடமையைப் பற்றித்தான். மக்கள் தம் காரியத்தைப் பிறர் பொறுப்பில் விட்டு விடுவதுதான் இன்றையப் பேராபத்து என்கிறார். ஜனநாயக அமைப்பின் கீழுள்ள மக்கள் இவ்வாறு செய்வது ஏகாதிபத்தியத்தையும், சர்வாதிகாரத்தையும் எதிர்கொண்டு வரவேற்பதேயாகும் என்று எச்சரிக்கிறார்.

'ஜனநாயக சுதந்திரம்' 'ஜனநாயக அமைப்பு' என்றெல்லாம் சொன்னவர், அந்த ஜனநாயகம் என்பதைப் பற்றிப் பரவசமாகப் பேசுகிறார். அது வெறும் அரசியல் முறை மட்டுமல்ல; வாழ்வுமுறையேயாகும் என்கிறார். ஜனநாயகம் நடைபெறுகிறதா என்று குகப்பிப்பதற்கான முதல் சான்றுப் பொருள் எதிர்க்கட்சித் தலைவர்தான் என்று சட்டப் பரிபாலனையில் ஒரே போடாகப் போடுகிறார். 'எதிர்க்கட்சி, விவாதங்கள், மனம் விட்ட பேச்சு இவைதான் ஜனநாயகத்தின் சாரமே' என்கிறார். அதென்னவோ அதிகாரத்திலுள்ள சிலருக்கு மட்டும் எதிர்க்கட்சி என்றாலே வேம்பாகக் கசக்கிறது!

சீன ஆக்கிரமிப்புக்கு எதிராக அண்டை நாடுகளுடன் கூட்டு ராணுவ உடன்படிக்கை செய்து கொள்ளும் விஷயத்திலும் நம் ராஜாஜி அவர்களின் கருத்தையே பிரதிபலிக்கிறார் ஆட்லி பிரபு. நாளுவித மக்களையும் பொதுவான ஓர் ஆபத்து, ஒன்றுசேர்த்து வைப்பதை அடிக்கடி கண்டு வருகிறோம் என்கிறார். இந்த 'அடிக்கடி' நிகழ்ச்சியைக் காண்பதற்கில்லாத துர்ப்பாக்கியம் நமக்குண்டு என்பது தெரிந்த விஷயம்தான்.

ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றிப் பேசுகையில், அவை அதன் உள்நாட்டு நிலைகளைத்தான் பிரதிபலிக்கின்றன என்று கூறிய ஆட்லி, 'தனது மக்கள் விஷயத்தில் சுதந்திரத்தையும், சகிப்பு மனப்பான்மையையும், சமூக நீதியையும் கடைப்பிடிக்காத ஒரு நாடு இதர நாடுகளுக்கு இவ்வுரிமைகளை வலியுறுத்த முடியுமென எதிர்பார்ப்பதற்கில்லை' என்று சொன்னார். ஆக, அயல்நாடுகளில் மதிப்பு நிலைக்க வேண்டுமானால் ஒரு சர்க்கார் என்ன செய்யவேண்டும் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்கிறோம்.

நம் நாட்டுக்கு நன்மை பயக்கும் விஷயங்களை மட்டும் ஆட்லி கூறவில்லை. அவரது கவனத்தை இந்த உலகம் முழுவதுமே கவர்ந்திருக்கிறது. உலக சர்க்கார், உலக நீதிமன்றம், உலகக் காவல் படை இவையே அவரது ஈடுபாடுகள். ராஜாஜி போல, உலக சமாதானமும், படைபலக் குறைப்புமே அவரது கவலையெல்லாம். தனி மனிதனை ஆயுதங்கள் வைத்துக் கொள்வதிலிருந்து சர்க்கார் தடுப்பது போல், இந்தச் சர்க்கார்களையும் தனிப்பட்ட ஆயுதங்களைக் குவிப்பதிலிருந்து தடுக்க ஓர் உலக ஸ்தாபனம் வேண்டும் என்கிறார். ஆனால் அது ஏற்படாத வரையில் கூட்டு ராணுவ ஒப்பந்தங்கள் அவசியமே என்பதையும் அவர் உணர்ந்திருக்கிறார். தாம் விரும்பும் சர்வதேச ஐக்கியத்தைச் செயலாக்கப் பாரதம் எவ்வளவோ உதவ முடியுமென்று நம்புகிறார் ஆட்லி. அவரது நம்பிக்கை நிறைவேறும் என்று நாமும் நம்புவோமாக.

ராஜாஜி ஹாலில் மார்ச் 4-ந்தேதி டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் தலைமையில் அரசியல் மேதை ஆட்லி அரிய உரை நிகழ்த்தினார்.



இப்பொழுது

உங்கள் அன்புக்குரிய ஆரோக்கியத்தை அளிக்கும்

விட்டமின்கள்

அடங்கிய டானிக் வாட்டர்பரீஸ் காம்பவுண்டை வாங்குங்கள் !

இப்பொழுது நீங்கள் இந்தியாவின் அன்புக்குரிய ஆரோக்கியத்தை அளிக்கும் விட்டமின்கள் மிகுந்த டானிக்கை வாங்கலாம். வாட்டர்பரீஸ் காம்பவுண்டின் புகழ்பெற்ற கலவையில் ஆரோக்கியத்துடனும், பலத்துடனும் இருப்பதற்குத் தேவையான அதிகப்படியான விட்டமின்கள் சேர்த்திருக்கின்றன. வாட்டர்பரீஸ் விட்டமின் காம்பவுண்ட் உங்களுக்கு அநேக விதங்களில் பயனளிக்கிறது. இது இரத்தத்தை பரிசுத்தமாக்குகிறது. இழந்த சக்தியையும், வீர்யத்தையும் மீண்டும் அளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி தசைகளுக்கு சமனூட்டுகிறது. சரீரத்தில் வியாதிகளை எதிர்க்கும் சக்தியை உண்டு பண்ணுகிறது. நோயுற்ற குணமடைந்தபின் உடம்பு சீக்கிரமாகத் தேற மிகவும் உதவுகிறது.




வாட்டர்பரீஸ்

விட்டமின்

காம்பவுண்ட்

உங்களுக்கு போஷாக்கை அளிக்கிறது.

இருமலையும், ஜலதோஷத்தையும் போக்குவதற்கு கிரியோ ஸோட் மற்றும் குவாயகால் சேர்க்கப்பட்ட சிவப்பு லேபிளுடைய வாட்டர்பரீஸ் காம்பவுண்டும் கிடைக்கிறது.




விரும்பி வேண்டும் பானம்
வின்ஸெண்ட்ஸ்
ஐம்பது ஆண்டுகளுக்கு அதிகமாக
தென்னிந்தியாவின்
அபிமான பானமாக விளங்குவது.
★ சோடா வாட்டர்
★ ஆரஞ்சு
★ லெமனேட்
★ வின்கோ-கோலா
★ மாங்கோ-ஸிப்
★ வின்ஸெண்ட் ஸ்பெஷல்
வின்ஸெண்ட் & கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்
திருச்சிராப்பள்ளி - சென்னை - சேலம்
கும்பகோணம் - காரைக்குடி
திருநெல்வேலி - மதுரை
கோயமுத்தூர்
VINCENT'S
ORANGE
EP


சேவையில்
சிறந்ததென
நிரூபிக்கப்
பட்டது
Exide
ஸில்வர்
எக்ஸைட்
ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி ஆப் இந்தியா
பிரைவேட் லிமிடெட் - - சென்னை 2
கோயமுத்தூர், பெங்களூர், செகந்திராபாத்

— கொழும்பு, மார்ச், 6வ.

தமிழ் அரசுக் கட்சியின் பலத்தையும் கட்டுப்பாட்டையும் மக்களிடையில் அந்தக் கட்சிக்கு இருந்து வரும் செல்வாக்கையும் சந்தேகித்து வந்தவர்கள் தலைகுனியும் வண்ணம் தமிழ் அரசுக் கட்சி நடத்தி வரும் உரிமைப் போராட்டமும் தன்னலத் தியாகமும் இப்பொழுது வெற்றிப் பாதையில் திரும்பிக் கொண்டிருக்கின்றன. சென்ற மாதம் 20ம் தேதி முதல் அவர்கள் நடத்தி வரும் சத்தியாக்கிரகப் போராட்டம், கடுமையாக ஆத்திரமூட்டப்படுகையில் கூட இவ்வளவு அமைதியாகவும் சாத்வீகமாகவும் கட்டுப்பாடாகவும் நடைபெறுமென்று அரசாங்கமோ அல்லது வேறு எவருமோ எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். சத்தியாக்கிரகத்தை அடக்கியொடுக்க அரசாங்கம் போலீஸையும் ராணுவத்தையும் கடற்படையையும் ஏவியது. சத்தியாக்கிரகிகள் மிலேச்சத்தனமாகத் தாக்கிப் படுகாயமிழைக்கப்பட்டார்கள். அவர்களைக் காலை வாரித் தரையோடு நெடுந்தூரம் இழுத்துச் சென்று நையப் புடைத்தார்கள். துப்பாக்கியின் பிற் புறத்தினால் விலா எலும்பை நொறுக்கினார்கள். இவ்வளவுக்கும் மேலாக நாற்பத்தெட்டு மணி நேரம் வரை சத்தியாக்கிரகிகளுக்கு உணவும் தண்ணீரும் செல்ல முடியாதபடி தடுத்துப் பட்டினி போட்டுப் பணிய வைக்க முயன்றார்கள். கச்சேரியைச் சுற்றி மறியல் செய்த தொண்டர்களைக் கடற் படையினர் சூழ்ந்து நின்று அவர்களுக்கும் வெளியுலகுக்கும் தொடர்பில்லாமல் முற்றாகத் துண்டித்துக் குடி தண்ணீர் கூடச் செல்ல முடியாதபடி தடுத்தனர். அப்படியிருந்தும் சத்தியாக்கிரகிகள் சளைக்கவில்லை; சோர்வடையவும் இல்லை. துன்பம் ஏற்படும் போதுதான் வைராக்கியமும் பலப்படுகிறதென்பதை சத்தியாக்கிரகிகளிடம் காணக் கூடியதாக இருந்தது.



சத்தியாக்கிரகிகள் எவ்விதமான நியாயமுமின்றிக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டார்களென்பதைத் தமிழரசுக் கட்சியை எதிர்க்கும் அரசியல் கட்சிகள் கூட ஏகமனதாக அபிப்பிராயம் தெரிவித்துக் கடுமையாகக் கண்டித்திருக்கையில் அரசாங்கம் தனது செய்கை முற்றிலும் நியாயமானதுதானென்று சாதித்திருக்கிறது. அத்துடனில்லாமல் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையென்றும் அதற்காகவே ராணுவமும் கடற்படையும் தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டதாயும் கூறிய பிரதம மந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயகா தமிழ் மாகாணங்களாகிய வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கமே தற்சமயம் இல்லையென்றும் அரசாங்கத்தை இயங்க முடியாதபடி தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகிகள் தடுத்திருப்பதாயும் தெரிவித்திருக்கிறார். இவ்விரு மாகாணங்களிலும் அரசாங்கம் செயல்படவில்லையென்பதை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருப்பதே தமிழரசுக் கட்சியின் முதலாவது வெற்றியாகும். உண்மையில் சென்ற இரண்டு வார காலமாக இந்த இரண்டு மாகாணங்களிலும் அரசாங்க நடவடிக்கை எல்லாம் ஸ்தம்பித்துப் போயிருக்கின்றன. எந்த அரசாங்கக் காரியாலயமும் செயல்படவில்லை. கச்சேரிகளின் முன்பும் மற்ற அரசாங்கக் காரியாலயங்களின் முன்பும் தொண்டர்கள் ஜன சமுத்திரம் போல் அலை அலையாகத் திரண்டு நிற்பதினால் அரசாங்க ஊழியர்களில் எவரும் வேலைக்குச் செல்லவில்லையென்பதோடு அவர்களும் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்டிருக்கிறார்கள்.

இலங்கைக்கு விஜயம் செய்த முன்னாள் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. ஆட்லி, விரும்பாத சட்டதிட்டங்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமை ஜனநாயக ஆட்சியில் மக்களுக்கு உண்டு என்றும், அவ்விதக் கிளர்ச்சியின் காரணமாகப் பிரிட்டனிலேயே பார்லிமெண்டு சபை இயற்றிய சில சட்டங்கள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன வென்றும், பெரும்பான்மையுடன் பார்லிமெண்டில் ஒரு சட்டத்தை அரசாங்கம் இயற்றிவிட்டதென்ற ஒரே காரணத்துக்காக அதை மக்கள் எதிர்க்கக் கூடாதென்பதில்லையென்றும் சொன்னார். அவர் தமிழ் அரசுக் கட்சியின் சத்தியாக்கிரகத்தைப் பற்றி நேரடியாகக் குறிப்பிடாவிட்டாலும் தனிச் சிங்களச் சட்டம் தமிழ் பேசும் மக்கள் அனைவரது வருங்காலத்தையும் வாழும் உரிமையையும் பாதிப்பதாக அந்த மக்கள் கருதுவதினால் அதை எதிர்த்து சத்தியாக்கிரகம் போன்ற ஆர்ப்பாட்டம் நடத்தும் உரிமை அவர்களுக்கு உண்டு என்றும் அந்த ஆர்ப்பாட்டம் சட்ட விரோதமானதென்றோ அல்லது தேசத்துரோகமென்றோ சொல்ல முடியாதென்றும் மறைமுகமாக இடித்துக் காட்டினார். இதையே நியமனப் பிரதிநிதியான திரு. எஸ். தொண்டைமானும் பார்லிமெண்டு சபையில் காரசாரமான வார்த்தைகளில் முழக்கினார். "தமிழர் பிரச்னைகளைத் தீர்க்க நியாயமான முறைகளைக் கையாளப்போகிறீர்களா? அல்லது 'காங்கோ' முறையைத்தான் கையாளப்போகிறீர்களா?" என்று அரசாங்கத்தை அவர் வினவினார்.

கிழக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள சகல தமிழ் பேசும் மக்கள் நினைவிலும் அறப் போரைத் தவிர வேறு எதிலுமோ இப்பொழுது சிந்தனையில்லை. யாழ்ப்பாண வர்த்தகர்கள் பெருந் தொகையைப் போராட்ட நிதிக்கு அளித்ததோடு அவர்களும் சிப்பந்திகளோடு சத்தியாக்கிரகத்தில் குதித்திருக்கிறார்கள். அலை அலையாக, ஆயிரம் ஆயிரமாக அவர்கள் சத்தியாக்கிரகத்துக்குத் திரளாக வந்து கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் கடும் வெய்யிலில் உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்வதைப் பார்க்கும்போது, தமிழ் மக்கள் உள்ளங்களில் தலைவர் திரு செல்வநாயகம் ஏற்படுத்தியுள்ள ஆச்சரியமான மொழிப்பற்றை அவருடைய கொடிய அரசியல் எதிரிகள்கூடப் பாராட்டாமல் இருக்க முடியாது. பல்லாயிரக்கணக்கானவர்கள் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டும்கூடப் பலாத்காரம் சிறிதும் தலைவிடாமல் மிகமிக அமைதியாகவும் சாத்வீகமாகவும் நடப்பது அதிசயத்திலும் அதிசயம்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் முஸ்லீம் மக்களின் ஜனத்தொகை அதிகம். அவர்களை மற்றத் தமிழர்களிடமிருந்து பிரித்து வைக்க இதுவரை முயற்சி நடைபெற்று வந்தது. இந்த முயற்சிகளையும் சத்தியாக்கிரகம் இறுதியாகத் தவிடுபொடியாக்கி விட்டது. இரண்டு தினங்களுக்கு முன்னால் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லீம்கள் பிரும்மாண்டமான ஜன சமுத்திரத்தைப் போலத் திரண்டு வந்து சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லீம் பெரு மக்கள் ஒரு நிதி திரட்டி இரு நகர சபை முஸ்லீம் பிரதிநிதிகள் தலைமையில் ஊர்வலமாக வந்து திரு செல்வநாயகத்திடம் அளித்ததுடன் சத்தியாக்கிரகத்திலும் பங்கு கொண்டார்கள்.

நாட்டில் இவ்வளவு அமளி துமளி நடந்து கொண்டிருக்கையில் பிரதம மந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயகா காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் மகாநாட்டுக்காக லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார். லண்டனுக்குப் புறப்படும் சமயத்தில் அவர் சத்தியாக்கிரகம் வாபஸாகி நாட்டில் அமைதி நிலவும் வரை எவ்விதமான பேச்சு வார்த்தைகளுக்கும் இடமில்லை யென்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்.

பத்து லட்சம் இந்திய வம்சாவளியினர்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாகிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எட்டு மணி நேர விவாதத்துக்குப் பின்னர் வெளியிட்டிருக்கும் ஒரு தீர்மானத்தில் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கும் துருப்புகள் உடனே வாபஸ் பெறப்பட வேண்டுமென்றும், சமரசப் பேச்சுகளை அரசாங்கம் உடனே தொடங்கவேண்டுமென்றும், அடக்கு முறைகளினால் மக்களின் நியாயமான விருப்பங்களை ஒருபோதும் அடக்கிவிட முடியாதென்றும் தெரிவித்திருக்கிறது. — ரஜனி

அகரமாங்குடியில் கும்பாபிஷேகம்

காவிரியின் கிளைநதியாம் கவினுறுவெட் டாற்றின்நல் வடபால்மேவும்
பாவிரிக்கும் பாஷ்யகர்த்தா பயனுறவே தோற்றுவித்த பதியாம் நல்ல
அகரமாங் குடி வாழ அலைமகளும் நிலமகளும் அலைந்தே நிற்க
வாகனமாம் கருடனிலே வரதராச பெருமாள் வணங்கி வாழ்வோம்.

அகண்டாகார சச்சிதானந்த ஸ்வயம்ஜோதி சொரூபமாயுள்ள பரமேசுவரன் திருவருளை முன்னிட்டு, நீர்வளம் நிலவளம் பொருந்திப் பெருமையுற்ற புண்ணிய பூமியாகிய சோழ நாட்டில், காவிரி நதியின் கிளை நதியான வெட்டாற்றங்கரையிலுள்ள ஆதபுரி என்னும் அகரமாங்குடி கிராமத்தில் விளங்குபவரும், சதுர் வேதபாஷ்ய கர்த்தா வாகிய ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டு சைவ சமயத்தை நிலைநாட்டிய ஸ்ரீ ஹரதத்த சிவாசார்யாள் சிஷ்யர் சுப்பிரமணிய சிவனாரால் ஆராதிக்கப்பட்டு, சகல புருஷார்த்தங்களையும், நித்யானந்தத்தையும் அளிக்கும், ஸ்ரீ ஆனந்த வல்லி அம்பாள் சமேத ஸ்ரீ கைலாசநாதருடைய திருக்கோயிலும், பக்தர்கள் கோரும் வரத்தைக் கொடுத்துச் சகல செல்வங்களையும் அளிக்கும் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ வரதராஜஸ்வாமி திருக்கோயிலும் மற்றுப் பரிவார மூர்த்திகளின் திருக்கோயில்களும் உள்ளூர் வெளியூர் தனவான்களால் மனமுவந்து அளிக்கப்பட்ட நன்கொடையால் ஜீர்ணோத்தாரணம் செய்விக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாள் சமேத ஸ்ரீ கைலாசநாத ஸ்வாமிக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் ஸ்ரீதேவி பூதேவி ஸமேத ஸ்ரீ வரதராஜஸ்வாமிக்கும் மகா சாஸ்தாவுக்கும் நாளது சார்வரி வருஷம் பங்குனி மாதம் 21உ (3–4–61) ஸோம வாரம் சுவாதி நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் விருஷப லக்கினத்தில் உதயாதி 11 நாழிகைக்குள் காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அனுக்ரஹத்தை முன்னிட்டு, அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடப்பதால் பக்தர்கள் அனைவரும் வந்திருந்து இயன்ற உதவியளித்துக் கும்பாபிஷேகக் காட்சியைக் கண்டு இறைவன் அருளைப் பெற்று உய்யுமாறு கோருகிறோம். இப்படிக்கு,

மகாஜனங்கள். திருப்பணி கும்பாபிஷேகக் கமிட்டியார்

குறிப்பு: நன்கொடை அனுப்பவேண்டிய விலாசம்: ஸ்ரீ என். சாமபசிவம், பொருளாளர், காரியதரிசி, திருப்பணிக் கமிட்டி, அகரமாங்குடி P. O. தஞ்சை ஜில்லா.


ராஜா ஸ்னோ
ராஜா
ஹேர் ஆயில்
USE RAJA KASTURI SOAP FOR LUXURY BATH RAJA BAR SOAP FOR EASY WASHING
MFRS: MANYAM & CO., BANGALORE-20.


உங்களுக்கும் பிலிப்ஸிற்கும் உள்ள இணைப்பு
பிலிப்ஸ் நோவோஸோனிக் ரேடியோ



19 - நீலநாகமறவர்

இளங்குமரனும், நண்பர்களும் மருவூர்ப்பாக்கத்தின் ஒருபுறத்தே அமைந்திருந்த நீலநாக மறவரின் படைக்கலச்சாலைக்குள் நுழைந்தபோது அங்கே ஆரவாரமும், சுறுசுறுப்பும் நிறைந்த சூழ்நிலை நிலவியது பல இளைஞர்கள் தனித்தனிக் குழுக்களாகவும், வேறு வேறு பகுதிகளாகவும் பிரிந்து வாட்போர்ப் பயிற்சியும், விற்போர், மற்போர்ப் பயிற்சிகளும் பெற்றுக் கொண்டிருந்தார்கள். வாளொடு வாள் மோதும் ஒலியும், வேல்கள் சுழலும் ஓசையும், வில்லிலிருந்து அம்புகள் பாயும் விரைந்த ஒலியும், இளைஞர்களின் ஆரவாரக் குரல்களும் நிறைந்து படைக்கலச் சாலையின் பயிற்சிக்களமே சிறியதொரு போர்க்களம் போல் காட்சி யளித்தது. இடையிடையே படைக்கலச் சாலைத் தலைவராகிய நீலநாக மறவரின் கம்பீரமான சிங்கக் குரல் முழங்கி, வீரர்களை ஏவுதல் செய்தும் ஆணையிட்டும் ஆட்சி புரிந்து கொண்டிருந்தது. முழங்கி முடிந்த பின்பும் நெடுநேரம் ஒலித்துக் கொண்டே இருப்பது போல் கட்டளை யிடும் கம்பீரத் தொனியுள்ள குரல் அது!

பிரும்மாண்டமான அந்தப் படைக்கலச்சாலை கட்டிடங்களும், மாளிகைகளும், யானைகள், குதிரைகளைக் கட்டும் சிறுசிறு கூடங்களும் உள்ளடங்கிய மிகப் பெரிய சோலையில் நான்கு புறமும் சுற்று மதில்களோடு அமைந்திருந்தது. வேல், வாள் போன்ற படைக்கலங்களை உருக்கி வார்க்கும் உலைக் கூடங்களும் அதற்குள் அமைந்திருந்தன. அதனால் உலைக்கூடங்களில் வேல்களையும், வாள்களையும் வடித்து உருவாக்கும் ஒலியும் அங்கிருந்து எழுந்து பரவிக் கொண்டிருந்தது. படைக்கலச் சாலையின் எல்லையாகிய மதிற்சுவருக்கு அப்பால் காவிரிப்பூம் பட்டினத்திலேயே வயது முதிர்ந்ததும் எண்ணற்ற விழுதுகளை ஊன்றி மண்ணின் மேல் உரிமை கொண்டாடியதுமான பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது.

ஒரு பேரரசன் கோட்டை கொத்தளங்களோடு அரண்மனை அமைப்பதற்குத் தேவை

மணிபல்லவம்

நா. பார்த்தசாரதி

யான நிலப்பரப்பைக் காட்டிலும் சற்று மிகுதியான நிலப்பரப்பிலும் தன் நிழல் பரப்பி விழ்தூன்றிப் படர்ந்து பரந்திருந்த அந்த ஆலமரத்தை அணுகினாற்போல் சிவன் கோவில் ஒன்றும் இருந்தது. பூம்புகார் மக்களின் பேரருட் செல்வனான முக்கண் இறைவன் கோவில் கொண்டிருந்த அந்த இடத்துக்கு *ஆலமுற்றம் என்று பெயர் வாய்த்திருந்தது. 'ஆலமுற்றத்து அண்ணலார்'- என்று அந்தப் பகுதி மக்கள் கொண்டாடும் இந்த இறைவனுக்கு அடுத்த படியாக அங்கே பெருமை வாய்ந்தவர் நீலநாக மறவர்தாம். அவருடைய படைக்கலச் சாலைக்கும், ஆலமுற்றத்துக் கோவிலுக்கும் அப்பால் வெண்பட்டு விரித்தாற்போல் கடற்கரை மணல்வெளி நீண்டகன்று நோக்கு வரம்பு முடியும் வரை தெரிந்தது. நீலநாக மறவரின் படைக்கலச் சாலையிலும் அதைச் சூழ்ந்திருந்த பகுதிகளிலும் வீரத் திருமகள் கொலுவீற்றிருப்பதைப் போன்றதொரு கம்பீரக் கலை எப்போதும் நிலவிக் கொண்டிருந்தது. எப்போதும் கண்ணுக்கு நிறைவாகக் காட்சி யளித்துக் கொண்டிருந்தது.

இளங்குமரனும், மற்ற நண்பர்களும் நேராகப் படைக்கலச்சாலையின் மடைப் பள்ளிக்குச் சென்று வயிறு நிறைய உணவருந்தினார்கள். எப்போது வந்தாலும் எத்துணைப் பேரோடு வந்தாலும், தங்கள் சொந்த இல்லத்தைப் போல் கருதித் தங்கிக் கொள்ளவும், பழகவும் தம்முடைய பழைய மாணவர்களுக்கு உரிமையளித்திருந்தார் நீலநாக மறவர். இளங்குமரன், கதக்கண்ணன் போன்ற சிறப்பும், நெருக்கமும் உள்ள மாணவர்களுக்கு அந்த உரிமை சற்று மிகையாகவே உண்டு. நீலநாக மறவரின் பெருமைக்கும், வீரத்துக்கும் முன்னால் எப்போதும் எல்லாரும் மாணவர்கள்தாம். வீரம் விளைகின்ற வளமான நிலம் அது. அந்த நிலத்தில் அதன் வீர விளைவுக்குக் காரணமான பெருமகனுக்கு முன்னால் இளைஞர்கள் வணங்கியபடி வருவதும், பணிந்து கற்பதும், வணங்கியபடி செல்வதும் பழமையான வழக்கங்கள். ஆலமுற்றத்தின் மாபெரும் ஆலமரத்தைப் போலவே நிறைய விழ்து ஊன்றிப் படர்ந்த புகழ்பெற்றவர் நீலநாக மறவர். அவருடைய பெருநிழலில் தங்கிப் படைக்கலப் பயிற்சி பெற்றுச் சென்றவர்க்கும், இப்போது பயிற்சி பெறுகிறவர்களுக்கும், இனிமேல் பயிற்சி பெறப் போகிறவர்களுக்கும் ஆல நிழல்போல் பரந்து காத்திருந்தது அவருடைய படைக்கலச்சாலை.

உணவு முடிந்ததும் கதக்கண்ணனும், மற்ற நண்பர்களும் பின்தொடர நீலநாக மறவர் நின்று கொண்டிருந்த பகுதிக்கு விரைந்து சென்றான் இளங்குமரன். எதிரே அவனைக் கண்ட ஊழியர்களும், பயிற்சி பெற வந்திருந்த மாணவர்களும், வேறு பல வீரர்களும் மலர்ந்த முகத்தோடு வணக்கம் செலுத்தி வரவேற்றார்கள். மரியாதையோடு வழி விலகி நின்று கொண்டார்கள். இளங்குமரனை வளர்த்தவர் அருட்செல்வ முனிவர் என்றாலும் நீலநாக மறவருக்கு அவன் செல்வப் பிள்ளை. எவருக்கும் நெகிழ்ந்து கொடுக்காத இரும்பு மனிதரான நீலநாக மறவர் இளங்குமரனிடம் மட்டும் அன்பு மயமாக நெகிழ்ந்து விடுவதும், சிரித்துப் பேசுவதும் வழக்கம். அதனால் அவனுக்கு அந்தப் படைக்கலச் சாலையின் எந்தப் பகுதியிலும், எவரிடத்திலும் தனி மரியாதையும், அளவற்ற பேரன்பும் அளிக்கப்பட்டு வந்தன.

பெரு வீரராகிய நீலநாக மறவர் இளங்குமரனிடம் சிரித்துப் பேசிப் பழகுவதும் வெளிப்படையாக அன்பு செலுத்துவதும் மற்றவர்களுக்கு வியப்பாயிருந்ததற்குக் காரணம் உண்டு. அவர் வியப்பதற்கும் வணங்குவதற்கும் பெரியவரே ஒழிய நெருங்கிப் பழகுவதற்கு உரியவரல்லர். அவராகவே முன்வந்து யாரிடமாவது பழகுகிறார் என்றால் அவ்வாறு பழக்கத்துக்கு ஆளானவனுடைய எதிர்காலத்தை அவர் இப்போதே கணித்தறிந்து உறுதியாக நம்பி மதிக்கத் தொடங்கி விட்டார் என்று தெரிந்து கொண்டு விடலாம். அருட்செல்வ முனிவர், வீரசோழிய வளநாடுடையார் போன்ற வயது முதிர்ந்த சான்றோர்களிடம் நீலநாக மறவர் நெருங்கிப் பழகிய காரணம் வேறு. தம்மைப் போலவே அவரவர்கள் துறையில் அவ்விருவரும் இணையற்று விளங்கினார்கள் என்னும் மதிப்பீடு பற்றி வந்த பழக்கம் அது.

சிறப்புக்குரிய சோழ அரச குடும்பத்துப் பிள்ளைகளும், புனல் நாட்டில் அங்கங்கே பெருமையோடிருந்த வேளிர்கள் எனப்படும் குறுநில மன்னர் குடியில் வந்த இளைஞர்களும், நீலநாக மறவரிடம் மாணவர்களாக இருந்தார்கள். அவர்களிடம் கூடத் தமது கடுமையும் கம்பீரமும் குன்றாமல் அளவோடு பழகிய நீலநாகர் இளங்குமரனைச் செல்வப் பிள்ளையாகக் கருதியது வெளியே தெரி

---

* ஆலமுற்றத்து இறைவன் கோவில் அந்தக் காலத்தும் பூம்புகாரில் அமைந்திருந்ததை அகநானூறு 181-வது பரணர் பாட்டால் அறிய முடிகிறது.

யாமல் பலர் மனத்துக்குள் பொறாமை கொள்ளவும்இட மளித்திருந்தது.

எல்லா மாணவர்களுக் கும் உண்ணவும், தங்க வும், படைக்கலச் சாலை யில் உள்ள பிறவசதிகளை அனுபவித்துக் கொள்ள வும் பரந்த மனத்தோடு இடம் கொடுத்திருந்தா லும் நீலநாக மறவர் தாமே அருகில் வந்து அன்போடு தோளைத் தழுவி நின்று சிரித்து உரையாடுகிறஉரிமையை இளங்குமரனுக்கே கொடுத்திருந்தார்.

'இவரை அடிமை கொண்டு ஆள லாமே' என்று பெரும் பேரரசனும் அருகில் நின்று நினைக்க முடியாத அரும் பெருந் தோற்றம் நீலநாகமறவ ருடையது. அவரைக் காட்டிலும் உயரமாக வளர்ந்தவர்கள்காவிரிப் பூம்பட்டினத்து எல்லைக் குள் இருப்பார்களா






என்பதே ஐயத்துக்குரியதுதான். நல்ல வளர்ச்சியும் கொழுப்பும் உள்ள முதிய ஆண் யானை ஒன்று மதம் கொண்டு வந்து நிமிர்ந்து நிற்பது போல் தோற்றம் வாய்த்திருந்தது அவருக்கு. வாள் நுனிகளைப் போல் இருபுறமும் நீண்டு வளர்ந்திருந்த வளமான மீசை, படர்ந்த முகத்துக்கு எடுப்பாக அமைந்திருந்தது. அடர்ந்த புருவங்களின் கீழே கனமான இமைகளோடு கழன்று விழுவன போல் மேலெழுந்து தோன்றும் சிவந்த பெரிய கண்கள். இரண்டு பக்கத்துக் கன்னங்களிலும் சூட்டுக்கோல் கொண்டு காய்ச்சி இழுத்தது போல் பெரிய கறுப்புத் தழும்புகள் வேறு அந்த முகத்தின் கடுமையைப் பெருகச் செய்து காட்டின. அவர் அங்கியைக் கழற்றி விட்டு நிற்கும் போது பார்த்தால் இப்படி எத்தனையோ தழும்புகளையும், புண்பட்ட சுவடுகளையும் அவரது மார்பிலும் தோள்களிலும் காண முடியும். புண்களால் வளர்ந்த புகழ்ச்செல்வர் அவர். பிறரைப் புண்படுத்தி அடைந்த புகழன்று அது; தாமே புண்பட்டு அடைந்த புகழ் அவருடையது. இரும்பில் உருக்கி வார்த்தது போன்ற அந்த உடல் எத்தனையோ போர்முனைகளுக்கு ஈடு கொடுத்துப் பாடுபட்ட சிறப்புடையது. ஆனால் அதே உடல் தன்னுடைய சொந்தப் புலன்களின் போர்முனைக்கும் இன்று வரையில் தோற்றதில்லை. கடந்த ஐம்பத்தெட்டாண்டுகளாகப் பிரமசரியம் காத்து மனமும் உடம்பும் இறுகிப் போன மனிதர் அவர். இன்று வரை வெற்றி கொண்ட புலன்களின் போர் முனையை இறுதி வரை வென்று விடும் வீரமும் அவருக்கு இருந்தது. அவர் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் இடம் ஒன்று உண்டு. அதுதான் ஆலமுற்றத்து அண்ணல் கோவில். வீரத்தையே ஒரு தவமாகப் போற்றி தோற்றுக் கொண்டிருந்தார் அவர். தம்முடைய வீரத்தவத்தையும் அதன் மரபையும் வளர்க்கும் ஆவலினால்தான் அந்தப் படைக்கலச் சாலையில் பல இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து வந்தார். அவர் தம்மிடம் வரும் இளைஞர்களைத் தெரிந்து தெளியும் முறையே தனியானது.

படைக்கலப் பயிற்சி பெறத் தம்மை நாடிவரும் இளைஞனை முன்னால் நிறுத்திப் பேசிக் கொண்டிருப்பார். பேசிக்கொண்டிருக்கும் போதே எதிரே இருக்கும் இளைஞன் முற்றிலும் எதிர்பாராதபடி பக்கத்திலுள்ள ஒரு வேலை உருவிக் குத்தி விடுவது போல் அவன் முகத்தைக் குறி வைத்து வேகமாக ஓங்கிக் கொண்டு போவார். அப்போது அவன் கண்களை இமைத்து முகத்தில் பயக்குறிப்புத் தோன்றப் பின்னுக்கு நகருவானானால், "சுகமில்லை, தம்பி! உனக்கும் வீரத்துக்கும் காத தூரம். நீ ஒரு காரியம் செய்யலாம். நாளங்காடியில் போய் ஏதாவது ஒரு மூலையில் பூக்கடை வைக்கலாம். உன்னைப் போன்ற ஆட்கள் வீரத்தை நம்புவதை விடப் பூச்சூடிக் கொள்ளும் பெண்களின் கூந்தலை நம்பினால் நன்றாகப் பிழைக்கலாம். எதிரிலிருப்பவன் உன்னை நோக்கி வேலை ஓங்கும்போது பயத்தினால் உன் கண்கள் இமைத்தாலும் உனக்குத் தோல்விதான். தூய வீரன் அப்படி இமைக்கலாகாது.

'விழித்த கண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்க ணவர்க்கு'

என்று நம்முடைய தமிழ்ப் பெரியவர்கள் வீரருக்கு அமைதி கூறியிருக்கிறார்கள். உன்னிடம் அந்தப் பொருத்தம் அமையவில்லை. போய் வா" என்று சொல்லித் துரத்தி விடுவார். அக்காலத்தில் மிகவும் அருமையானவையாக இருந்த சில போர் நுணுக்கங்களைக் கற்பிக்க முடிந்தவராக அவர் ஒருவர்தான் இருந்தார். பயங்கரமானதும், பெருந் துணிவுடன் பொறுத்துக் கொண்டு செய்ய வேண்டியதுமான போர்த்துறை ஒன்றுக்கு 'நூழிலாட்டு' என்று பெயர். தன்னிடம் போர்க்கருவிகளே இல்லாத போதும் எதிரி தன்னை நோக்கி எறிகிற வேலையே தன் ஆயுதமாகப் பறித்துக் கொண்டு தன்னைச் சூழ்கிற பல பகைவர்களைத் தாக்கி அழிக்க வேண்டும். எதிரியின் வேல் தன் மார்பிலே தைத்துள்ளதாயினும் தனக்கு வலி யுண்டாகுமே என்று தயங்காமல் அதை உருவியேனும் எதிரிகளைச் சாடி அழிப்பதுதான் நூழிலாட்டு. பல போர்க்களங்களில் நூழிலாட்டுப் புரிந்து அந்த அருங்கலை விநோதத்தையே விளையாட்டாகப் பழக்கப்படுத்திக் கொண்



கைமேல் பலன்!



"ஏண்டா! நம்ப விட்டு புது ஸ்கூட்டர் வாங்கியிருக்கிறானே, பார்த்தாயா .....?"

"ஓ, பார்த்தேனே! என் மேல் ஏற்றிதே காண்பித்து விட்டான்!"



அவர்: பாலு இருக்கானே! அவன் அந்த ஆபீசிலே முதலில் இரண்டாயிரத்துக்குப் பண்ணினான். பிறகு ஓர் ஐயாயிரத்துக்குப் பண்ணினான். அதன் பிறகு இப்ப 'வெட்டண்டா' ஓர் எண்ணாயிரத்துக்குக் கூடப் பண்ணி விட்டான்.

டீன்ஸ் ப்ரன்ஸ் ஏஜெண்ட்: என்ன, இன்ஷ்யூரன்ஸா? எனக்குத் தெரியாமலா?

அவர்: இல்லே, பணமோசடி!

டிருந்தார் நீலநாகமறவர். 'வல்லி வேட்டம்' என்று வில்லில் அம்பெய்வதில் நுணுக்கமான நிலை ஒன்று உண்டு. ஒரே முறையில் விரைந்து எய்த அம்பு ஒன்று பல பொருள்களிற் பாய்ந்து, துளைத்துச் செல்லுமாறு எய்வதற்குத்தான் 'வல்லி வேட்டம்' என்று பெயர். இப்படி அரியனவும், பெரியனவுமாக இருந்த போர்க் கலை நுணுக்கங்கள் யாவும் பழகிப் பயின்று வைரம் பாய்ந்த கரங்கள் நீலநாக மறவருடையவை.

இல்லற வாழ்வின் மென்மையான அநுபவங்களும், உலகியற் பழக்கங்களும் இல்லாத முரட்டு வீரராக வளர்ந்திருந்த தறுகல் உணவிலும் நடைமுறைகளிலும், உடம்பைப் பேணுதலிலும் பொதுவான மனித இயல்பை மீறியவராக இருந்தார் அவர். ஐம்பத்தெட்டு ஆண்டுகள் வாழ்ந்து தளர்ந்ததென்று சொல்ல முடியாத கட்டுடல் செம்பினை உருக்கி வார்த்து நிறுத்திய சிலையெனத் தோன்றியது. எட்டிப் பால், எட்டிக்காய் போன்றவற்றை உண்டு வழக்கப்படுத்திக் கொண்டிருந்ததால் உடம்பில் நச்சுத் தன்மை ஏறி இறுகியிருந்தது. எனவே நஞ்சு தோய்ந்த ஆயுதங்களோ, நச்சுப் பிராணிகளோ எந்தவிதமான கெடுதலும் செய்ய முடியாதபடி உறுதிப் படுத்தப்பட்டிருந்தது அந்த உடம்பு. 'புலன் அழுக்கற்ற அந்தணாளர்' என்று வெறுந் துறவிகளைப் புகழ்வார்கள். நீலநாகமறவரோ புலன் அழுக்கற்ற வன்கணாளராக இருந்தார். 'மாபாரதம் நிகழ்ந்த காலத்தில் துரோணர், வீட்டுமர் போன்ற வீரர்கள் இப்படித் தான் வாழ்ந்திருக்க வேண்டும்' என்று பூம்புகார் மக்கள் நினைத்துக்கொள்ளவும், பேசிக் கொள்ளவும் தக்கபடி நீலநாக மறவர் ஒப்பற்ற தவவீரராக இருந்தார். மெல்லிய சங்கிலிகளில் பின்னிய இரும்புக் கவசமும் அங்கியும் அணிந்து இளைஞர்க்கு வாளும், வேலும் பயிற்றும் களத்தில் அவர் வந்து நின்று விட்டால் வீரமெனும் பேருணர்வே கம்பீர வடிவெடுத்து வந்து நிற்பதுபோல் தோன்றும். பயிற்சிக் காலங்களில் இரும்பு அங்கி அணியாமல் அவரைக் காண்பது அரிது.

அன்று இளங்குமரனும், நண்பர்களும் தேடிக்கொண்டு சென்றபோது படைக் கலச் சாலையின் மரங்களடர்ந்த உட்பகுதியில் சில இளைஞர்களுக்கு விற்பயிற்சி கற்பித்துக் கொண்டிருந்தார் நீலநாக மறவர். அப்போது கற்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தது மிகவும் நுண்மையான தொரு விற்கலைப் பயிற்சி. பயிற்சி நடந்து கொண்டிருந்த அந்த இடத்தைச் சுற்றிலும் மாமரங்கள் நிறைந்திருந்தன.

நடுவில், தெளிந்த நீரையுடைய சிறு பொய்கை ஒன்றும் இருந்தது. மாமரங்களில் கிளைகளில் கொத்துக் கொத்தாகக் காய்கள் அசைந்தாடிக் கொண்டிருந்தன. காம்புகளின் ஓரமாக இளஞ்சிவப்பும், மஞ்சளுமாக நிறங்கொள்ளத் தொடங்கியிருந்த அந்தக் காய்கள் முதிர்ச்சியைக் காட்டின.

மாமரங்களின் கீழே பொய்கையின் பளிங்கு நீர்ப்பரப்பில் காய்கள் தெரிவதைக் கண்களால் பார்த்துக்கொண்டே வில்லை வளைத்துக் குறி வைத்து மேலே அம்பு எய்து, குறிப்பிட்ட ஒரு கொத்துக் காய்களை வீழ்த்த வேண்டும். அங்கே தம்மைச் சுற்றியிருந்த இளைஞர்களுக்கு இப்படி அம்பு எய்யும் விதத்தை முதலில் தாமே ஓரிருமுறை செய்து காட்டிவிட்டுப் பின்பு அவர்களைச் செய்யச் சொல்லி அவர்களால் முடிகிறதா, இல்லையா என்று சோதனை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார் நீலநாகமறவர். அத்தகைய சூழ்நிலையில் நடுவே புகுந்து குறுக்கிட்டுத் தன் வரவைத் தெரிவித்துக் கொள்ள வேண்டாம் என்று கருதிய இளங்குமரன் உடன் வந்த நண்பர்களோடு ஒதுங்கி நின்றான்.

பொய்கை நீரிலே வடிவு பார்த்துக் குறி வைத்து மேலே மரத்திலே உள்ள காய்களை எய்யும் முயற்சியில் அங்கிருந்த இளைஞர்கள் எவருக்குமே வெற்றி இல்லை. அதைக் கண்டு நீலநாகமறவருடைய கண்கள் மேலும் சிவந்து சினக் குறிப்புக் காட்டின. மீசை நுனிகள் துடித்தன. ஆத்திரத்தோடு கூறலானார்: "இளைஞர்களே! ஒரு பொருளைக் குறி வைத்து எய்வதற்கு உடலின் பலமும், கைகளின் வலிமையும் மட்டும் போதாது மனம் குவிந்து கூர்மையாக வேண்டும். நோக்கும், நினைவும் ஒன்றில் இலயிக்க வேண்டும். எண்ணங்கள் ஒரே புள்ளியில் இணைய வேண்டும். தியானம் செய்வதற்கு மனம் ஒரு நிலைப்படுவது போல் பொருளைக் குறிவைத்து எய்யும் வித்தைக்கு முயற்சிக்கும் ஒருமைப்பாடு வேண்டும். நாளுக்கு நாள், எண்ணங்களை ஒன்றில் குவியவைத்து முயலும் ஆற்றல் குறைந்து கொண்டே வருகிறது. உங்கள் நிலையைப் பார்த்தால் வருகிற தலைமுறைகளில் வில்வித்தை போன்ற அரிய கலைகளே இல்லாமற் போய்விடுமோ என்று அஞ்சுகிறேன். மனம் வசப்படாமல் கைகள் மட்டும் வசப்பட்டு ஒரு பயனுமில்லை. என் போன்றவர்கள் கற்பிப்பதற்கு விற்குறிகள் வேண்டும். ஆனால் எங்கு நோக்கினும் தற்குறிகளைத்தான் காண்கிறேன்" என்று இடிக் குரலில் முழங்கிக் கொண்டே சுற்றி நின்றவர்களை ஒவ்வொருவராகப் பார்க்கத் தொடங்கிய நீலநாகமறவர் ஒரு மூலையில் அடக்க ஒடுக்கமாய் வந்து நின்றிருந்த இளங்குமரனையும் மற்றவர்களையும் கண்டுகொண்டார். ஒலி ஓய்ந்தும் தொனி ஓயாத அவருடைய கம்பீரக் கட்டளைக் குரலில் சுற்றி நின்ற இளைஞர்கள் எல்லாப் பேச்சடங்கிப் புலனடங்கி நின்ற போது அவர் தம் கையிலிருந்த வில்லைக் கீழே எறிந்துவிட்டு முகமலர்ச்சியோடு இளங்குமரனை நோக்கி நடந்தார்.

20. விளங்காத வேண்டுகோள்

"அடடா. நீ எப்பொழுது வந்தாய் தம்பி? நான் உன்னைக் கவனிக்கவேயில்லையே? காலையிலிருந்து உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நேற்றுப் பின்னிரவில், இந்திர விழாவைக் காண்பதற்காக ஊரெல்லாம் சுற்றிவிட்டு இதோ உன்னுடன் நிற்கும் இந்த இளைஞர்களிற் சிலர் இங்கு வந்து தங்கினார்கள். இன்று காலையில் இவர்களிடம் உன்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது பிற்பகலுக்குள் நான் உன்னைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்லி அனுப்பினேன். உன்னிடம் நிறையப் பேச வேண்டியிருக்கிறது தம்பி! நேற்று முன் தினம் அருட்செல்வ முனிவர் இங்கு வந்து நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார். உன்னைப் பற்றி எவ்வளவோ செய்திகளைச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் அவர்."

அன்பு நெகிழும் குரலில் இவ்வாறு கூறிக் கொண்டே இரும்புக் கவசம் அழுந்துமாறு அவனை மார்புறத் தழுவிக் கொண்டார் நீலநாகமறவர்.

"முகம் வாடியிருக்கிறதே, தம்பி! எதற்காக இப்படி ஊர் சுற்றுகிறாய்? உன்னுடைய அழகும், ஆற்றலும், அறிவும் பெரிய காரியங்களுக்குப் பயன்பட வேண்டும். அவற்றை இப்போதே மிகச் சிறிய காரியங்களுக்காகச் செலவழித்து விடாதே. இன்றைக்கு இந்தப் பூம்புகாரின் அரச கம்பீர வாழ்வுக்கு முன்னால், இருக்குமிடம் தெரியாத மிகச் சிறிய இளைஞனாக நீ இருக்கிறாய். இனி ஒரு காலத்தில் உன்னுடைய கம்பீரத்துக்கு முன்னால் இந்தப் பெரிய நகரமே இருக்குமிடம் தெரியாமல் மிகச் சிறியதாகப் போய்விடலாம். உலகமே அப்படித்தான் தம்பி! பொருள்கள் பெரி

யவையாகத் தோன்றும்போது, வியந்து நிற்கிற மனமும் மனிதனும் குறுகி விருப்பதைப் போல் சிறுமையாய்த் தோன்றுவார்கள். மனத்தையும் தன்னையும் பெரியதாகச் செய்து கொண்டு பார்த்தால் பெரும் பொருள்களும் சிறியவையாகக் குறுகித் தோன்றும். இதோ, என்னைச் சுற்றிக் கட்டிளங் காளைகளாக நிற்கும் இந்தப் பிள்ளைகள் எல்லாரும் வில்லுக்கும் அம்புக்கும் தோற்றுக் கல்லைப்போல அசைவின்றிப் பயந்து நிற்கிறார்களே; ஏன் தெரியுமா? இவர்கள் அந்தக் குறி தங்களுடைய ஆற்றலினும் பெரிது என்று எண்ணி எண்ணித் தங்களுக்குத் தாங்களே சிறுமை கற்பித்துக் கொண்டு விட்டார்கள். அதனால் அம்பு குறியைத் தீண்டவே இல்லை. வீரம் தனக்குப் பயந்த நெஞ்சில் விளைவதில்லை. தன்னை நம்பும் நெஞ்சில்தான் விளைகிறது. எங்கே பார்க்கலாம்? நீ இந்த வில்லை எடுத்து இவர்கள் செய்யத் தவறியதைச் செய்து காட்டு. அதன் பின்பாவது இவர்கள் மனத்தில் தன்னம்பிக்கை உண்டாகிறதா இல்லையா என்று காணலாம்!"



இளங்குமரனை முன்னுக்கு இழுத்துக் கொண்டு வந்து வில்லையும் அம்புக் கூட்டையும் அவன் கைகளில் எடுத்துத் தந்து அன்புடன் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார் நீலநாகமறவர். எல்லாருடைய கண்களும் அவனையே பார்த்தன. வந்ததும் வராததுமாக இளங்குமரனை இப்படி வம்பில் இழுத்து விட்டாரே நீலநாகமறவர் என்று கதக்கண்ணன் நினைத்தான். அப்போது இளங்குமரன் மனநிலை தெளிவாயில்லை என்பதை அறிந்திருந்த காரணத்தால்தான் கதக்கண்ணன் பயந்து தயங்கினான். மனக் கவலைகளால் எல்லாரையும்போல இளங்குமரனும் குறி தவறி 'அவமானப்பட நேரிட்டு விடுமோ' என்பதே கதக்கண்ணனின் பயத்துக்குக் காரணமாயிருந்தது.

ஆனால் கதக்கண்ணன் பயந்ததுபோல் எதுவும் நடக்கவில்லை. எப்படிப்பட்ட கவலைக்கிடமான நேரத்திலும் தன் மனத்தையும் கண்களையும் ஒருமை நிலையில் ஈடுபடுத்த முடியும் என்பதை இளங்குமரன் நிரூபித்துக் காட்டிவிட்டான். ஒரே ஒரு விநாடிதான்! அந்த ஒரு விநாடியில் வில்லை வளைப்பதற்குப் பயன்பட்ட நேரம் எவ்வளவு நீர்ப்பரப்பில் தெரிந்த காய்களின் பிரதிபிம்பத்தைக் கவனித்துக் குறி பார்த்த நேரம் எவ்வளவு, அம்பை எய்த நேரம் எவ்வளவு என்று தனித் தனியே பிரித்துச் சொல்லவே முடியாது. அவனுடைய வில் வளைந்ததையும் மாங்காய்களின் கொத்து அறுந்து தனித் தனிக் காய்களாய் நீரிலும், தரையிலுமாக வீழ்ந்ததையும்தான் எல்லாரும் கண்டார்கள்.


"வில்லாதி வில்லன் என்பது உனக்குத்தான் பொருத்தமான பெயர், தம்பீ! உன்னுடைய அம்புகள் மட்டுமல்ல, நினைவுகளும், நோக்கமும், பேச்சும் எதுவுமே குறி தவறாது" என்று கூறியவாறு இளங்குமரனைச் சிறு குழந்தை போல் விலாவில் கை கொடுத்துத் தழுவி அப்படியே மேலே தூக்கிவிட்டார் நீலநாக மறவர். கூடியிருந்த இளைஞர்களிடமிருந்து வியப்பு ஒலிகளும் ஆரவாரமும் எழுந்தன.

இளங்குமரன் அவருடைய அன்புப் பிடியிலிருந்து விடுபட்டுக் கீழே இறங்கியவுடன், "எல்லாம், நீங்கள் இட்ட பிச்சை ஆசிரியரே" என்று அவர் கால்களைத் தொட்டு வணங்கி விட்டுக் கூறினான்.

"பிச்சையாகவே இருந்தாலும் அதைப் பாத்திரமறிந்து இட்டதற்காக நான் பெருமைப்படலாம் அல்லவா? நல்ல கொழுநனை அடைந்து கற்பும் பொற்பும் பெறுகிற அழகிய பெண்போல் ஒவ்வொரு கலையும் தன்னை நன்றாக ஆளும் நல்ல நாயகனைப் பெற்றால்தான் சிறப்படைகிறது தம்பீ!"

அவ்வளவு பெரிய வீராதிவீரர் தன்னை முன்னால் நிறுத்தி வைத்துக் கொண்டு புகழும்போது தான் என்ன மறுமொழி பகர்வதென்று தோன்றாமல் சற்றே நாணினாற் போல் தலை குனிந்து நின்றான் இளங்குமரன்.

"வா, போகலாம். உன்னிடம் தனிமையில் சொல்ல வேண்டிய செய்திகள் நிறைய இருக்கின்றன" என்று கூறி அவனைக் கைப்பற்றி அழைத்துக் கொண்டு புறப்பட்டார் நீலநாகமறவர். குலத்துக்கொரு பிள்ளையாய் வந்த குமாரனைத் தந்தை பாசத்தோடும் பரிவோடும் அழைத்துச் செல்வதுபோல் இருந்தது அந்தக் காட்சி. 'மகாமேருமலை போன்ற இந்த வீரவேந்தர் இப்படித் தோள்மேல் கையிட்டுத் தழுவி அழைத்துக் கொண்டு செல்லும் பாக்கியம் தங்களுக்கு ஒரு முறையாவது வாய்க்காதா?' என்று ஏங்கும் இளைஞர்கள் பலர் அட



ரேடியோவில் பேசவந்த பேச்சாளர் ஒருவர் ஏற்கனவே தயாரித்துக் கொடுத்திருந்த பிரசங்கத்தைப் படிப்பதற்குப் பதில் தாமே சொந்தமாகப் பேச ஆரம்பித்தார். இதைக் கண்ட நிலைய அறிவிப்பாளர் அவரை மடக்க, பிரசங்கி இடக்காகப் பதில் சொல்ல, பத்து நிமிட நேரம் ரகளை நடந்தபின் ஒரு வழியாக அவரை அப்புறப்படுத்தி விட்டு அறிவிப்பாளர் கூறினார் :

"இதுவரை நீங்கள் கேட்டது 'வம்புச் சண்டை' என்ற நாடகம்!"



"பிறந்தகம் சென்று இரண்டு மாதங்களாக முகாமிட்டிருந்த மனைவி இப்பொழுது உங்கள் உடல் நிலையைப் பற்றி உருக்கமாக விசாரித்துக் கடிதம் எழுதினால் பூரித்துப் போகாதீர்கள். இந்த இரண்டு மாதத்தில் பழைய படங்களையெல்லாம் அவள் பார்த்திருப்பாள் என்று நம்புகிறேன்; புதிய படங்களை வாங்க விரைவில் வருகிறேன்' என்று அதற்கு அர்த்தம்."

-ஒரு சந்நியாசியின் டைரியிலிருந்து

போது அங்கே இருந்தனர். அப்படி ஏங்கிய பலரில் அரச குடும்பத்துப் பிள்ளைகளும், வேளிர்குலச் செல்வர்களும் பட்டினப் பாக்கத்துப் பெருவணிகர் வீட்டு இளைஞர்களும் இருந்தனர்.

"நண்பர்களே வாருங்கள்! ஆசிரியர் பிரானிடம் பேசி விட்டு இளங்குமரன் திரும்பி வருகிறவரை இப்படி இந்த மரத்தடியில் உட்கார்ந்துகொண்டிருக்கலாம்" என்று கதக்கண்ணன் தன்னுடன் வந்தவர்களை அழைத்துக் கொண்டு மாமரத் தடியில் போய் அமர்ந்தான். மற்ற இளைஞர்களும் தனித் தனிக் குழுக்களாகப் பிரிந்து சென்றார்கள். அவ்வாறு பிரிந்து செல்லும் போது சற்றே திமிர் கொண்டவன் போல் தோன்றிய வேளிர்குலத்து இளைஞன் ஒருவன் "பெற்றவர் பெயர் தெரியாத பிள்ளைகளெல்லாம் வில்லாதி வில்லர்களாகி விடுகிறார்கள். ஒருவனை வில்லாதி வில்லனாகப் பெருமை பெற வேண்டுமானால் பெற்றவர் பெயர் தெரியாத பிள்ளையாயிருக்க வேண்டும் என்பதுதான் தகுதியோ என்னவோ?" என்று சொல்லி ஏளனமாகச் சிரித்ததையும் அவனுடன் சென்ற மற்றவர்களும் இளங்குமரனைப் பற்றித் தூச்சமாகச் சொல்லி நகை புரிந்ததையும் மரத்தடியில் உட்கார்ந்திருந்த கதக்கண்ணன் கேட்டுப் புரிந்து கொண்டு விட்டான். உடனே மனம் கொதித்துத் துள்ளி எழுந்தான் அவன். நேராக அந்த இளைஞர் குழுவுக்கு முன் போய் நின்று கொண்டு இளங்குமரனை இகழ்ந்து பேசிய வேளிர்குலத்து விடலையைத் தடுத்து நிறுத்தி ஒரு கேள்வி கேட்டான் கதக்கண்ணன் :

'வேளிர் குலத்து வீரரே! தயைகூர்ந்து சற்று முன் கூறிய சொற்களை இன்னும் ஒரு முறை என் காது கேட்கும்படி கூறுவீர்கள் அல்லவா?"

கதக்கண்ணன் தன் முன்னால் பாய்ந்து வந்து தடுத்து நிறுத்திய விதத்தையும் கேள்வி கேட்ட வேகத்தையும் பார்த்து நிலைமையைப் புரிந்து கொண்டு விட்டான் வேளிர் குலத்து விடலை.


"நானா? நான் சற்று முன்பு தவறாக ஒன்றும் சொல்லவில்லையே? இளங்குமரனின் வீரதீரப் பெருமைகளைத் தானே உடன் வருகிறவர்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்தேன்!" என்று பேச்சை மாற்றி மழுப்பிவிட முயன்றான் அவன். ஆனால் கதக்கண்ணன் அவனை விடவில்லை.

'அப்படியா? மிகவும் மகிழ்ச்சி. வஞ்சகமில்லாமல் பிறருடைய வீரதீரப் பெருமைகளை அவர்கள் இல்லாத இடத்திலும் சொல்லிப் புகழுகிற உங்களைப்

போன்றவர்களுக்கு ஒரு பரிசு கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.''

''ஆகா! நீங்கள் கொடுக்க ஆசைப்படும் பரிசை அவசியம் வாங்கிக் கொள்கிறேன். என்ன நீங்கள் பரிசு தரப் போகிறீர்கள்?''

''என்ன பரிசு என்று கேட்கிறீர்கள்? சற்று முன் அப்படிப் பேசிய உங்கள் நாவை ஒட்ட இழுத்து அறுக்கலாமென நினைக்கிறேன். அதுதான் நான் உங்களுக்கு அளிக்கப் போகும் பரிசு. புறம் பேசுகிற நாவை வளரவிடக் கூடாது. புறம் பேசுகிற நாவுடையவர்களைப் படைத்ததைக் காட்டிலும் கைதவறின காரியம் ஒன்றைப் படைப்புக் கடவுள் செய்திருக்கவே முடியாது. உலகத்திலுள்ள நஞ்செல்லாம் புறம் பேசுகிறவர்களின் நாவிலிருந்து பிறந்தது. வேறு எல்லாக் கெட்ட மனிதர்களும் சோற்றிலும், தண்ணீரிலும் நஞ்சு தூவுவார்கள். புறம் பேசுகிறவர்களோ காற்றிலும் நஞ்சைத் தூவுவார்கள் காண்பவர், கேட்பவர் நெஞ்சிலும் நஞ்சைக் கலக்கிறார்கள்.''



இப்படிக் கொதிப்போடு பேசிய கதக் கண்ணனை உறுத்துப் பார்த்தான் அந்த வேளிர் குலத்து இளைஞன்.

''பார்வையால் மருட்டாதீர்! உங்கள் முன்னோர்கள் எல்லாம் சோழப் பேரரசுக்கு வீர உதவிகள் புரிந்து பெருமைப்பட்டிருக்கிறார்கள். அத்தகைய வேளிர் குடியில் புறம் பேசுவதை வீரமாக எண்ணும் கோழைகள் பிறந்திருக்கிறார்கள் என்பதை நினைப்பதற்கு வெட்கமாயிருக்கிறது எனக்கு'' என்று கூறிவிட்டு மாமரத்தடிக்குத் திரும்பிச் சென்று தன் நண்பர்களோடு அமர்ந்து கொண்டான் கதக்கண்ணன். தாங்கள் இளங்குமரனைத் துச்சமாகப் பேசி இகழ்ந்த செய்தி நீலநாகமறவர் காது வரையில் எட்டி விடக் கூடாதே என்று பயந்துகொண்டே அந்த இளைஞர்களும் மேலே நடந்து சென்றார்கள்.

தனியாக நீலநாகமறவரோடு சென்றிருந்த இளங்குமரன் சில நாழிகைகளுக்குப் பின் மாமரத்தடிக்குத் திரும்பி வந்தான். கூட்டமாக உட்கார்ந்திருந்த நண்பர்களுக்கு இடையே அமராமல் கதக்கண்ணனை மட்டும் தனியே அழைத்துக் கொண்டு வேறு பக்கம் சென்ற இளங்குமரன் ''பட்டினப்பாக்கத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த போது நேற்று இரவில் நடந்த நிகழ்ச்சி பற்றி ஏதோ பேசத் தொடங்கினாயே; அதை இப்போது சொல்...'' என்று அவனை வினவினான்.

''ஓ! அதுவா...? சம்பாபதி வனத்து இருளில் உன்னைத் தாக்கிவிட்டு ஓடிய மனிதர்களை ஆனமட்டும் தேடிப் பார்த்தோம். அவர்கள் அகப்படவில்லை. விடிகிறமட்டும் தேடிவிட்டு நானும், எனது தோழனும் இந்தப் பக்கமாக வந்தபோது பிற்பகலுக்குள் உன்னை இங்கே அழைத்து வருமாறு நீலநாகமறவர் அனுப்பிய ஆட்களைச் சந்தித்தோம். உடனே எல்லாருமாகச் சேர்ந்து கொண்டு உன்னைத் தேடிப்புறப்பட்டோம்'' என்று கதக்கண்ணனிடமிருந்து இளங்குமரன் எதிர்பார்த்ததை விட மிகச் சாதாரணமான பதில் கிடைத்தது.

''ஏதோ வேண்டுகோள் விடுக்கப் போவதாக நீயும் நண்பர்களும் கூறினீர்களே! அது என்ன வேண்டுகோள்?'' என்று மறுபடியும் கேட்டான் இளங்குமரன், தன் நண்பன் கதக்கண்ணனைப் பார்த்து.

அதைக் கேட்டுக் கதக்கண்ணன் நகைத்தான் ''வேண்டுமென்றே எங்களை ஆழம் பார்க்கிறாயே, இளங்குமரா! அந்த வேண்டுகோளைத் தான் இவ்வளவு நேரம் ஆசிரியர்பிரான் உன்னிடம் விவரித்துக் கூறியிருப்பாரே? 'இன்னும் சிறிது காலத்துக்கு நீ இந்தப் படைக்கலச் சாலையிலேயே இருக்க வேண்டும். தனியாக நகருக்குள் எங்கும் போக வேண்டாம். என் கண்காணிப்பில் நீ இருப்பது நல்லது' என்று ஆசிரியர்பிரான் சொன்னாரா இல்லையா?''

இது கேட்டு இளங்குமரன் வியந்தான். ஏனென்றால் இதே வேண்டுகோளைத் தான் மறுக்க முடியாத கட்டளையாக ஆசிரியர் அவனுக்கு இட்டிருந்தார். 'இது எப்படிக் கதக்கண்ணனுக்குத் தெரிந்தது? இவர்களெல்லோரும் சேர்ந்து தூண்டி ஆசிரியர் மூலம் செய்த ஏற்பாடா இது? அல்லது முனிவர் ஆசிரியரைச் சந்தித்துத் தனியே செய்த ஏற்பாடா? இதன் பொருள் என்ன? இவர்கள் எல்லாரும் என்னைக் கோழையாக்க முயல்கிறார்களா?' என்று நினைந்த போது சற்று முன் ஆசிரியரிடம், 'இந்த வேண்டுகோளுக்கு ஏன் ஒப்புக் கொண்டோம்?' என்று வருந்தி மனங் குமுறினான் இளங்குமரன். (தொடரும்)

இந்திய மருத்துவ முறைகள்

ஸ்ரீஹரி

“உமக்குத் தெரியுமா?” என்ற தலைப்பின் கீழ் இந்திய அரசாங்க செய்தித் துறை ஒரு செய்தி அறிக்கையை விடுத்துள்ளது.

“(மேல் நாட்டு) நவீன வைத்திய சாஸ்திரத்துக்கும், அதன் பயிற்சி முறைகளுக்கும் ஒத்த வகையில் இந்திய மருத்துவ சாஸ்திரங்களைப் போதிக்கும் திட்டமொன்றை வகுத்து, அதன் மூலம் தொன்மையான நாட்டு வைத்திய முறைகள் அபிவிருத்தி பெற அரசாங்கம் வாய்ப்பளித்துள்ளது” என்று ஆரம்பித்து, அரசாங்கம் செய்துள்ள பல காரியங்களையும் முதல் இரண்டு திட்டகாலத்தில் செய்யப்பட்ட சாதனைகளையும் இவ்வறிக்கை விவரிக்கிறது.

இந்திய மருத்துவ முறைகளைக் கற்பிக்க ஒரு போதனாக் கிரமத்தை அகில இந்திய திட்டமாக நிறுவியுள்ளது விரும்பத்தக்கதுதான். அத் திட்டத்தை ஏற்கெனவே சில ராஜ்யங்கள் ஏற்றுச் செயல்பட முற்பட்டிருப்பதும் சிறப்பானதுதான். இத்திட்டப்படி நாட்டு வைத்திய முறைகளைக் கற்றுத் தேர்ச்சி பெறும் மாணாக்கர்களின் அந்தஸ்தும், சலுகைகளும் ஓர் எம். பி. பி. எஸ். டாக்டரின் அந்தஸ்துக்கும் சலுகைகளுக்கும் சமமானதாயிருக்கும் என்பதும் வரவேற்கத்தக்க விஷயங்களாகும்.

ஆனால் நம் தமிழ் நாட்டில் இந்திய மருத்துவக் கலையின் நிலை என்னவென்பதையும் சிறிது கருத்தில் ஏற்றிடல் அவசியம்.

இன்று மத்திய சர்க்கார் நிறுவியுள்ள ஒவ்வொரு திட்டமும் ஏற்கெனவே நம் தமிழ் நாட்டில் நிறுவப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு மிகத் திறம்பட நடந்து வருவதாகவும் பல வேறு கமிட்டிகளால் பாராட்டித் தெரிவிக்கப் பட்டவை. இத்துறையில் தமிழ்நாடு ஏனைய ராஜ்யங்களுக்கும், இந்திய சர்க்காருக்கும் வழிகாட்டியாக இருந்தது.

ஆனால் இடைக்காலத்தில் இதற்கும் ஒரு ‘கிரஹணம்’ ஏற்பட்டது. நாட்டு வைத்தியத்தைக் கற்பிக்க நிறுவிய கல்லூரியில் நாட்டு வைத்தியப் பாடங்கள் மிகவும் குறைந்து விட்டன. இதற்கான காரணங்களை ஆராய்ந்த கமிட்டிகளில் ஒன்றான உடுப்பா கமிட்டி, தனது ரிபோர்ட்டில் “...மந்திரிகள் மாறினதை யொட்டி ராஜ்ய அரசாங்கத்தின் கொள்கைகளும் (நாட்டு வைத்திய விஷயத்தில்) மாறிமாறி வந்ததும், (நாட்டு வைத்தியத்தின் அபிவிருத்தியில்) அக்கறையற்றவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டதும்தான் (சென்னையில்) நாட்டு வைத்தியத்தின் அபிவிருத்தி குறைந்ததற்குக் காரணம்” என்றும் இந்நிலை சீர்ப்படுவதற்கு என்ன செய்யலாம் என்பதையும் தனது ரிபோர்ட்டில் விளக்கியிருக்கிறது.

நாட்டு வைத்திய முறைகள் தக்க வகையில் போதிக்கப்பட்டு, அதனால் பொதுமக்களில் மிக மிகப் பெருவாரியானவருக்குத் தக்க வைத்திய வசதிகள் ஏற்படும் வகையில் ஒரு திட்டத்தை முதன் முதலில் வகுத்து, அதை அமுலில் கொண்டு வந்து, வெற்றியுடன் இயங்கி வருவதை நிரூபித்து அகில இந்தியாவுக்கும் வழிகாட்டியாயிருந்த சென்னையின் கல்லூரிக்கு இந்நிலை ஏற்பட்டுக் கடைசியில் கல்லூரியை மூடிவிடுமளவுக்கு ஒரு முடிவு ஏற்பட்டதைக் கண்டு நாட்டு மக்களில் துக்கப்படாதவரில்லை. மறுபடியும் கல்லூரியைச் சீரிய முறையில் தொடங்க வேண்டுமென்றும், இந்நாள் வரையிலிருந்த இடத்திலேயே இனியும் அக் கல்லூரி நிலைக்கப் பெற வேண்டுமென்றும் தமிழ் நாட்டு மக்களின் கோரிக்கைகள் தபால் மூலமாகவும் தந்திகள் மூலமாகவும் தெரியப்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில், நாட்டு வைத்தியத்தைத் தமிழ் நாட்டில் எவ்விதத்தில் முன்னேற்றம் பெறச் செய்யலாம் என ஆலோசனை பெறவும் தமிழ் நாடு அரசாங்கம் முனைந்ததாகத் தெரிகிறது.

மத்திய அரசாங்கத்தின் இந்திய மருத்துவ முறைகளின் ஆலோசகரின் உதவியையும், தமிழ் நாட்டு அரசாங்கம் பெற்றதாகவும் தெரிகிறது...

இவை யாவும் சந்தோஷமான செய்திகளே. ஆயினும், இனி செய்யப் போவதென்ன, செய்யத் தக்கதென்ன என்னும் விஷயங்களில் பொது மக்களின் மனத்தையும் தமிழ் நாடு அரசாங்கத்துக்குத் தெளிவு படுத்த வேணுமல்லவா?

மத்திய அரசாங்கம் வகுத்துள்ள போதனா முறைப்படி இந்திய மருத்துவ முறைகளைக் கற்பிக்கும் ஒரு கல்லூரியை உடனடியாக இத்தனை வருஷ காலமாக இந்திய மருத்துவக் கல்லூரி இயங்கி வந்த இடத்திலேயே நாளது ஜூன் முதல் தொடங்க ஏற்பாடு செய்வது.

இத்துறையில், மத்திய அரசாங்கம் மான்யமளிக்க முற்பட்டுள்ள ஏனைய திட்டங்களுக்கும், இந்நிலையத்தில் இடமளிப்பது...இதனில் கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெறும் மாணவருக்கு அகில இந்திய அளவில் ஓர் அந்தஸ்தை அளிக்க வாய்ப்பு ஏற்படுத்துவது...

இதுவரையில் தேறியுள்ள ஜி. ஸி. ஐ. எம்-களும் இத்திட்டப்படி தேர்ச்சி பெறுபவரோடு இணைக்க வகை செய்வது. இவைதான் நமது ராஜ்ய சர்க்கார் செய்யத்தக்க சிறந்த கடமையாகும்.

ஜி. ஸி. ஐ. எம். களை மறுபடியும் இரண்டு வருஷப்பயிற்சிக்குப் பிறகு, எம். பி. பி. எஸ். பரீக்ஷைக்கு எழுதித் தேர்ச்சி பெற்றால் அவர்களை எம்.பி. பி. எஸ். களாகக் கருதி அவருக்குள்ள அந்தஸ்தும், சலுகைகளும் அளிக்கலாமென்பதைவிட, மத்திய சர்க்கார் வகுத்துள்ள திட்டத்தில் இணைக்க வகை செய்வது சுலபமாகும். எம். பி. பி. எஸ். பரீக்ஷையையே எழுதித் தேர்வது என்னும் கொடுமை இந்த ஜி. ஸி. ஐ. எம். களுக்குத் தேவையில்லை. ஜி. ஸி. ஐ. எம். களுக்கு உடனடியாகவே எம்.பி. பி. எஸ். களுக்குள்ள அந்தஸ்தும் சலுகைகளும் கிடைக்க வாய்ப்பிருக்கின்றன. தமிழ்நாடு அரசாங்கமும் ஜி. ஸி. ஐ. எம். களும் இதை நழுவவிடக் கூடாது.



சௌந்தர்யத்தின் முதல் பிரகாசம்



ஆச்சர்யமளிக்கும் வகையில் கிருமிகளைக் கொல்லக்கூடிய **ஜி-11*** சிந்தால் சோப்பில் சேர்க்கப்பட்டிருப்பதால் சருமங்களிலே சாதாரணமாக வளரும் லக்ஷக்கணக்கான கிருமிகளிலிருந்து அவளது மிருதுவான சருமத்தைக் காப்பாற்றுகிறது... வேர்க்குரு கருநிறப்படை மற்றும் பல்வேறு சருமநோய்களிலிருந்து பாதுகாக்கிறது. சிந்தால் உபயோகிக்கும் வருஷங்கள் பூராவும் அவளது களங்கமற்ற பரிசுத்தமான மேனியழகை மேம்படச் செய்கிறது...

மனோகர நறுமணமும் மிருதுத்தன்மையும் உள்ள சிந்தால் சோப் கண்களில் எரிச்சல் உண்டாக்குவதில்லை. சருமத்தை இதமாக சுத்தமாக்குகிறது.

வியர்வை நாற்றத்தைப் போக்கி, எழிலுடன் விளங்கச்செய்யும் சோப்

பூரண பாதுகாப்பிற்கும், புத்துணர்ச்சிக்கும், ஜி-11 கலந்த கோத்ரெஜ் சிந்தால் டாய்லெட் பவுடரை உபயோகியுங்கள் நறுமணமுள்ளது. துர்நாற்றத்தைப் போக்கவல்லது. சருமத்திற்கு இதமளிக்கிறது குழந்தைகளுக்கு ஓர் வரப்பிரசாதம்.

* படங்களுடன் கூடிய "ஜி-11 என்பது என்ன?" என்ற இலவச புத்தகத்திற்கு கோத்ரெஜ். பம்பாய்-12 என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.

Godrej கோத்ரெஜ்

சோப்புகளில் முதன்மையான பெயர்



மேஜைமீது விரித்துப்போட்டிருந்த புத்தகம் என்னை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. என் கவனம் அதன்மீது லயிக்கவில்லை. புத்தகத்தை மூடி 'ஷெல்'பில் எறிந்து விட்டுச் சோபாவில் சாய்ந்தேன். எண்ணங்கள் சிதறிக் கொண்டிருந்தன. மாலையில் நடந்த சம்பவமே மனத்தில் நிழலாடிக் கொண்டிருந்தது.

காமு தன் சுபாவப்படிதான் அப்படி அசட்டுத்தனமாக நடந்து கொண்டாளா, அல்லது வேண்டுமென்றே செய்தாளா? என்னால் நிர்ணயிக்க முடியவில்லை.

கடந்த ஒரு மாத காலமாகவே லீலா என்னிடம் டியூஷன் படித்து வருகிறாள். நான் அவள் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியர்.

அன்று லீலாவுக்குப் பாடமான ஓர் ஆங்கிலக் கவிதையைத் தமிழில் விளக்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது காமு அந்த அறைக்குள் திடுதிப்பென்று நுழைந்தாள்.

"அம்மாஞ்சி! ஒரு வயசுப் பெண்ணுக்கு நீங்கள் பாடம் சொல்லிக் கொடுக்கிற லட்சணமா?" காமுவிடமிருந்து வார்த்தைகள் சீறிக் கொண்டு வந்தன.

நான் ஒரு கணம் அயர்ந்து விட்டேன். அவள் எதைக் குறிப்பிடுகிறாள் என்று எனக்குப் புரியவில்லை.

"இப்படித்தான் கண்ணே, மணியே என்று இந்தப் பாடப் புத்தகத்தில் போட்டிருக்கிறதோ?" என்று மீண்டும் ஆத்திரத்துடன் கேட்டாள் காமு.

எனக்குச் சிரிப்பு ஒரு புறம்; ஆத்திரம் ஒரு புறம். "காமு! புத்தகத்தில் ஆங்கிலத்தில் போட்டிருப்பதைத்தான் நான் தமிழில் சொல்லிக் கொண்டிருந்தேன். அசட்டுத்தனமாகப் பேசாதே!" என்றேன் அவளை அடக்கும் பாவத்தில்.

"பேசுகிறவா பேசினால் புத்திசாலித்தனமாக இருக்கும். நான் பேசினால் அசட்டுத்தனமாகத்தான் இருக்கும். எல்லாம் எனக்குத் தெரியும். 'பள்ளிக்கூடத்துப் பாடப் புத்தகத்தில்தான் இப்படிப் போட்டிருக்குமோ? எனக்குப் படிக்கத் தெரியாதென்று புளுக வேண்டாம். பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகமே இருண்டு போகாது!" அனல்போல் வார்த்தைகளைக் கொட்டி விட்டுப் போய் விட்டாள் காமு.

அசட்டுத்தனம் காமுவோடு பிறந்தது. வயது இருபது ஆகியும் அந்தக் குணம் மாறவில்லை. காமுவின் சுபாவம் லீலாவுக்கு ஓரளவு தெரியும். தெரிந்திருந்தாலும் என்ன? காமு அப்படி அபாண்டமாகக் காரணமின்றிப் பேசியதில் லீலாவுக்கு வேதனை இருக்காதா?

ஆனால் லீலா தன் வேதனையைக் காட்டிக் கொள்ளவில்லை. டியூஷன் முடிந்து போகும்போது, "காமு அக்கா விஷயம் தெரியாமல் பேசி விட்டார்கள். அதனால் என்ன?" என்று கண்ணியமாகத்தான் கூறி விட்டுச் சென்றாள். என் மனம் மட்டும் சமாதான மடையவில்லை. எனக்கு அப்பா மீதுதான் கோபம் ஏற்பட்டது. எல்லாம் அவர் காமுவுக்குக் கொடுக்கிற சுதந்திரம். அவள் வீட்டுக்குள் நுழைந்த அன்றே அப்பாவிடம் சலுகை பெற்று விட்டாள்.

ஒரு வருடத்துக்கு முன் அம்மா காலமாகி விட்டாள். அம்மாவின் சமக்கிரியைகள் முடியும் வரையில் அத்தை தன் குடும்பத்தோடு எங்களுடன் இருந்தாள். எங்களுக்கு நெருங்கிய உறவு அத்தை ஒருத்திதான்.

அம்மாவின் காரியங்களெல்லாம் முடிந்து ஊருக்குப் பயணமாகும்போது, "அண்ணு! உன்னையும் ராமுவையும் இப்படி விட்டுப் போக என் மனம் சம்மதிக்கவில்லை. ஆனால் அங்கே கிராமத்தில் நான் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது. எனக்கு ஒன்றும் ஓடவில்லை" என்று கண்ணைக் கசக்கினாள். அம்மாவுக்குப் பின் நானும் அப்பாவும்தான் குடும்பம். பெண் உதவி கிடையாது. அதைக் குறித்துத்தான் அத்தை பிரலாபித்தாள்.

அத்தை தன் குடும்பத்தை விட்டு எங்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று அப்பா எதிர்பார்க்கவில்லை; எதிர்பார்க்கவும் முடியாது. அவள் குடும்பம் அவளுக்கு. 'போய் வா அம்மா!' என்று என் தந்தை விடை கொடுத்துவிட்டார்.

அந்தச் சமயத்தில்தான் காமு வந்து, "அம்மா, மாமாவுக்கும் அம்மாஞ்சிக்கும் ஒத்தாசையாக நான் இங்கேயே இருக்கட்டுமா?" என்று கேட்டாள். காமு, அத்தைக்கு மூத்த பெண்.

எனக்கு அவள் அப்படிக் கேட்டது அசட்டுத்தனமாகத் தோன்றியது. கல்யாணமாகாத வாலிபன் இருக்கும் வீட்டில் வயது வந்த பெண் ஒத்தாசைக்கு இருப்பதாவது! ஊர் என்ன சொல்லும்? என்னதான் உறவு முறை இருக்கட்டுமே!

ஆனால் அப்பாவுக்கு அவள் வார்த்தையைத் தட்ட மனமில்லை. தனக்குப் பெண் பிறக்காத குறையோ என்னவோ காமு என்றால் அவருக்கு உயிர். அவளுக்கும் அப்பாவிடம் நல்ல ஒட்டுதல்.

ஒரு வழியாக அத்தை சம்மதித்து விட்டாள். 'கொஞ்ச நாட்களுக்கு இருக்கட்டும்' என்று காமுவை எங்களுடன் விட்டு விட்டுப் போய்

அசடு

தாமரை மணாளன்

விட்டாள். அந்தக் கொஞ்ச நாட்கள் 'கெடு' கடந்த ஒரு வருடமாக நீண்டு வருகிறது.

இதற்கிடையில் அத்தை ஒரு தடவை வந்து காமுவை ஊருக்கு அனுப்பும்படி அப்பாவிடம் கேட்டாள். அதற்கு அப்பா, "உன் மன்னி போன வேதனையைக் குழந்தை காமுவின் அன்பால்தான் மறக்க முடிகிறது. இன்னும் கொஞ்ச நாட்கள் அவள் என்னோடு இருக்கட்டும்" என்று சொல்லியனுப்பி விட்டார்.

அப்பா சொன்னது உண்மைதான். 'எங்க மாமா' 'எங்க மாமா' என்று கனியக் கனியக் காமு பேசும் போது அப்பாவுக்கு உச்சி குளிர்ந்து விடும். தாய்க் குலத்தின் அன்பிலும் பணிவிலும் உள்ளம் நெகிழாதவர் யார்? அதுவும் பற்றுக்கோலை இழந்த அப்பாவுக்கு அவள் ஆதரவாக இருந்தால்...?

ஆனால் எனக்கும் காமுவுக்கும் அவ்வளவாக ஒத்து வரவில்லை. அவள் ஒரு வெகுளி. உணர்ச்சிகளை உள்ளத்தில் தேக்கி வைக்கத் தெரியாது. அன்பானாலும் கோபதாபமானாலும் வெளிப்படையாகக் கொட்டி விடுவது தான் அவள் சுபாவம். அன்பு கூட அளவுக்கு மீறிக் காட்டப்படும்போது திகட்டத்தானே செய்கிறது.

'எங்க அம்மாஞ்சி பெரிய பள்ளிக்கூடத்தில் பெரிய வாத்தியாராக்கும்!' 'பெரிய' என்ற வார்த்தையில் அழுத்தம் காட்டி அவள் யாரிடமும் அப்பாவித்தனமாகப் பெருமை யடிக்கும் போது எனக்கு ஏனோ எரிச்சல்தான் பொத்துக் கொண்டு வரும். ஆனால் என் உணர்ச்சியைப் புரிந்து கொள்ளும் மனப் பக்குவம் அவளுக்குக் கிடையாது.

சில சமயங்களில் கோபத்தில் அவளைக் கண்டபடி திட்டிவிடுவேன். அவளும் எடுத் தெறிந்து பேசி விட்டுப் போய் விடுவாள். ஆனால் சிறிது நேரத்துக்குள், "வேறு யார் திட்டினாலும் இலேசில் விட மாட்டேன். நீ திட்டினால் மட்டும் உடனே மறந்து போகுது. அது ஏன் அம்மாஞ்சி?" என்று கேட்டுக் கொண்டு வந்து நிற்பாள்.

லீலா என்னிடம் டியூஷன் சொல்லிக் கொள்ள ஆரம்பித்ததற்குப் பின் அநேக சந்தர்ப்பங்களில் என் ஆத்திரத்தைக் கிளறி யிருக்கிறாள் காமு.

லீலாவின் தந்தையும், அப்பாவும் நண்பர்கள். அதோடு, லீலா கல்லூரியில் என் மாணவி. அறிமுகமும் தொடர்பும் ஏற்பட நல்ல வாய்ப்பு. கல்லூரிக்குள் தான் குரு சிஷ்யை உறவு; மற்றப்படி எங்களுக்குள் எத்தனையோ இளமைக் கனவுகள்!

லீலா பி. ஏ. தேறியபிறகுதான் கல்யாணப் பேச்சு ஆரம்பிக்க வேண்டும் என்று அவளு டைய தந்தை சொல்லிக் கொண்டிருந்தார். அதனால் அவளை பி. ஏ. தேற வைத்துவிட வேண்டும் என்று எனக்கு விசேஷ அக்கறை. அவளுக்கு ஆங்கிலப் பாடம் வராது. அதற் காக டியூஷன் சொல்லித் தருவதாகச் சொன் னேன். தந்தைமார்கள் மூலமே டியூஷன் ஏற்பாடு செய்து கொண்டோம். போதனை எங்கள் வீட்டில் வைத்துத்தான் நடந்தது.

முதல்நாள் லீலா வந்ததுமே காமு அப்பா விடம், "மாமா, இவளுக்கா அம்மாஞ்சி பாடம் சொல்லிக் கொடுக்கப் போகிறார்?" என்று கேட்டாள்.

"ஆமாம், எதற்காக அப்படிக் கேட்கிறாய்?"

"வயசு வந்த பெண், கல்யாணம் ஆகாத ஆண்பிள்ளையிடம் பாடம் சொல்லிக் கொள் வதா? வேடிக்கைதான்!" என்று முகத்தைச் சுளுக்கினாள் காமு.

எனக்குச் சுருக்கென்றது. அப்பாவுக்கும் சங்கடமாகத்தானிருந்திருக்க வேண்டும்.

"காமு! அப்படிச் சொல்லாதே! உன் அம்மாஞ்சியைப் பற்றி உனக்குத் தெரி யாதா?" என்றார்.

"அம்மாஞ்சியைப் பற்றித் தெரியும். இந்தப் பெண்ணைப் பற்றித் தெரியாதே!" என்று 'வெடுக்' கென்று கூறிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

பிறர் உணர்ச்சிகளை மதிக்கத் தெரியாத அந்த ஜடத்திடம் என்ன சொல்ல முடியும்?

எங்கள் மனத்தில் எவ்வளவு சடுபாடு இருந் தாலும், பாடம் நடக்கும்போது நானும் லீலாவும் விரசமாக நடந்து கொண்டதே யில்லை. இந்த விஷயத்தில் லீலா என்னை விடக் கண்டிப்பானவள். மன உறுதியும் நிதானமும் அவள் பண்பில் ஊறியவை. எங்கள் அன்பு நிறை குடம் போல் முழுமை பெற்றிருந்தது. தரக் குறைவான சலசலப் புக்கு நாங்கள் எப்போதும் இடம் கொடுத் ததேயில்லை.

'தங்கமான பெண்' என்று அப்பாவிடம் கூடப் பெயரெடுத்து விட்டாள் லீலா. ஆனால் காமுவுக்கு மட்டும் அவள் மேல் நல்லபிப் பிராயம் கிடையாது. சில நேரங்களில் அவள் முகத்துக்கெதிரேயே அசந்தர்ப்பமாகப் பேசி விடுவாள். நானோ, அப்பாவோ அதுமாதிரிச் சந்தர்ப்பங்களில் சாமர்த்தியமாகப் பேச்சை மாற்றிச் சமாளிக்க வேண்டியதிருக்கும்.

ஆனால் அன்று மாலையில் நடந்து கொண் டது போல் அவ்வளவு அசட்டுத்தனமாகக் காமு அதற்கு முன் நடந்து கொண்டதில்லை.

சிந்தனைப் பின்னல்களால் வெகுநேரம் சஞ்சலத்தில் ஆழ்ந்திருந்தேன். கீழே, ஹாலி லிருந்து சுவர்க் கடிகாரம் ஒன்பது அடித்தது துல்லியமாகக் கேட்டது. அதைத் தொடர்ந்து புடவைச் சலசலப்பும் வளைக் கிலுகிலுப்பும் காதில் விழுந்தன. வழக்கமாக ஒன்பது மணிக்குக் கேட்கும் ஒலி தான்.

காமு பால் தம்ளருடன் அறைக்குள் நுழைந் தாள். அவளைக் கண்டதும் பழைய கோபம் என்னுள் பொங்கியது.

அவள் மௌனமாகத் தம்ளரை மேஜை யின் மீது வைத்தாள்.

"காமு!" என்று கத்தினேன்.

"என்ன?" என்று அலட்சியமாகக் கேட் டாள் அவள்.

"உனக்கு அறிவு இருக்கிறதா? அப்பாவின் சம்மதத்தின் பேரில்தானே லீலா நம் வீட் டுக்கு வந்து பாடம் கேட்கிறாள்? அவளை நீ காரணமில்லாமல் அவமானப்படுத்தினால் யாருக்கும் கோபம் வரத்தானே செய்யும்?"

"நான் ஒருத்தியைப் பற்றியும் பேசவில்லை. உன்னிடம் தான் பேசினேன். என் அம்மாஞ்சி

அட்டைப் படக் கதை

யிடம் என்ன வேண்டுமானலும் பேசுவேன்! யாரும் தடுக்க முடியாது!'' என்றாள்.

இப்படியோர் உலகம் தெரியாத அசட்டு ஜென்மமா? எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. அவளைக் கண்டித்து வைக்கா விட்டால் இதைவிட அவள் இன்னும் மோசமாக நடந்துகொள்வாள் என்று உள்ளுணர்வு அறிவுறுத்தியது.

'' என்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேசு! ஆனால் வீலா மனம் நோகும்படி பேசக் கூடாது. முட்டாள்தனத்துக்கும் அளவு இல்லையா?'' என்று கோபமாகக் கண்டித்துக் கூறினேன்.

'' ஓகோ, அவள் உனக்கு அவ்வளவு ஒசத்தியாய்ப் போய்விட்டாளா? அவளைப் பேசினால் உனக்குத் தாங்க முடியாதாக்கும்? எப்படியும் போங்கள்! எனக்கென்ன வந்தது?'' என்று படபடப்புடன் வார்த்தைகளைக் கொட்டி விட்டு, விருட்டென்று போய் விட்டாள். கோபத்தைக் காட்டுவதானாலும் அதைப் புரிந்து கொள்பவர்களிடம் காட்டினால்தானே பலனுண்டு?

மறுநாள் காலை. நான் கல்லூரிக்குப் புறப்பட்டு ஹால் பக்கம் வந்த போது அப்பா என்னிடம் வந்தார்.

'' ராமு! உன்னிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும். நேற்று நடந்த விஷயத்தையெல்லாம் காமு என்னிடம் சொன்னாள்'' என்று அவர் பேச்சை ஆரம்பித்ததும் எனக்குப் புரிந்துவிட்டது. பித்துக்குளித்தனமாக நடந்து கொண்டதுமல்லாமல் அப்பாவிடம் புகாரும் செய்திருக்கிறாள் காமு.

'' நீ காமுவைத் திட்டினாயாமே! அப்படி அவள் என்ன செய்து விட்டாள்?'' கொஞ்சம் காரமான குரலில்தான் அப்பா கேட்டார்.

'' நேற்று அவள் செய்தது....'' என்று இழுத்தேன்.

'' எல்லாம் தெரியும். ஒரு வயசுப் பெண்ணும் வாலிபனும் சகஜமாகப் பழகினால் யாரும் சந்தேகப்படத்தான் செய்வார்கள். அதற்காகப் பிறரைக் கோபித்துக் கொள்வது தவறு'' என்றார் அப்பா.

அப்பாவின் வார்த்தைகளில் ஏதோ உட்பொருள் இருப்பதாகத் தோன்றியது. 'அவரும் என்னைக்; குத்திக்;; காட்டுகிறாரா?' எனக்குச் சட்டென்று கோபம் வந்தது. எனக்கு எப்போதுமே கொஞ்சம் முன்கோபம் அதிகம். படபடவென்று பேசி விட்டேன்.

'' அப்பா, இதில் சந்தேகப்பட ஒன்றுமில்லை. நானும் வீலாவும் கல்யாணம் செய்து கொள்வதாகவே இருக்கிறோம். அவள் பரீட்சையில் தேறியதும் உங்களிடம் சொல்லலாம் என்று நினைத்திருந்தேன். முன்னாலேயே சொல்ல வேண்டியதாயிற்று. வீணாக எங்கள் மீது சந்தேகப்பட்டு மனத்தை அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை என்று உங்கள் மருமகளிடம் சொல்லுங்கள்'' என்றேன்.

என் பேச்சு அப்பாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும். சிறிது நேரம் அவர் மௌனமாக இருந்தார். எனக்குச் சற்று உறுத்தலாக இருந்தது. பேச வேண்டிய நேரத்தில், முறைப்படி சொல்ல வேண்டிய விஷயத்தை, அசந்தர்ப்பமாக உளறி விட்டேனே, என்ன?

அப்பா நிதானமாக, '' ராமு! நீ உன் இஷ்டப்படி கல்யாணம் செய்து கொள்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் நீ காமுவின் மனம் புண்படும்படி ஏதாவது பேசினால் என் மனம் தாங்காது'' என்று கூறிவிட்டுத் தம் வேலையைப் பார்க்கப் போய் விட்டார்.

நானும் கல்லூரிக்குப் புறப்பட்டேன். வாசற்புறத்தைக் கடக்கும் போது சமையலறைக்குள்ளிருந்து விசும்பல் ஒலி கேட்டது. ஒருகணம் என் மனம் பச்சாத்தாபத்தால் கலங்கியது. பிறகு சமாளித்துக் கொண்டு வெளியேறினேன்.

அன்று முழுவதும் எனக்கு நிம்மதி இல்லை. கல்லூரி முடிந்ததும் வீலாவைத் தனிமையில் சந்தித்தேன். காமு முந்திய நாள் நடந்து கொண்டது பற்றி வீலாவுக்கு உள்ளூற வேதனை இருக்குமோ என்று எனக்கு ஆற்றாமை. காமுவின் சுபாவத்தைப் பற்றி அவளிடம் எடுத்துச் சொன்னேன்.

வீலா சிரித்துக் கொண்டே, '' காமாட்சி அக்காள் அப்படி நடந்து கொண்டதற்குக் காரணம் அறியாமை என்று நினைக்கவில்லை. பெண் மனம் பெண்ணுக்குத்தான் தெரியும். உங்களைத் தனக்கென்று மனத்தில் வரித்துக் கொண்டிருக்கும் போது, நீங்கள் என்னிடம் சகஜமாகப் பழகுவதை அவர்களால் எப்படிச் சகிக்க முடியும்?'' என்றாள்.



கலைச் செல்வத்துக்கும், பக்திக்கும் பெருமை பெற்ற தஞ்சை நகருக்குக் காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் பிப்ரவரி 24, 25 தேதிகளில் விஜயம் செய்து சிறப்பித்தார்கள். தஞ்சை நான்கு ராஜ வீதிகளிலும் ஆசார்ய சுவாமிகளும், புதுப் பெரியவாளும் பட்டணப் பிரவேசம் செய்த காட்சி கண்கொள்ளாக் காட்சி. மக்கள் பக்திப் பரவசத்தோடு ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். பட்டணப் பிரவேசத்தை ஸ்ரீ ஆனந்தா வாட்ச் திரு கோபாலசாமி அய்யர், வக்கீல் ஸ்ரீ கணேச அய்யர், ஸ்ரீ விஸ்வாமித்ர ஆத்ரேயன், ஸ்ரீ ஜி. செட்டப்பா ஆகியோர் முன்னின்று சிறப்புடன் நடத்தி வைத்தார்கள்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. காமுவுக்கு அப்படியோர் எண்ணம் இருக்கக்கூடும் என்று நான் இதுவரை நினைத்துப் பார்த்ததேயில்லை.

"லீலா, எனக்கு மனநிலை சரியில்லை. இன்றைக்கு நீ டியூஷனுக்கு வரவேண்டாம்" என்று கூறிவிட்டு வீட்டுக்குத் திரும்பினேன்.

அறைக்குள் நுழைந்து சோபாவில் சாய்ந்தேன். தாங்க முடியாத மனச்சுமை. பெரிய பிரச்னையொன்றுக்கு என்னை அறியாமலே ஆதாரப் பொருளாகி விட்டேனே என்று மனம் தடுமாறியது.

காமு டிபனுடன் என் அறைக்குள் வந்தாள். மேஜை மீது டிபனை வைத்துவிட்டு, வெளியேறத் திரும்பினாள். என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. என் அறைக்குள் வந்து, என்னிடம் எதுவும் பேசாமல் அவள் வெளியேறுவது அதுதான் முதல் தடவை. அவளைக் கூர்ந்து கவனித்தேன்.

கண்கள் சிவந்திருந்தன. முகம் வீங்கியிருந்தது. வெகு நேரம் அழுதிருக்கிறாள்!

"காமு!" என்று அழைத்தேன்.

வாசல்வரையில் போய் விட்டவள் நின்றாள். ஆனால் பதில் பேசவில்லை.

"காமு! ஏன் இப்படி இருக்கிறாய்? அழுதாயா?" என்று பரிவோடு கேட்டேன்.

அவள் என்னை ஒரு விநாடி ஏறிட்டுப் பார்த்தாள். அதற்குள் அவள் கண்கள் குளமாகி விட்டன. மறுவிநாடி வேகமாகப் போய்விட்டாள். அவள் மாடிப்படி இறங்கும்போது கேவிக்கேவி அழுதது என் காதில் விழுந்தது.

பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தேன். மனக் கொந்தளிப்பு அதிகமாகியது. லீலா கூறியது உண்மையாக இருக்குமோ?

அப்படியே இருந்தால்...? என் மனம் வேதனையால் பரிதவித்தது.

கள்ளம் கபடமற்ற அந்தப் பேதை விபரீதமான ஆசையை மனத்தில் வளர்த்து வருகிறாளே, அதன் பயங்கர முடிவை அவளால் தாங்கிக் கொள்ள முடியுமா?

இரவு வெகு நேரம் இருக்கும். அப்பா வாடிய முகத்துடன் என் அறைக்கு வந்தார். என் மனம் துணுக்குற்றது. முக்கியமான காரணமில்லாமல் அவர் மாடியிலிருந்து என் அறைக்கு வரமாட்டார்; அதுவும் இரவில்.

அவர் என் எதிரில் உட்கார்ந்தார். சிறிது நேரம் எதுவும் பேசவில்லை.

"என்ன அப்பா?" என்று விசாரித்தேன்.

"காமு நாளைக்கு ஊருக்குப் போக வேண்டும் என்கிறாள்" என்று கூறிவிட்டு என் முகத்தை வெறித்துப் பார்த்தார். 'காரணம் தான் உனக்குத் தெரியுமே' என்று கேட்பது போலிருந்தது அப் பார்வை. அதிர்ச்சியால் எனக்குப் பதில் சொல்லத் தோன்றவில்லை.

"ராமு! என் மனத்தில் ஓர் ஆசை வைத்திருந்தேன். ஆனால் காலையில் நீ உன் எண்ணத்தைச் சொன்ன பிறகு என் ஆசையைத் தெரிவிப்பது தவறு என்று தோன்றுகிறது. இருந்தாலும் என் மனத்திலுள்ளதையும் சொல்லி விடுகிறேன். நீ லீலாவை மணந்து கொள்வதில் எனக்கு ஆட்சேபனை யில்லை. லீலா உத்தமமான பெண். ஆனால் நான்தான் அவசரப்பட்டு விட்டேன். உன் மனத்தைப் புரிந்து கொள்ளாமல் அந்தப் பேதை காமுவின் மனத்தில் ஆசையை உண்டாக்கி விட்டேன். 'மாமா! நான் போயிட்டு வரேன். உங்களோடு என்றைக்கும் இருக்கும் பாக்கியம்


தீண்டாமை எங்கே?
அறியாமை
தெளிவு
ஸமம் ஸர்வேஷு பூதேஷு
விநச்யத்ஸ்வவிநச்யந்தம்
அனைத்துயிரிலும் கொண்டு
அழிவும் ஆன்மா ஞானி
அறிந்தும் மூடப் அல்லாது


பூச்சாண்டியைப் போல்தான்
அறியாமை
திஷ்டந்தம் பரமேச்வரம் |
ய: பச்யதி ஸ பச்யதி ||
உடலில் அழியாமல் சமதன்மை
நிற்பதைக் காண்பவனே
யாவான்
தெளிந்தும்
பழக்கமே
வேறில்லை
தெளிவு
தமிழ் நாடு ஹரிஜன சேவக சங்கம்
சென்னை – 6

எனக்குக் கிடைக்கவில்லை. உங்களுக்கு இனி மேல் பணிவிடை செய்யக் கொடுத்து வைத்த பாக்கியசாலியைச் சீக்கிரம் வீட்டுக்கு அழைத்துக் கொள்ளுங்கள். கல்யாண 'வேலைகளைக் கவனிக்க அம்மாவை அனுப்புகிறேன்' என்று அவள் கண்கலங்கச் சொன்னபோது என் மனம் வெதும்பிப் போச்சு, ராமு!''

அதற்கு மேல் அப்பாவால் பேச முடியவில்லை. பலவந்தமாகத் தம் உணர்ச்சிகளை அடக்கினார். அவரையும் மீறிக் கண்கள் நீரைச் சிந்தி விட்டன. எளிதில் உணர்ச்சிவசப்படாதவர் அப்பா. ஆசாபங்கம் அவர் கண்களிலும் நீரை வரவழைத்து விட்டது. என் உள்ளம் நெகிழ்ந்து உருகியது.

''அப்பா! நீங்கள் தடை சொல்ல மாட்டீர்கள் என்ற எண்ணத்தில் விமலாவுக்கு வாக்குக் கொடுத்து விட்டேன். உங்களுக்குச் சம்மதம் இல்லையென்றால் சொல்லுங்கள்'' என்றேன். அப்பாவின் தடுமாற்றத்தை என்னால் பொறுக்க முடியவில்லை.

ஆனால் அவர் திடீரென்று என்ன நினைத்தாரோ? ''ராமு! நான் படியேறி வரும்போது, உன் மனத்தை மாற்றிக் கொள்ளச் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் இப்பொழுது உன்னை வற்புறுத்த மனமில்லை. நீயும் காமுவும் எனக்கு இரு கண்கள். ஒருவருக்காக மற்றவர் ஆசையைத் தடை செய்யவிரும்பவில்லை. உன் விருப்பம் போலவே செய்வோம்'' என்று கூறிச் சென்றார்.

என் மனம் அலை பாய்ந்தது. என் ஆசைக்காகத் தம் ஆசையை அடக்கிக் கொள்கிறார் அப்பா. என் ஆசையை மதித்து ஊருக்குப் புறப்படுகிறாள் காமு. ஆனால் நான் மட்டும் எனக்காக வாழ வேண்டுமா?

இரவு தூங்க வெகு நேரமாகி விட்டதில் மறுநாள் கண் விழிக்கும்போது நன்றாக விடிந்து விட்டது. வீட்டின் வெளி வாசற்புறத்தில் அப்பாவின் குரல் கேட்டது. எழுந்து பார்த்தேன். வாசலருகே ஒரு வண்டி நின்று கொண்டிருந்தது. வண்டிக்காரனிடம் அப்பா என்னவோ சொல்லிக் கொண்டிருந்தார்.

என் இதயம் படபடத்தது. வேகமாகக் கீழே இறங்கியவன் மாடிப்படியிலேயே தயங்கி நின்றேன். குளித்து விட்டு ஈரம் உலராத தலையில் ஒற்றை ரோஜா மலரைச் செருகியவாறு, ஏதோ ஒன்றைக் கையில் ஏந்தி, அப்பாவின் பூஜை அறைக்குள் நுழைந்தாள் காமு. அவள் என்னைக் கவனிக்கவில்லை.

அவள் பூஜை அறைக்குள் நுழைந்ததும், நான் மெதுவாக இறங்கி அறை வாசலில் நின்று கவனித்தேன். அந்தக் காட்சி என் நெஞ்சைக் கலக்கியது.

நேற்று வரையில் ஹாலில் தொங்கிக்கொண்டிருந்த என் புகைப்படம் காமுவின் கையில் இருந்தது. அதைச் சுவாமி படத்தின் முன் வைத்து விட்டு மண்டியிட்டு வணங்கினாள். பின் எழுந்து பயபக்தியுடன் என் படத்தை எடுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள். பிறகு சட்டென்று புடவை முன்றானையை வாயில் திணித்துக் கொண்டு திரும்பினாள்.

நான் நெஞ்சத்தை அமுக்கிப் பிடித்துக் கொண்டு ஒதுங்கி நின்றேன். அறையிலிருந்து வெளியேறியவள் என்னைக் கவனிக்காமலே தன் அறைக்குச் சென்றாள். நானும் தொடர்ந்தேன். அவள் அறை சுத்தமாகக் காலி செய்யப்பட்டிருந்தது. அவளுடைய கைப்பெட்டி மட்டும் திறந்திருந்தது. அந்தப் பெட்டிக்குள் என் படத்தை வைத்துப் பூட்டினாள்.

''காமு!'' என்றேன்.

அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தாள். ஆனால் அவள் கண்களில் நான் எதிர்பார்த்தது போல் கண்ணீர் இல்லை. ஒரு விநாடிக்குள் தெளிந்திருக்கிறாள். ''எங்கே போகிறாய், காமு?'' என்று நாத்தழுதழுக்கக் கேட்டேன்.

''ஊருக்குப் போகிறேன், அம்மாஞ்சி!'' அவளுக்கே உரித்தான கணீரென்ற சிரிப்போடு பதில் சொன்னாள். ஒரு வருடத்துக்கு முன் இந்த வீட்டில் காலடி வைத்தபோது சிரித்த களங்கமற்ற சிரிப்பு. வேதனையைச் சிரித்து மறைக்கிறாளா?

''அம்மாஞ்சி! நீ கும்பகர்ணன் மாதிரி தூங்கிக் கொண்டிருந்தாய். தூக்கத்திலிருக்கும் போது எழுப்பினால்தான் உனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருமே! அதனாலே வண்டி புறப்படும்போது சொன்னால் போதும் என்று நினைத்தேன்! முன்னாலேயே சொல்லலைன்னு கோபமா?''

நான் அவளை ஊடுருவிப் பார்த்தேன். பிடிபடாத புதிராக நின்றாள். பூஜை அறைக்குள் குலுங்கிக் குலுங்கி அழுதவள் இவ்வளவு நேரத்துக்குள் ஒன்றுமே இல்லாதது போல் அல்லவா பேசிச் சிரிக்கிறாள்?

''காமு, நீ போகக் கூடாது!'' என்றேன்.

''ஏன் அம்மாஞ்சி?''

''நீ என்றும் என்னோடு இருக்க வேண்டும். நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளுகிறேன், காமு!''

''நான் போகக் கூடாது என்பதற்காக என்னைக் கல்யாணம் செய்துக்கப் போறியா, அம்மாஞ்சி?'' என்றாள் சிரித்தபடியே. அவளுடைய பேச்சும் சிரிப்பும் எனக்குத் திகைப்பாக இருந்தன.

''நேற்று மாமா சொன்னதுக்காக என் மேல் பரிதாபப்பட்டுக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்; இல்லையா அம்மாஞ்சி? நாளைக்கு நமக்குக் கல்யாணம் நடக்கப் போகுதுன்னு வைச்சுக்குவோம். அப்போ எவளாவது வந்து உன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லிக் கேட்டாள், என்னை விட்டு விட்டு அவளைப் பண்ணிக்கொள்வாயா அம்மாஞ்சி?''

யாரோ சாட்டையால் கணீரென்று அடிப்பது போலிருந்தது எனக்கு.

''அம்மாஞ்சி! உன் நிலையில் நான் இருந்தால் என்ன செய்வேன் தெரியுமா? ஒருத்தர் மேல் நான் அன்பு வைத்து விட்டால், யாருக்காகவும் அதை மாற்ற மாட்டேன். அதுதான் உண்மையான அன்பு அம்மாஞ்சி! நான் வரட்டுமா? உன் கல்யாணத்துக்கு நான் கட்டாயம் வருவேன், அம்மாஞ்சி!'' என்று கூறி விட்டுப் புறப்பட்டு விட்டாள் காமு.

திக்பிரமையடைந்து சிலையாக நின்று விட்டேன். அவளை ஏற்றிக் கொண்டு போன வண்டி சிறிது நேரத்தில் என் கண்களிலிருந்து மறைந்து ஓடிவிட்டது. அவள் நினைவு மட்டும் என் நெஞ்சில் நிலைபெற்று விட்டது.

கால்கேட்டின் மூலம்
நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



விஞ்ஞானிக்குழுவே தேய்ப்பீச் கால்கேட் டென்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10-ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்கும் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிசோதனைகள் நிரூபித்துள்ளன! இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு! சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது — சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டென்டல் கிரீமினால் உங்கள் பற்களை சுத்தம் துலக்குங்கள். இதன் விசேஷம், ஊடுருவும் தன்மையது. முன்னால் நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டின் ருசிமிக்க நறுமணத்தினால், குழந்தைகள் ஆர்வமுடன் பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது

- ✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த நன்மைகள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCG.33QT-TAM.

சர்க்கஸ் பாருங்கள்...!

"சிந்துர மதக்கரியை வசமாய் நடத்த லாம், ரேடி வெம்புலி வாயையும் கட்டலாம், ஒரு சிங்கம் முதுகினிற் கொள்ளலாம்...." என்னும் பாடலின் தாத்பரியத்தை சென்னைக்குப் புதிதாக வந்திருக்கும் கிரேட் ஈஸ்டர்ன் சர்க்கஸில் நிதரிசனமாகக் காண முடிந்தது.

வீர தீரத்தில் சிறந்தவனைச் சிங்கத்துக்கும், புலிக்கும் உதாரணம் காட்டுகிறோம்; மாவீரனின் நடையை மத்தகஜத்தின் நடையோடு ஒப்பிட்டு மகிழ்கிறோம். இப்படி வன விலங்குகளிடம் என்றுமே நமக்குத் தனியொரு மதிப்பு இருந்து வந்திருக்கிறது. அத்தகைய சிங்கத்தையும், புலியையும், யானையையும் மனிதன் தனது அறிவின் ஆற்றலினால் அடக்கித் தன் வழிப்படுத்துவது காண வேண்டிய காட்சியல்லவா ?

ஒரு நாடகம் நடத்துவதை விட, ஒரு சினிமாப் படம் எடுப்பதை விட, ஒரு சர்க்கஸ் கம்பெனி நடத்துவது மிக மிகக் கஷ்டமான காரியம். நாடகம், சினிமாக்களிலெல்லாம் நடிக, நடிகையர்களோடு மட்டும் பழகினால் போதும்; ஆனால் சர்க்கஸில் அப்படி முடியாது. நடிக, நடிகையர்களை ஏராளமாக வைத்துக் கொண்டு போராடுவது போதாதென்று கொடிய வன விலங்குகளோடு வேறு திண்டாட வேண்டியிருக்கிறது. "கல்யாணம் பண்ணிப் பார்", "வீட்டைக் கட்டிப் பார்" என்னும் பழமொழியோடு "சர்க்கஸ் நடத்திப் பார்" என்ற புதுமொழியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சர்க்கஸில் வித்தை செய்பவர்கள் நாற்பது பேர்கள் என்றால், மேற்படி வித்தைகளுக்கு உதவி செய்ய நானூறு பேர்கள் வேண்டியிருக்கிறது.

மின்சார விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் மின்னற் கூட்டங்கள் போல் ஆரணங்குகள் தோன்றி ஒற்றைச் சக்கர சைக்கிள் வண்டிகளில் அணி அணியாகப் பவனி வருகின்றனர். ஓர் இளைஞனின் சைக்கிள் சவாரிச் சாகஸங்கள் பிரமிப்பை ஊட்டுகின்றன. ஒற்றைக் கயிற்றுப் பாதையில் ஏறி வித்தை நடை பயிலும் சுந்தர மடந்தை பீங்கான் கோப்பை, தட்டுகளை ஒரு காலினாலேயே எடுத்து ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கொண்டே போய்ப் பிறகு கீழே ஒவ்வொன்றாக இறக்கும் காட்சி நன்றாயிருக்கிறது.


ஓர் இளம் பெண் சார்பில்லாத ஏணியில் ஏறி நின்றுகொண்டு தன் தலையில் பல சிறுமிகளை ஏறி நிற்கச் செய்து பல வித்தைகள் செய்து காட்டுகிறாள். அதுவும் பார்க்க வேண்டிய காட்சிகளில் ஒன்று.


மேலும் கீழுமாக ஆடும் பலகையில் ஒவ்வொருவராக ஒருபுறம் நிற்க வைத்து, மறுபுறம் ஒரு பெண் குதிக்கிறாள். அந்த அதிர்ச்சியில் நிற்பவர்கள் ககன மார்க்கமாகப் பந்து போல் எழும்பி நாற்காலியில் கனஜோராக உட்கார்ந்து கொள்வதைப் பார்க்கச் சிறிதும் அலுப்பு உண்டாக வில்லை.

வித்தைகள் காட்டும் கலைஞர்களுக்கு இடையில், சர்க்கஸ் 'பபூன்'கள் குறுக்கிடுகின்றனர். அது எனக்குச் சினிமாக் கதாநாயகனோடு வந்து அசட்டுப் பிசட்டென்று தமாஷ் செய்ய முயலும் ஹாஸ்ய நடிகர்களை நினைவூட்டியது. சில சர்க்கஸ் குழுக்களில் நல்ல 'காமெடியன்'கள் இருப்பார்கள். இங்குள்ள 'காமெடியன்'களை அதிகம் பாராட்டுவதற்கில்லை.

சர்க்கஸ்களிலேயே பார் வேலைகள் முக்கியமானவை. அந்த வேலைகள் திறமையாகவும், லாகவமாகவும் நடத்திக் காட்டுகின்றனர்.

அரப் பகதூர் என்னும் வீரப் பெருமகன் செய்யும் வீரதீர சாகஸங்கள் அருமையானவை. வலிவும் வனப்பும் கொண்ட அந்த ஆண்மகனின் சாதனை 420 பவுண்டு கனமுள்ள இரும்பு உருளையைப் பற்களினு





பேராசிரியர் கல்கி அவர்களுடைய பல கதைகளை நல்ல முறையிலே நாடகமாக்கி அரங்கேற்றி வரும் ''கல்கி நாடக மன்ற''த்தினர் இம்மாதம் பதினேழாம் தேதி முதல் ஆறு நாட்களுக்குப் புது டில்லியில் தங்கள் திறமையைக் காட்டப் போகிறார்கள். நாடக விழாவிலே பங்குபற்றப் புது டில்லிக்குப் பயணமாகும் இந்தக் குழுவினருக்கு 'அவ்வை' திரு டி. கே. ஷண்முகம் ஆசி கூறி வெற்றி பெற வாழ்த்தினர்.

லேயே பற்றித் தூக்கியது ஒன்று; மற்றொன்று, தேகப் பயிற்சியிலும் திறமை பெற்று விளங்கும் தமது தசையின் பலத்தை லாகவமாகக் காட்டியது. ஜன சமுத்திரமாக விளங்கிய சர்க்கஸ் கூடாரத்தில் அந்தக் காட்சிக்கு இருந்த பேராதரவு ஓயாத கரகோஷத்திலும் விளங்கியது.

சவுக்கடிக்குப் பயப்படும் மிருகேந்திரர்களையும் புலிகளையும் பார்க்கும்போது எனக்கு ஒரு புறம் பரிதாபமா யிருந்தது. ஒரு வேளை, சிங்கம், புலிகளின் வீரதீரங்களைப் பற்றிப் புத்தகங்களில் படித்தவை யெல்லாம் பொய்யாகப் புனைந்து கூறப்பட்டவையோ என்று சந்தேகம்கூட உண்டாயிற்று.

ஒரு யுவனும், யுவதியும் மோட்டார் சைக்கிள்களில் ஏறிக்கொண்டு அசுர வேகத்தில் மேலும் கீழுமாக இரும்புக் கூண்டுக்குள் சுற்றி வரும் காட்சி தரத்தில் முதலாக விளங்குகிறது.

ஆதி காலத்தில், சமூகத்தை ஏமாற்றுகிறவனைத் தண்டிக்க அரசாங்கத்தில் ஒரு விசித்திரமான வழியைக் கையாண்டார்கள். அவன் வீட்டில் ஒரு யானையைக் கொண்டு போய்க் கட்டி, அதற்குத் தீனிபோட்டு நன்கு பராமரிக்கும் பொறுப்பை அவனிடமே ஒப்படைத்து விடுவார்களாம். யானையை வளர்ப்பதற்குள் அவன் பாடு திண்டாட்டமாகி விடும். ஒரு யானைக்கே இப்படியென்றால், பல யானைகள், சிங்கங்கள், புலிகள், கரடிகள், குதிரைகள் ஆகியவற்றைக் கட்டிக் கொண்டு அவதிப்படும் சர்க்கஸ் நிர்வாகிகளை எவ்வளவுதான் பாராட்டக் கூடாது? அத்தனை பெரிய குழுவை வைத்துக் கொண்டு நிர்வகிப்பதே ஒரு பெரிய சாகஸம் என்று கூற வேண்டும்.

ஒவ்வொரு காட்சிக்கும் தேவையான பலவிதமான பொருள்களைக் கண நேரத்தில் கொண்டு வந்து, பிறகு மறு கணத்தில் வந்த சுவடு தெரியாமல் அவைகளை உள்ளே கொண்டு போய் விடுவதும் சர்க்கஸ் வேடிக்கைகளுக்குள் மிகப் பெரிய வேடிக்கையாக எனக்குத் தோன்றியது.

சினிமாவில், படத் தயாரிப்பின் போது நடிக, நடிகையர்கள் சிரமப்பட்டு நடித்து விட்டால் போதும். அப்புறம் அந்த நடிகர்களில் யாரேனும் இறந்து விட்டால் கூடக் கவலையில்லை. ஆனால் சர்க்கஸில் அப்படி முடியாது. ஒவ்வொரு காட்சியிலும், உழைத்து உயிரைக் கொடுத்தாக வேண்டும். ஒரு குறிப்பிட்ட வித்தை செய்யும் வீரர் இல்லையென்றால் அந்த வித்தையும் இல்லையென்றாகி விடும். சினிமாவில் கையாளப்படும் மந்திர தந்திரங்களும், மாயஜாலங்களும் சர்க்கஸில் பயன்படமாட்டா. ஒவ்வொரு வித்தையையும் அரும்பாடுபட்டுப் பல நாட்கள் பயில வேண்டும். ஆகவே, சர்க்கஸ் பார்க்கிறவர்கள், மனித உழைப்புக்கு மதிப்புக் கொடுக்கும் மனத்துடன் பார்த்தால் அதை உண்மையாகப் பாராட்டத் தோன்றும். — ஸோமாஸ்



புஷ்பத்தைப் போன்ற புது உணர்ச்சியைத் தருகிறது.

மிலேடி

டால்க்

முகத்துக்கும் பூசும் பெளடராக உபயோகிக்கலாம். இது உடலை மனோகரமாகவும் சுத்தமாகவும் மழமழவென்றும் இருக்கும்படி செய்கிறது. ஷவரத்துக்குப் பிறகும், ஸ்நானத்துக்குப் பின்பும் உடல் மென்மையாவது போல் டால்க் பெளடர் செய்கிறது



இது ஸ்பென்ஸர் தயாரிப்பு

நீங்கள் உறங்கும்போதே

ஆஸ்தமா சளி கரைகிறது

மூச்சுத் திணறல், இருமல், சிரமப்பட்டு மூச்சு விடுதல், சுவாசம் தடைப்படுதல், ஆஸ்த்மா, ப்ராங்கைடீஸ், ஜலதோஷம், குளிர் சுரம் முதலிய உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இப்பொழுது மெண்டாகோ (Mendaco) சாப்பிட்டு நிவாரணம் அடையலாம். இந்த நவீன விஞ்ஞான அமெரிக்க மருந்து, இரத்தத்தின் மூலமாக சுவாசப் பைகள் சுவாசக் குழாய்கள் மற்றும் மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் மற்றும் சிரமப்பட்டு மூச்சு விடுதல் இல்லாமல் சுகமாகச் சுவாசித்துக் குழந்தைபோல் தூங்கலாம். பூரண திருப்தி உங்களுக்கு அது நிச்சயமாக அளிக்கும்.

உங்கள் சருமத்தை சுத்தமாக வையுங்கள்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தால் முகப்பருக்கள் எல்லாம் மறைந்து விடுகின்றன. இன்றிரவு நிக்ஸோடர்ம் (Nixoderm) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும், வழவழப்பாகவும் மாக மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்ஸோடர்ம்(Nixoderm) சருமத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள், கட்டிகள் செந்நிறத் தழும்புகள், மேலாகப் பரவும் படை, படர்தாமரை, வெடிப்புகள் முதலிய உபாதைகளுக்குக் காரணமான கிருமிகளையும் பூச்சிகளையும் அழிக்க விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய துவாரங்களில் இருக்கும் பூச்சிகளையும், கிருமிகளையும் அழித்தாலன்றி உங்கள் சரும உபாதைகள் விலகா. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடர்ம் (Nixoderm) வாங்குங்கள். முகப்பருக்களை மறையச் செய்து சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் அது இருக்கச் செய்யும் என்ற பூர்ண நம்பிக்கையுடன் நிக்ஸோடர்ம் (Nixoderm) வாங்குங்கள்.

வட்ட மேஜை



நம்முடைய பாக்கியம்

"என்னம்மா நீ! உன் விளையாட்டுக்களுக்கு நேரம் பொழுது என்று ஒன்றுமே கிடையாதா? பசி காதை அடைக்கிறது. முதலில் சாப்பாடு போடுவாயா? இப்போதுதானா உன் நையாண்டித்தனம்!" என்றான் பகவான்.

ஈரேழு லோகத்திலுள்ள ஈ எறும்பு என்னுயிரம் ஜீவராசிகளுக்கும் படியளந்து காக்கும் பிரபு! அவனுக்குப் பசியாம்! அதற்குச் சோறு போடும்படி துரோபதையிடம் இப்படியொரு தரம் கேட்க நேர்ந்ததாம்.

அநியாயக்காரனின் சூழ்ச்சி வலையில் அகப்பட்ட துர்வாஸ முனிவரால் பஞ்சபாண்டவருக்குப் பெரியதோர் ஆபத்து வரவிருந்தது. ஏன்? தர்மத்துக்கு வந்த ஆபத்து எனலாம். அதைத் தடுத்து தர்மத்தை நிலைநிறுத்தி உலகம் உய்ய வகை செய்யக் கனிந்த மனத்துடன் முன்வந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் துரோபதையிடம் அன்னமிடும்படி யாசித்தான். இது பாரதக் கதை.

"இல்லையே!" என்ற துரோபதையை, முன் சொன்ன முறையில் சலித்துக் கொண்டான் பகவான்.

பிறகு அக்ஷய பாத்திரத்தில் ஒட்டிக்கிடந்த ஒரே ஒரு பருக்கையை உண்டு பாண்டவரைக் காப்பாற்றினான். துரோபதை பாக்யசாலி. அவளை முன்னிட்டு பகவான் பாண்டவர்களையும்—தர்மத்தையும்—உலகையுமே காத்தான்.

மனிதனிடமோ, தெய்வத்திடமோ வேண்டிப் பெறக் கிடைப்பது ராஜாஜி அவர்களுக்கு என்ன இருக்கிறது? அவர் ஏற்காத பதவியா? பெறாத கௌரவமா? உலகில் அநுபவிப்பதற்குள்ளதெல்லாம் பெற்று அநுபவித்து நிறைவு கண்டவர்.

ஸ்ரீ இன்று அவர் சுதந்திர நிதிக்குக் கொடுத்து உதவும்படி யாசிப்பதைப்பார்த்தால் ஸ்ரீகிருஷ்ணன் துரோபதையிடம் பசிக்கு அன்னம் யாசித்தது போலில்லையா? நம்முள் எத்தனை பேர்கள் துரோபதை செய்த பாக்யத்தைச் செய்திருக்கிறோமோ!

சென்னை-6
1-3-61
ருக்சாமாமா

பரிசுப்பத்திரப் பித்தலாட்டம்

பரிசுப் பத்திர வியாபாரத்தை அரசாங்கம் எத்தெத்த வழிகளில் செய்கிறது என்பதற்கு இதோ ஒரு சான்று.

ஆசிரியர்களுக்குச் சமீபத்தில் சம்பளத்தை அதிகரித்தார்கள் என்ற பேச்சு அடிபடுகிறது. ஆனால் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆசிரியர்களுக்கு இந்த மாவட்டத்தில் இன்னும் கூடுதல் சம்பளப் பாக்கி தரப்படவில்லை. (1960 ஜூனிலிருந்து) இந்த நிலைமையில், ரூபாய் நூறு சம்பளம் வாங்கும் என்னைப் போன்ற ஆசிரியர்கள் குறைந்தபட்சம் இந்த வருடம் ரூபாய் பத்துக்காவது பரிசுப் பத்திரம் வாங்க வேண்டுமென்று கட்டாயம். இஷ்டம் உண்டா இல்லையா என்பதைக் கேட்பாரில்லை. சம்பளத்தில் அந்தப் பணத்தைப் பிடித்துக் கொண்டு தான் பாக்கியைத் தந்தார்கள். ஏதோ ஒவ்வோர் ஆசிரியரும் மாதா மாதம் செலவு செய்ய முடியாமல் பணத்தை வைத்துக் கொண்டு தவிப்பதாக எண்ணம் போலும்!

ஓட்டு வேட்டையாடும் காங்கிரஸ் சர்க்காரும், அதைத் தாங்கும் தூண்களாகிய நிர்வாக இயந்திரமும் இதைக் கவனித்து, இனியாவது ஏழைகளை வாட்டித் திட்டப் பத்திரத்தைக் கட்டாயமாக வாங்கும்படி சொல்லாமல் இருப்பார்களா?


இராணிப்பேட்டை
3-3-61
ஓர் ஏழை ஆசிரியர்


விற்பனை விபரீதம்

நமது அரசியலார் பரிசுத் திட்டம் என்ற ஒன்றைக் கண்டுபிடித்து 'பத்திரங்கள்' விற்பனை செய்து வருகின்றனர். இதனைச் சமீப காலத்தில் அதிகாரத்தில் உள்ளோர் கட்டாய முறையில் விநியோகம் செய்ய முற்பட்டு விட்டனர். சிறு சேமிப்புத் திட்டத்தின் போது கிராமாதிகாரிகளை மிரட்டிப் பணம் சேர்த்தனர். இப்பொழுது கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களையும் சந்திக்கிழுத்து விடுகின்றனர். உதாரணமாக, திருச்சி மாவட்ட முசிரி பஞ்சாயத்து யூனியனில் செகண்டரிகிரேட் ஆசிரியர்கள் பத்து ரூபாய் வீதமும், ஹையர் கிரேட் ஆசிரியர்கள் ஐந்து ரூபாய் வீதமும் பரிசுப் பத்திரங்கள் வாங்கக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். விலைவாசி ஏற்றத்தால் அவதியுறும் ஆசிரியர்கள் அதிகாரத்தைக் கண்டு அஞ்சி நடக்க வேண்டியுள்ளது. மதிய உணவு, பள்ளிச் சீரமைப்பு முதலிய திட்டத்துக்காக மடிப்பிச்சை ஏந்தியவர்கள் இப்பொழுது பரிசுப் பத்திரங்களை மக்களிடம் விற்க வேண்டுமாம். 'விதி'யை எண்ணி வீதியெல்லாம் உலா வருகின்றனர் ஆசிரியர்கள். அந்தோ, பரிதாபம், ஆசிரியர் சமுதாயம்!


கடந்த ஒருவார காலமாக அதிகாரிகளைக் கண்டு மக்கள் தலைமறைவாகச் செல்லுகின்றனர். காரணம் கடமையை ஆற்ற வேண்டியவர்கள் பத்திரங்களோடு மக்களைச் சந்திக்கச் செல்கின்றனர். வறுமைப் பேயின் பிடியில் சிக்கிய உழவர்ப் பெருமக்களிடம் கட்டாய முறையில் பரிசுப் பத்திரங்கள் விற்கப்படுகின்றன. பரிசுப்பத்திரங்கள் விற்பதில் அதிகாரத்தில் உள்ளோரும் பஞ்சாயத்து யூனியன்களும் அதிகாரத்தைப் பயன்படுத்தலும் கட்டாய முறையைக் கையாளுதலும் மிக வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய செயல்களாகும்.

தாத்தையங்கார்பேட்டை
6-3-61
புகழேந்தி


மரகதச் சிலை
கதை: வாண்டுமாமா
சித்திரம்: விநு
-10-
குடிகேடி நாககந்தி, தப்பி ஓடி விடலாமென்று பார்க்கிறாய்? நீ இழைத்த கொடுமைகளுக்கு உன்னைச் சித்திரவதை செய்ய வேண்டும்.
நாதா, பாவம் பெண் பிறப்பு. விட்டு விடு.
நிர்மலா, இவள் பெண்ணே அல்ல. பேயினும் கொடியவள். இவளிடம் இரக்கமே காட்டக் கூடாது...
அப்படியானால் இந்தத் தண்டனையே போதும்.
ஒரு பெண் அழகென்று கர்வப்படக் கூடியது அவளது கூந்தல். ஆகவே அதை வெட்டி அவமானப் படுத்த நினைத்தான். ஆனால் நடந்தது? நாக கந்தியின் விகார ரூபமான குடுகுடு கிழவியானாள். அவள் உண்மை வடிவம் அதுதான்.
தன் மந்திர சக்தியினால் வயதையும் உருவையும் மாற்றிக் கொண்டு அதன் ரகசியத்தைக் கூந்தலில் வைத்திருந்தாள் நாககந்தி. கூந்தல் அறுபட்டதும்
என்ன இருந்தாலும் கோலமாற்றியதற்கு என் தந்தை உங்களைப் பழி வாங்கியே தீருவார்.
கோட்டைக்குள் சிறைப்பட்டிருக்கும் இளவரசரைப் போய்ச் சீக்கிரம் விடுவித்தாக வேண்டும். அவர் அங்கு என்ன துன்பப்படுகிறாரோ?



கோட்டையின் மேல் தளத்தில் எல்லாம் தேடியும் ஆதித்தனை எங்கும் காணவில்லை.
இவ்வளவு பெரிய கோட்டைக்குள் உயிர் இயக்கத்தையே காணோமே! அரக்கன் ஆதித்தனை எங்கு சிறை வைத்திருப்பான்? இந்த அறை ஒன்றுதான் பாக்கி.
அந்தச் சிலையில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.
குள்ளன் காளி, சிலையின் கையைப் பிடிக்க, அது கீழே இறங்குகிறது. அதே சமயம் பாதாளச் சிறைக்குச்
செல்லும் வழியும் திறக்கிறது. அதன் வழியே உள்ளே சென்றவர்கள், ஆதித்தனைக் கண்டு ஆனந்தமடைகிறார்கள்.
பல நாட்களாகி விட்டதால் ஆதித்தனின் உடலில் உள்ள நாகரத்தினத்தின் மந்திரப் பொடியின் மகிமை குறைந்து விட்டது. பழைய பலமும் அவன் உடலில் தோன்ற ஆரம்பித்திருந்தது. காளியின் சேவைகள் அவன் உடலில் புதிய பலத்தையும் சோபையையும் சேர்த்தன. ஆனால் அவன் உள்ளம்? நிர்மலா பத்மகோபனுடன் சகஜமாகப் பழகுவதைத் தவறாக எடை போடுகிறது ஆதித்தனின் மனம்.


நடுவில் வந்தவளிடம் காதலெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறானே என்னிடம் முன் போலப் பழகுவதில்லை
நிர்மலா புதியவளின் மோகத்திலே மூழ்கிக் கிடக்கும் உனக்கு இனி என் உதவி தேவை இல்லை...
ஆதித்தா, அந்தப் பெண்ணின் உள்ளத்தை இப்படிச் சில சொற்களால் புண்படுத்தாதே. உன்னை விடுவிக்க அவள் தவித்த தவிப்பு? இன்று நீ இப்படி இருப்பதற்கு...
ஆதித்தா அவசரப்பட்டுவிட்டாய் ஆத்திரத்திலே அறிவையும் திறனையும் இழந்துவிட்டாய்.
உன் உதவியால் என்று அவன் உள்ளத்திலும் இடம் பெறப் பார்க்கிறாயே -இல்.
இப்போது என்னைப் பார். நீ நினைப்பது போல நிர்மலாவின் உள்ளத்திலே இடம் பெறும் தகுதி எனக்கு உண்டா பார்!
ஆ! என்னைப் போன்ற பெண்ணா நீ...
என்ன... என்ன? ஆண் வேடம் பூண்ட பெண்ணா புஷ்பராணி? என்னால் நம்பவே முடிய வில்லையே!
தொடரும்



வேப்பம் சக்தி இணையற்றது

2,000 வருட காலமாக இதன் கிருமிநாசன சக்தி நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.

உங்கள் ஈறுகளை
ஆரோக்கியமாக வைக்கவும்
பற்களைப் பலப்படுத்தவும்

நீம் டூத் பேஸ்ட்

வேப்பம் குச்சியின் அற்புத கிருமி நாசன சக்தியும், பல் சுகாதாரத்திற்கான நவீன பொருள்கள் அடங்கிய ஒரே பற்பசை.



தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட், கல்கத்தா-29.
தென் இந்திய ஆபீஸ்: 5/549, [illegible], மதராஸ்-1

MT.186 HP-Tamil

ராம்தீர்த் பிரம்மி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)



கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கருநிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்கு குளிர்ச்சி அளித்து, ஞாபகசக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்யமாக வாழ்வீர்கள்.

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)

SHRI RAMTIRTH YOGASHRAM

DADAR - BOMBAY-14

மதராஸ் டிப்போ : 25, நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3

பூஜையறையில், ஜன்னலருகே எங்கோ பார்த்தபடி செல்லம்மாள் நின்றுகொண்டிருந்தாள். காற்றோடுகலந்துவரும் மென்மையான மல்லிகைமணத்தில் தலைஇலேசாய்க்கிறங்கியது.

அடுத்த வீட்டின் எதிர் ஜன்னலில் அழகுக்காகப் படரவிடப்பட்ட மல்லிகைக் கொடி கட்டுக்கே அடங்காமல் தெளி தெளியாய், இலைகளும் பூவுமாய் மண்டிப் போய் விட்டது. அடங்காமல், ஒழுங்கற்றுப் பரவி நிற்கும் அந் நிலையிலும் அந்தக் கொடியில், பிடிபடாத ஒரு நளினமும், குழைவும் சேர்ந்து அந்த வீட்டின் முகப்புக்கு அழகேற்றிக் கொண்டிருந்தன. ஜுபிரென்று கிளம்பிய ஒரு காற்றுச் சுழலில் கொடியிலிருந்து மலர்கள் பொல பொலவென்று தரையில் கொட்டியபோது, தன்னந்தனியாக ஒரே ஒரு மலர் விர்ரென்று இதழ்பிடித்துச் சுழன்று வந்து அவள் முகத்தில் மோதித் தெறித்தது.

விழுந்த மலரை விரல்களிடையே வைத்துக் கொண்டு வேடிக்கை பார்த்தாள் செல்லம்மாள். வெள்ளை வெளேரென்று கள்ளமில்லாமல் இதழ்கள் விரிந்து மென் நகை சிந்த ஒளிரும் மலரின் அழகில் அவளுக்கு விளங்காத விசனம் தான் ஏற்பட்டது.

நேற்று அரும்பு - இன்று மலர் - தானோ? ... விஜயாவும் இது போன்ற மலர் தானோ?



இழப்பதற்

"அம்மா!"

செல்லம்மாள் திரும்பினாள். சந்துரு வந்து விட்டான். அவனுடைய அப்பா இன்று வீட்டுக்குத் திரும்ப முடியாது என்று சொல்லி அனுப்பி விட்டார். ஆபீஸ் விட்டதும் அப்படியே எங்கோ 'காம்ப்' போகிறாராம். கல்லூரியிலிருந்து வந்ததும் வராததுமாய், உடைகளைக் கூட மாற்றாமல் பூஜையறையின் வாசலில் நின்றுகொண்டு சந்துரு அவளை அழைக்கும் காரணம் சொல்லாமலே அவளுக்குத் தெரியும்.

"சந்துரு!"

"விஜயா மன்னி மாடியில் அழுகிறாள், அம்மா!"

"எனக்குத் தெரியும்!"

"மன்னியோட 'ஹார்ட் வீக்'குக்கு இப்படியெல்லாம் அலட்டிக் கொள்ளக் கூடாது என்று இன்னைக்குக் கூட டாக்டர் சொன்னாரே, அம்மா!"

"நாம் என்ன செய்யலாம், சொல்லு!"

விரக்தியும் வேதனையுமாய் இப்படிச் சொல்லும்போதே செல்லம்மாளின் கண்கள் பனித்தன. பிறர் வேதனையில் உள்ளம் கசிந்து அந்த வேதனையைப் பார்க்கவும் முடியாமல், நீக்கவும் முடியாமல் தவிக்கும் தவிப்பில் முடிவில் நாம் அடைவதும் மனவேதனைதான்.

அடங்கி வரும் ஆழ்கடலில் அறியாமலே அலை எழுப்பிப் போகும் பௌர்ணமி நிலவாய் அடுத்த வீட்டுக்குப் புதிதாய்க் குடி வந்திருக்கும் கவிதா அன்று விஜயாவின் மனத்தைக் கிளறிவிட்டுப் போய்விட்டாள். கவிதாவையும் சொல்ல இடமில்லை; பாவம்! உண்மையிலேயே அவளுக்கு விஜயாவின் நிலை தெரியாதுதான்.

மண்டி வளர்ந்து, 'குப்'பென மலர்ந்து குலுங்கும் அத்தனை மல்லிகையும் தினம் தினம் உதிர்ந்து வீணாவானேன் என்ற பச்சாத்தாபம் கவிதாவுக்கு. முடிந்த வரை பறித்து, பொறுமையாய்த் தனித் தனியாய்ச் சரங்கள் கட்டி அண்டை அயலில் எல்லாருக்கும் சூடக் கொடுக்கலாம் என்ற நல்லெண்ணத்துடன் தான் எடுத்து வந்தாள்.

கவிதா தந்த சரத்தைச் செல்லம்மாள் தன் கூந்தலில் செருகிக் கொள்ளும் அதே நேரத்தில்தான் விஜயா பின்கட்டிலிருந்து முகத்தை நீர் விட்டுக் கழுவிக் கொண்டு உள்ளே நுழைந்தாள். விஜயாவின் சந்தன நிற நெற்றியில் முத்துக் கட்டி நின்ற நீர்த்துளிகளையும், கன்னத்தில் சரமாகப் படிந்திருந்த கேசச் சுருள்களையும், தோற்றத்தின் இயல்பான பொலிவையும் கண்டதும் கவிதாவுக்கு என்ன தோன்றிற்றோ, தெரியாது. மற்றொரு மல்லிகைச் சரத்தை விஜயாவிடம் நீட்டினாள் அவள்.

செல்லம்மாளின் இதயத்தில் 'சுரீர்' என்று யாரோ விரலால் கல்லடியடித்தாற் போலிருந்தது. பதறிப் போய் அவளைப் பார்த்தாள். அந்தப் பார்வை பட்டதும், விஜயாவின் மேனி தட்டிவிட்ட வீணைத் தந்தியாய் வெட

வெடிப்பது தெளிவாய்த் தெரிந்தது. அவள் உடலில் ஓடும் ரத்தமெல்லாம் ஒருகணம் ஒன்று திரண்டு குபீரென்று அவள் தலைக்குள் பாய்கையில் அவள் முகம் வெற்றிலைச் சாறாய்ச் சிவந்தது.

தட்டாமாலை சுற்றி முடித்தாற்போல் திறனிழந்து, தரையில் சாய்ந்தாள் விஜயா. கவிதாவின் கையிலிருந்து நழுவி விழுந்த மல்லிகைச் சரம் அவள் உடலின் அடியில் நசுங்கியது.

பூஜையறையினின்று சமையலறைக்குள் உடல் குலுங்க ஓடி வந்தாள் செல்லம்மாள். பொங்கிய பால் அறை முழுதும் பரவ விட்ட மணத்தில் மூச்சுத் திணறல் கண்டது. மேல் எழுந்த ஏடு வெண்குடை விரிவது போல் பாத்திரத்தை விளிம்பில் எல்லை கட்ட, நுரைத்துக் கொதிக்கும் பால் வெளிப்புறத்தில் இறங்கித் தணல் பட்டுத் தீய்ந்து கொண்டிருந்தது. பாத்திரத்தை இறக்கி வைத்து விட்டு, சுட்ட விரல்களை அவசரமாய் உதறிவிட்டுக்கொண்டாள்.

அடுப்புத் தணலிலிருந்து கீழ் விழும் பொறிகளை நோக்கியபடி நிற்கையில் வேதனையில் அவள் மனமும் சுட்டுப் பொரித்தது. கைவிரல்களைச் சுட்டுவிட்டால் உதறிவிட்டுக் கொள்ள முடிகிறது. மனம் சுட்டு விட்டால் என்ன செய்வது என்று தவிக்க வேண்டியிருக்கிறது.

உண்மையிலேயே அந்தத் தவிப்பைத் தாங்கும் திறன் விஜயாவுக்கு இல்லைதான். இருந்தும் தாங்கியாக வேண்டும் என்று நேர்ந்துவிட்டபின் திறனில்லை என்ற கதறலில்



கேதுவும் இல்லை...

ஷ. சுவாமிநாதன்

அர்த்தமில்லை. இந்நினைவோடுதான் விஜயா தேறுதலடைந்தாள். சிலநாட்களாய் வேதனையெல்லாம் கலந்து பரிபூரண மோனம்தான் அவளிடம் ஆழ்ந்திருந்தது.

ஆனால் இன்றைய நிகழ்ச்சி அவள் சமநிலையை அழித்தது. குமிழ்கள் பொங்க அவளுள் உணர்ச்சிப் பிரவாகமாய்ப் பீறிட்டுத்தான் அடிக்கிறது. அடிவயிற்றிலிருந்து அலை புரண்டு வரும் துக்கத்தில் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு மருமகள் கேவும் போது, அதைக் காணவும் சகிக்காமல், தேற்றவும் மாட்டாமல் செல்லம்மாள் துடித்தாள்.

அரும்பு நிலை மாறி இதழ்கள் பூரணமாய் மலர்ந்ததும் மலராததுமான காலத்திலேயே பாவி ரமணன் விஜயாவின் வாழ்வை இப்படி இடறி விட்டுப் போயிருக்க வேண்டாம். ஆனால் விதி வழியில் விரும்பியதெல்லாம் விரும்பியபடி நடந்துவிட்டால் விருப்பம் என்பதே ஒரு வேளை அர்த்தமில்லாது போய் விடுமோ? அல்லது தன் நிலையும் மதிப்பும் குன்றிவிடும் என்ற பயத்தில் விதி வேண்டுமென்றே விளையாடும் மாயந்தானோ இது?

விஜயாவை முதன் முதலாகக் கோவிலில் பார்த்ததுமே, செல்லம்மாளின் மனத்தில்

அவளைத் தன் மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை ஆணி வேரூன்றியது. அப்போதுதான் பறித்த மல்லிகை போல் கவர்ச்சி குலுங்க விஜயா, சக்தியின் சன்னிதானத்தில் தீபத்துக்கு எண்ணெய் வார்த்துக் கொண்டிருந்தாள்.

இளமைச் செழிப்பில் வளைகோடுகளாய் நெளியும் மேனியும், குறுகுறுத்த பார்வை கூட்டும் தனியழகும், மார்பில் வந்து விழும் பின்னலின் அலையும், சுடர் தூண்டும் விரல்களில் வழியும் வண்ணமும்—திருவிளக்கு நங்கையாகவே தோன்றினாள் விஜயா. தனக்கே உரிய தனித்துவத்துடன் தீபத்தின் செவ்வொளி அவள் மேல் படர்ந்து பரவுகையில், புன்னகையில் அவிழும் முகத்தின் அழகு அவள் நெஞ்சின் அழகையும் காட்டித் தந்தது.

மறு நாளே தன் கணவனின் அனுமதியுடன் விஜயாவின் பெற்றோர்களைப் பார்த்துப் பேசினாள் செல்லம்மாள். பழக்கமில்லாத பழக்கம் ஒன்றும் தயங்கவேயில்லை.

விரைவில் கல்யாணப் பந்தலில், ஆட்டி விட்ட ஊஞ்சலருகே விஜயாவின்விரல்கள் தன் மகன் ரமணனின் பிடிக்குள் அடங்குகையில் தன்னாசை நிறைவேறி விட்ட பெருமிதத்தில் செல்லம்மாளின் கண்களிலிருந்து நாலைந்து முத்துக்கள் இறங்கின.

நிறைவேறிய ஆசை எவ்வளவு தூரம் நிலைக்கும் என்ற எண்ணம் அப்போது எழவேயில்லை. வாழ்வில் இப்படித்தான் எவ்வளவோ முறை ஏமாந்தாகிறது.

மகனும், மருமகளும் மாலைகளிலிருந்து ரோஜா பாதங்களில் உதிர அவளை நமஸ்கரித்து எழும்போது எல்லைமீறிய ஆனந்தத்தில் இதயம் நிறைந்து துடித்தது. பாய்ந்து விஜயாவைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள். விஜயாவின் மேனி மென்மையும், சூடிய பூமணமும் மதுரமாய் அவளுக்குள் பாய்ந்தது.

"அன்று விளக்குச் சுடரொளியில் உன்னைப் பார்த்தேன். இன்று இந்த வீட்டின் விளக்குச் சுடரொளியையே உன் கைகளில் வைக்கிறேன். இவன்தான் ரமணன்! இவன் என் மகன். இவனேதான் உன் கணவன். உங்கள் சுடர் ஒளியின் நிழலில் நான் பொறுப்பின்றித் தங்குகிறேன்."

தொடர்ந்த நள்ளிரவின் மோனத்தில், முழு நிலவின் பால் வெள்ளத்தில், முற்றத்தில் நின்றபடி செல்லம்மாள் சுற்றிலும் பார்வை ஓட்டுகையில் மாடியறையின் ஜன்னல் தெரிந்தது. ஊஞ்சலாடும் மல்லிகைச் சரங்களும் இழைந்து பரவும் ஊதுபத்திப் புகையுமாய் நிரம்பி வழியும் அறையினுள், மெட்டியொலி கூடக் கேட்காதவாறு மெல்ல மெல்ல அடி வைத்து விஜயா நுழைகையில் கட்டின் இறகாய்ப் படபடத்த அந்த நேரத்தில் விஜயாவின் நெஞ்சில் எத்தனை எத்தனை கனவுகள் தெளிவின்றி நீந்தியிருக்குமோ! கட்டிலின் அப்பால் ஜன்னல் திரையை விலக்கி, கம்பிகளைக் கையால் பற்றியபடி, வானத்தின் தாரகைகளை எண்ணிக் கொண்டு நிற்கும் ரமணனின் பின்னழகைப் பார்த்தபடி நாணத்தில் காலெழாமல் விஜயா நிற்பதும் தெரிந்தது. நெஞ்சின் நிறைவில் பொங்கும் இன்பத்தில் விஜயாவின் கண்கள் பனித்திருப்பது போல் தோன்றியது.

சட்டென்று ஜன்னலிலின்று ரமணன் அகல, ஜன்னல் திரை விழுந்தது. திரை மறைவில் பாலோடு நீர் கலந்து பெருமை கொண்டு விட்ட மகிழ்வில் தவித்திருக்க வேண்டும். 'இனி பால் வேறில்லை; நீர் வேறில்லை; பிரிவென்று எதுவுமே இல்லை!' என்ற திருப்தியின் சிலிர்ப்பு தாங்காது அவள் உடலில் மின் லேகை பாய்ந்திருக்க வேண்டும்.

பூத்த மலரின் புது மணமும், புரியாத வண்ண ஜாலமுமாய் நின்ற அந்நிலை பொய்மையாய் மாறிய வேகந்தான் என்ன! கண்ணிமைக்கும் நேரத்தில் எதிர்பாராமல் என்னென்னவோ ஒன்றன்பின் ஒன்றாய் நடந்த ஜாலந்தான் என்ன!

தனைவிட்டுச் சூடேற்றினால் பாலில் கலந்த நீர் ஆவிப்படலமாய் மறைந்து போய்விடும் என்று யாருமே அப்போது நினைத்துப் பார்க்கவில்லை. யாரும் நினைத்துப் பார்க்கவில்லை என்பதால் நிகழாமலிருந்தது நிகழாமலில்லை. பாலோடு இணைந்ததுமே நீர் தனித்து, ஆவியாகி, காற்றில் கரைந்தாயிற்று. இரு சம்பவங்களின் இடையே மூன்று மாதங்கள்கூட முழுதும் இல்லை.

அத்தனையையும் பார்த்துக்கொண்டு விஜயா செயலிழந்து நின்றாள். அழக்கூட அவளால் முடியவில்லையோ என்னவோ!

"ஐயோ, விஜயா!" அடக்கமாட்டாமல் வெறிக்குரலில் கதறிக்கொண்டு தன்மேல் மோதிச் சாயும் செல்லம்மாளை விஜயாதான் விழாமல் மௌனமாய்த் தாங்கிக் கொண்டாள்.

செல்லம்மாள் தன் மருமகளை நிமிர்ந்து பார்த்தாள்.

"விஜயா!"

"அம்மா!"

நீரை இழந்ததும், தணலில் வழிந்து தன்னையே தீய்த்துக் கொள்ள வேண்டும் என்று முனையும் பாலைப்போல் தன்னுயிரும் தன் அன்புயிரைத் தொடர்ந்து செல்ல வேண்டும் என்று விஜயா துணிந்ததுகூட உண்டு. தெருக்கோடியில், எல்லை கட்டிக்கொண்டு ஓடும் சிற்றாற்றில், ஓரிரவு மையிருளில், தன்னையே இழந்துவிடும் தீர்மானத்தோடு விஜயா படிக்கட்டில் இறங்கியபோது, சரியான நேரத்தில் விழித்தோடி, தடுத்து நிறுத்திவிட்டாள் செல்லம்மாள்.

"ஏய் விஜயா, என்ன இது?"

"என் உயிருக்கு இனிமேல் என்றும் மதிப்பில்லை, அம்மா!"

"உன் உயிருக்கு மதிப்பிருக்கிறதா, இல்லையா என்று நான் உன்னைக் கேட்கவில்லை. திரும்பி வீட்டுக்கு வா என்கிறேன். வரப் போகிறாயா, இல்லையா?"

விஜயா மறுமொழி பேசாமல் அவளுடன் திரும்பினாள். ஆனால் நாளடைவில் அத்தனை மூர்க்கத்தனமும் ஓய்ந்து, கண்ணீரும் வற்



சோழவந்தானில் ஸ்ரீ ஐயப்பன் மண்டலாபிஷேகத்தன்று, ஐயப்பன் தண்டமிழ்க் கீர்த்தனை வெளியீட்டு விழாவில் ஆசிரியர் கவிகுஞ்சரம் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றார்.

திப் போய் வறண்ட மௌனத்தின் விரக்தி யுணர்ச்சியில் அழுந்திப் போனான்.

அவள் நெஞ்சுக்குள் புரையோடிய துக்கம் மட்டும் நாளாவட்டத்தில் அவள், இதயத்தைத் தாக்கி யிருக்க வேண்டும். இதயம் பல வீனப்பட்டு அடிக்கடி மயக்கத்தில் விழுந்தாள் அவள். மனக்கொதிப்பு முற்றும் அடங்கி, சாந்தி ஏற்பட்டால்தான் அவள் நோயிலிருந்து மீள முடியும் என்று டாக்டர் கூறிவிட்டார்.

சொந்த மகனை இழந்தது போதாதென்று பின்னுமே கூட தன்அன்பு விஜயாவையும் இழக்கச் செல்லம்மாள் தயாரில்லை. அந்நினைவே ஒழிந்து, விஜயா மனம் சமாதானமடைய என்னென்னவோ செய்தாகிறது. ஆனால் குழந்தைத்தனமாகப் போகிற போக்கில் நீறுபூத்த நெருப்பை ஊதி ஜுவாலை யெழுப்பி விட்டுப் போய் விட்டாள் சுசீலா. இப்போது எப்படித் தேற்றுவது? என்னவென்று தேற்றுவது?

இருள் பரவி இரண்டு ஜாமம் ஆயிற்று. மாடியறையில், விளக்கைக்கூட அணைத்து விட்டு, ஏகாந்தமான இருளில் விஜயா உட்கார்ந்தபடியே விம்முவது தெரிகிறது. இதயக் கோளாறுடன் இப்படி மன அலைச்சல் படுவது நல்லதில்லை. ஆனால் அவள் அருகே சென்று அவளுக்கு ஆறுதலாய் ஏதேனும் சொல்லக் காலெழவில்லை. தயக்கம் தோளின் மேல் சுமையாய் உட்கார்ந்திருக்கிறது.

இதே போன்று ஏக்கமும் கண்ணீருமாய் எத்தனை நாட்கள்தான் விஜயாவால் வாழ்க்கையைச் சகித்துக்கொள்ள முடியும்? நெஞ்சில் மங்காத பசுமையும், நினைவில் தேறாத இன்பத்தின் சாயலும், எண்ணத்தில் அடங்காத கதைகளுமாய் எத்தனை காலந்தான் வளைய வர முடியும்? விடியாத துயருக்கு விடிவேது? முடியாத தாபத்துக்கு முடிவேது?

விடிவுமில்லை, முடிவுமில்லை எனில் தங்கி நிற்கும் அவள் உயிரின் பொருள்தான் என்ன? பொருளிருக்கிறது, பொருளில்லை என்று சொல்ல நமக்கிருக்கும் உரிமைதான் என்ன? சென்றுவிட்ட ஜீவனின் ஞாபகமாய் நின்றிருக்கும் ஜீவனைச் சித்திரவதை செய்யும் நியாயந்தான் என்ன?

நியாயம், அநியாயமின்றி இத்தனை நாட்களாய் நழுவிச் சிதையாமல் எப்படித்தான் இந்த உலகம் அந்தரத்தில் சுழல்கிறதோ?

உலகம் எப்படிப் போனால் என்ன? யார் எது சொன்னால் என்ன? பொங்கி வரும் பால் அடங்கத் தேவையானால் மறுபடியும் நீர் ஊற்றுவது போல், விஜயாவின் வாழ்வு துளிர்விடவே கருகி உதிராமல் இருக்கத் தேவையானால் எது செய்யவும் தயங்காத நெஞ்சு இடம்தான் அவசியமாகும்.

நெஞ்சில் இந்த எண்ணம் முளைவிட்டதும் செல்லம்மாளின் மனச்சுமை ஒரு நொடியில் வடிந்தது. விஜயாவைத் தேற்ற வழிகண்ட உவகையோடு மாடியேறிச் சென்றாள்.

விஜயாவின் அருகே சென்றமர்ந்து ஆதரத்துடன் அவள் நெற்றியில் விழும் கேசத்தைக் கோதி விட்டதும், அவள் கண்கள் கரை உடைந்து விம்மின. செல்லம்மாளின் மடியில் முகம் புதைத்து விசும்பித் தீர்த்தாள்.

''விஜயா!''

''அம்மா!''

''விஜயா! அசடுமாதிரி இப்படி நீ அழுகிறாயே....?''

''அழும்போதெல்லாம் எனக்கு உள்ளூற ஆனந்தம் கிடைப்பது போலிருக்கிறது, அம்மா!'' கேவல்களுக்கிடையே அவள் குரல் நடுங்கியது.

கணநேரம் விழுந்த மௌனத்தைச் செல்லம்மாள் விலக்கினாள்.

''விஜயா! நான் உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும் என்று வந்திருக்கிறேன். உன் வருத்தம் எனக்குத் தெரிகிறது. ரமணன் நம்மை ஏமாற்றி விட்டான். என் துயருக்கு ஆறுதலாய்ச் சந்துரு இருக்கிறான். உன் துயரம் ஈடு செய்ய முடியாததுதான்.''

தலை நிமிர்த்தி விஜயா ஒருமுறை அவளை நேராகப் பார்த்தாள். சிந்தையில் சிறிது நேரம் ஆழ்ந்து பின்னர் அவள் இதழ்கள் பிரிந்தன.

''அம்மா! அவர் சென்றதால் நான் எதையுமே இழக்கவில்லை. இழக்க ஒன்றுமே இல்லையோ என்றுதான் அழுகிறேன். இழக்க எனக்கு எதுவுமே கிடைக்கவில்லை, அம்மா!''

அவள் சொன்ன வார்த்தைகளின் உட்பொருள் சிக்காமல் மனம் ஆயிரம் எண்ணங்கள், ஆயிரம் சந்தேகங்கள் கொண்டு தவிக்கையில் செல்லம்மாளின் கைகள் ஒன்றையொன்று கூடாவமாய்ப் பிசைந்தன.

''அம்மா, உங்களிடம் இத்தனை நாட்களாய்ச் சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை. இன்று சொல்ல வேண்டும் போல் இருக்கிறது. சொல்லி விடுகிறேன். என்னை நடுவில் தடுக்க வேண்டாம். தயவுசெய்து என்மேல் கோபமும் வேண்டாம். என்னை அவர் விரும்பவேயில்லை, அம்மா!'' ஆவேசம் கொண்டுவிட்டாற்போல் உடல் தவிக்கச் சொற்கள் அவசரம் அவசரமாய் வந்தன.

''விஜயா!'' பழுக்கக் காய்ச்சிய கம்பியைத் தன்மேல் போட்டுக் கொண்டு விட்டாற் போல் செல்லம்மாள் துள்ளினாள்.

''ஆமாம், அம்மா! அவர் அன்பு எனக்கு என்றுமே கிடைக்கவில்லை. அவருடைய அன்பெல்லாம் தன்னுடன் கல்லூரியில் படித்த பெண்ணின்மேலேயேதான் இருந்தது. என்னை மணந்து கொள்கையில் அதை உங்களிடம் சொல்லத் துணிவில்லை. அதனால் அவர்களின் ஆசையும் ஈடேறவில்லை. ஈடேறாத ஆசையின் நினைவுடனே அவர் சென்றார். கடைசிவரையில் தம் மனத்தில் அவர் எனக்கு இடம் தரவேயில்லை.''

செல்லம்மாளின் கண்கள் நீண்டு ஆவி பறந்தது.

''அந்தப் பெண்ணின் நினைவில் அவர் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு துடிக்கையில் தன்னந் தனியாய் என்ன செய்வது என்று கூடத் தெரியாமல் நான் நின்றேன். இன்று அவர் சென்று அதே துடிப்பை நான் உணருகிறேன். அறிந்தோ அறியாமலோ அவர்களிடையே இடையூறாய் நுழைந்து அவருடைய அன்பை அழித்ததற்கு நான் அனுபவிக்க வேண்டும் என்பது நியதியோ என்னவோ?''

''விஜயா!''

''கோவிலில் கர்ப்பக்கிருகத்துக்கு வெளியே நின்று தெய்வத்திடம் அருளுக்குக் கெஞ்சுவது போல் என் கன்னித் தூய்மையே காணிக்கையாய் அவர் கண் பார்வை படும் இடத்தில் காத்திருந்தேன். என்றாவது ஒரு நாள் அவர் நெஞ்சு நெகிழ்ந்து அவரின் அன்பு கிடைக்காதா என்று ஆவலோடு நின்றேன். ஆனால் கடைசிவரையில் அவருடைய வெறுப்புத் தான் எனக்குக் கிடைத்தது.''

அந்த வேதனையின்பத்தில் ஆழ்ந்துபோய் விஜயாவின் கண்ணிமைகள் விழிகளின்மேல் படிந்து விட்டன.

''இப்போது அந்தத் தவிப்பும் வேதனையும் இல்லை. வடிவிழந்து நிஜமாகவே அவர் தெய்வப் பதவிக்கு உயர்ந்துவிட்டார். அப்படித்தான் நான் நம்புகிறேன். அப்போதே அவருடைய விருப்பு வெறுப்பெல்லாம் மறைந்திருக்க வேண்டும். நீங்களே சொல்லுங்கள், தெய்வத்துக்கு விருப்பேது, வெறுப்பேது?''

செல்லம்மாளுக்குச் சொல்லெழவே இல்லை.

''அடிக்கடி என் அருகே வந்து நின்று அன்புடன் என்னைத் துருவிப் பார்ப்பதாக இப்போதெல்லாம் தோன்றுகிறது. நினைத்து நினைத்து ஜீவவடிவில் என்னுடன் விளையாட அவர் வருவது போலிருக்கிறது. அவர் உயிர் இன்னும் என்னைவிட்டுப் பிரிந்துவிடவில்லை. அவரால் என்னை விட்டுப் பிரிய முடியவில்லை, அம்மா!''

சிந்தனையில் இழைந்து இழைந்து விஜயாவிடமிருந்து சொற்கள் சிந்துகையில் கற்பனை நினைவில் அவன் மேனி மென்கொடியாய் அவளுள் நுழைவதுபோல் நெளிந்து நெளிந்து நழுவியது. செல்லம்மாளின் இதயம் வெடித்து விடத் துடித்தது.

''உயிருடன் அவர் இருந்திருந்தால் அவர் வெறுப்பு மாறாமலே இருந்திருக்கும். அந்த நிரந்தர வெறுப்பினால் அவர்மேல் நான் கொண்ட அன்பும் விஷமாகி நானும் அவரை வெறுத்திருக்கலாம். என் பெண்மையின் தூய்மையே நழுவி விருக்கலாம்; உப்புநீர் கலந்ததும் பால் திரிந்து போவதைப் போலத் தான். இப்போது அந்தப் பயத்துக்கு இடமில்லை. நான் இப்போது எதையுமே இழக்கவில்லை. உண்மையில் நான் எதையோ அடைந்திருக்கிறேன். நான் வாழ்வையே இழந்து ஏங்குவதாய் நினைத்து நீங்கள் இல்லாத திட்டமெல்லாம் கட்டும்போதுதான் என் அழுகையையே என்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.''

விஜயாவின் நெஞ்சக் குழலில் மூச்சு சற்றே தடைப்பட்டுத் தொடர்ந்தது. அவள் இவ்வளவு மன எழுச்சியுடன் இப்படிப் பேசக் கூடாதுதான். 'ஆனால் தன் மனத்திலிருப்பதை இன்றே சொல்லி விடட்டும். அதுதான் அவள் ஆசை. அதைத் தடுக்க வேண்டாம்' என்று எண்ணினாள் செல்லம்மாள்.

இருந்தாற்போலிருந்து விஜயாவின் கண்ணெதிரே ஒரே நொடியில் உலகம் அவசரம் அவசரமாய்ச் சுழன்று, ஒளியும் இருளுமாய், பகலும் இரவுமாய், வேகமாய் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றித் தோன்றி மறைந்தன. ஒளியிலும் இருளிலும் மறையாது நின்றவாறே அவள் கணவன் அவளைப் பார்த்துப் புன்னகை செய்கிறான்.

''அம்மா! என்னிடத்தில் இன்னொரு விசித்திரம்கூட, அம்மா! ஊரிலே எல்லாரும் தன் அன்புயிருக்கு அரை மனத்துடன் வெறும் பூவையும் பொட்டையும்தான் தருவார்கள். அவருடைய ஜீவனுக்கு என் கன்னித்தன்மையையே காணிக்கையாக்கிவிட்ட பெருமை எனக்கம்மா! நான் சொன்னதெல்லாம் உங்களுக்குப் புரிகிறது, இல்லையா? நீங்களும் என்னைப்போல் பெண்தானே, அம்மா?''

விஜயாவின் உடல் காற்றலைகளுக்குள் பம்பரமாய்ச் சுழன்றது. பந்தற்கால் பெயர்ந்து மல்லிகைக் கொடி சரிவதுபோல் மளமள வென்று அவள் நிலத்தை நோக்கிச் சாய்கையில் அவள் பூவுடலைத் தன்மேல் சாய்த்துக் கொண்டாள் செல்லம்மாள்.

''நீ சொன்னதெல்லாம் புரிகிறது, விஜயா! புரிகிறது: நீ சொன்னதுபோல் நான் ஒரு சாதாரணப் பெண். ஆனால் தெய்வம், தெய்வம் என்றாயே அந்தத் தெய்வம் நீ! நீயேதான்! தெய்வத்தின் செயலில்தான் இந்தப் புனித லட்சியம் இருக்க முடியும்.''

''அம்மா! எங்கிருந்தோ அவர் என்னைக் கூப்பிடுகிறார்...நான் போகிறேன்...''

செல்லம்மாள் சிந்திய கண்ணீர் விஜயாவின் நெற்றியில் முத்துத் திலகமிட்டது.

அறிவிப்பு


பஞ்சாப் நேஷனல் பாங்க் லிட்.

(ஸ்தாபிதம் : 1895)


ரிஜிஸ்டர்டு ஆபீஸ் : **பார்லிமெண்ட் தெரு, புது டில்லி**

பாங்கிங் கம்பெனிகள் சட்டம் 1949-ன் 45 (7) பிரிவின் கீழ் இந்திய சர்க்காரால் அனுமதிக்கப்பட்டுள்ள திட்டத்திற்கிணங்க, 1961 மார்ச் 25உ அன்று இண்டோ - கமர்ஷியல் பாங்க் லிமிடெட்டானது பஞ்சாப் நேஷனல் பாங்க் லிமிடெட்டுடன் இணைக்கப்படும். அன்றிலிருந்து தற்போதுள்ள இண்டோ - கமர்ஷியல் பாங்க் லிமிடெட்டின் எல்லாக் கிளைகளும் பஞ்சாப் நேஷனல் பாங்க் லிமிடெட்டின் அலுவலகங்களாகப் பணி புரியும்.


ஏ. எம். வாக்கர்
ஜெனரல் மானேஜர்




கல்கத்தா 'யூனைட்டட் கமர்ஷியல் பாங்க் சட்ட அதிகாரி' திரு கோவிந்தன் அவர்களின் புதல்வி சௌ. ராஜேசுவரி திரு ராமச்சந்திரமூர்த்தியை மணந்தார்.



இலங்கை டாக்டர் இராஜரத்தினம் அவர்களுக்கும் சௌபாக்கியவதி சாரதாம்பாளுக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.



எழுத்தாளர் திரு ராமகிருஷ்ணன் ('கிஷன்') சௌபாக்கியவதி கமலாவை மணம் புரிந்து கொண்டார்.



மேட்டூர் கெமிகல்ஸைச் சேர்ந்த திரு சாரதியின் புதல்வி சௌ. சீதாவுக்கும் திரு சீனிவாசனுக்கும் விவாகம் நடந்தது.



'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' திரு ராமசாமியின் புதல்வர் திரு வீரராகவன் சௌ. கமலாவை மணந்து கொண்டார்.



திரு ஆர். பரமசிவத்துக்கும் சௌ. ராஜேசுவரிக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது.

மனச் சலவை

வியார்ஜி

"என்னங்க, இப்படி ஓரேயடியாக வவுத்துலே அடிக்கலாமா? ஒண்ணு, ரெண்டா? பதினஞ்சு ரூபா ஆயிப் போச்சுங்களே! எதிரு பாத்துக் கொடுங்க. நான் புள்ளை குட்டிக்காரன்!" கன்னியன் மன்றாடினான்.

ஆனால் ஒரு நயா பைசாகூடப் பெயரவில்லை கேசவனிடமிருந்து.

சலவைக் கணக்குப் புத்தகத்தைப் 'பட்'டென்று மூடி விட்டு, பரம அலட்சியமாக ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டான். சிகரெட் புகையை விட்டபடியே கண்களைச் செருகிய நிலையில் உதாசீனமாகப் பார்ப்பதுபோல் கன்னியன்மீது பார்வையை ஓட்டினான்.

கன்னியன் பேசாமல் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தான். கேசவனின் அந்தக் கம்பீரமான செருக்குக்கு முன்னால் அவன் தன்னையறியாது பணிந்து விட்டவன் போலக் காணப்பட்டான்.

"என்னங்க, அப்பாலே எப்படித்தான் ஆகிறது என் கதை? கொஞ்சமாவது இப்ப கொடுங்க."

"இதோ பார் அப்பா. இப்ப என்னிடம் காசே இல்லே. எங்கே போகப் போகிறது என் துட்டு?" கேசவன் கீழுதட்டைப் பிதுக்கிப் புகையை விட்டு விட்டுக் கட்டை விரலால் லாவகமாகச் சிகரெட்டைச் சுண்டினான்.

"என்னங்க! உங்ககிட்டே போயி காசே இல்லேன்னு யாராவது நம்புவாங்களா?" என்று கன்னியன் சிரித்துக் கொண்டே கேட்டான். சற்றுச் சுமுக நிலையை உண்டு பண்ணினாலாவது ஏதாவது கிடைக்காதா என்ற ஆசை அவனுக்கு.

"கரெக்ட்! இப்ப கேட்டியே இது சரியான கேள்வி" என்று சொல்லிக் கொண்டே கேசவன் எழுந்தான். சலவைக் கணக்கு நோட்டை அங்கிருந்தபடியே மேசையின் மீது வீசி எறிந்தான். அது மேசையின் மேல் விழுந்த அதிர்ச்சியில் கேசவனுடைய பேனா உருண்டு கீழே விழுந்தது.

கன்னியன் பயபக்தியுடன் ஓடிச் சென்று குனிந்து பேனாவை எடுத்துக் கேசவனிடம் கொடுத்தான்.

"இதோ பார் கன்னியன்! உன் கிட்டே உண்மையைச் சொல்லி விடுகிறேனே! என்னிடம் இந்தச் சமயத்தில் இருபது ரூபாய் என்னவோ இருக்கிறது. ஆனால் அதை ஒரு முக்கியமான காரியத்துக்காக வைத்துக் கொண்டிருக்கிறேன். ஒரு பரீட்சைக்குப் பணம் கட்டியாகணும். அதுதான். இல்லா விட்டால் எப்பொழுதோ தீர்த்திருப்பேனே உன் பாக்கியை!" என்று சொல்லிக் கொண்டு கன்னியன் தோளைத் தட்டிக் கொடுத்தான்.

கன்னியனுக்கு உடம்பெல்லாம் கூசியது. கேசவன் தன்னைத் தொட்டுத் தட்டிக் கொடுத்ததே அவனுக்கு அந்தச் சமயத்தில் நிறைவை அளித்து விட்டது.

"அப்ப நான் வரேனுங்க. அடுத்த சலவையின் போதாவது 'சப்ஜாடா' தீர்த்துப் புடுங்க" என்று கூறி ஒரு துணி மூட்டையை முதுகின் மேல் ஏற்றிக் கொண்டான்.

திடீரென்று நினைத்துக் கொண்டவன் போல் கேசவன், "இரு, கன்னியன்! இந்தச் சட்டையையும் போட்டு விடுகிறேன்" என்று எழுந்திருந்து, தான் போட்டுக் கொண்டிருந்த சட்டையைக் கழற்றிப் பந்து போல் சுருட்டி எறிந்தான்.

அதை அப்படியே வாங்கித் துணி மூட்டைக்குள் திணித்துக் கொண்டான் கன்னியன்.

கன்னியன் போன பிறகு 'கட கட'வென்று சிரித்தான் கேசவன்.

"நல்ல அப்பாவி!" என்று வாய் விட்டுச் சொல்லிக் கொண்டான்.

உண்மையில் கேசவன் சொன்னதெல்லாம் முழுப் பொய். ஏதோ பரீட்சை எழுதப் போவதாகச் சொன்னதை நினைத்துக் கொண்ட போது மீண்டும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. அது என்ன பரீட்சையோ, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

பர்சை எடுத்துத் தலைகீழாகக் கொட்டிப் பார்த்தான். சில்லறைகளாகக் காசுகள் உருண்டோடின. எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்தான். ஒருரூபாய் பதின்மூன்று ந. பை. அதுதான் அவனுடைய அப்போதைய ஆஸ்தி.

'அவன் யார், என்ன செய்கிறான்?' என்று கன்னியன் எப்போதாவது யோசித்திருப்பானா என்று எண்ணிக்கொண்டான் கேசவன். இந்த உலகம்தான் புறத் தோற்றத்தின் பூச்சைக் கண்டு எப்படி ஏமாந்து போய் விடுகிறது?

கேசவனுக்கு வேலை ஒன்றும் கிடையாது. ஆனால் பார்ப்பதற்கு எப்பொழுதும் நாகரிகமாக உடையணிந்து காணப்படுவான். அவன் தனது வயிறு, உடை மற்ற நாகரிக சாதனங்கள் எல்லாவற்றுக்கும் 'மற்றவர்கள் சட்டைப் பை'யைத்தான் நம்பிக் கொண்டிருந்தான். 'ஜேப்படித்தல்' என்றும் 'பிக் பாக்கெட் செய்தல்' என்றும் வழங்கப்படுகின்ற செயலை அவன் ஒரு கலையாகவே பயின்று வைத்திருந்தான் என்று சொல்லலாம்.

ஒரு ரூபாய் பதின்மூன்று நயாபைசாவோடும், நல்ல உடைகளோடும், வாழ்க்கையைப்பற்றி அவனுக்கே உரிய என்றும் வற்றாத நிறை நம்பிக்கையோடும் அன்றும் கேசவன் வழக்கமான தொழிலைச் செய்ய வெளியே கிளம்பினான்.

குளிர்ச்சிக் கண்ணாடியின் கருமைக்குப் பின்னே அவனுடைய கண்கள் பரபரவென்று அலைந்து கொண்டிருந்தன. மூன்று சிகரெட்டுகள் சாம்பராகி விட்டன. இன்னும் வேட்டை ஒன்றும் கிடைத்தபாடில்லை.

சாலையில் வந்து கொண்டிருந்த ஒரு சைக்கிள் ரிக்ஷாவும், எதிர்ப்புறமாக வந்த ஒரு சைக்கிளும் மோதிக்கொண்டன. வேடிக்கை பார்ப்பதற்கு ஆட்களுக்கா பஞ்சம்!

நான்காவது சிகரெட்டை அப்பொழுது தான் பற்ற வைத்தவன் அதைத் தேய்த்து அணைத்துப் பைக்குள் போட்டுக்கொண்டான்; அவனது மூளை தீவிரமாக வேலை செய்தது.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் அவன் பக்கத்துச் சந்து ஒன்றின் திருப்பத்தில் ஒரு மணிபர்சைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அதில் நான்கு ஐந்து ரூபாய் நோட்டுகள் இருந்தன. பர்சை உடனே மூடித் தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான்.

அதற்குள் பணத்தைப் பறி கொடுத்தவரின் ஓலமும், மற்றவர்களது விசாரணைக் குரலும் அவனுக்குக் கேட்டன.

"எங்கே போயிருப்பான்? இங்கேதான் எங்கேயாவது இருக்கணும்! பிடிங்க" என்று சிலர் யோசனை சொன்னார்கள்.

"கூலிங்கிளாஸ் போட்டுக்கிட்டு ஒரு ஆள் என் பின்னாலே நின்னுக்கிட்டிருந்தான்." மற்ற வார்த்தைகள் கேசவனின் காதில் விழவில்லை.

உடனே கறுப்புக் கண்ணாடியைக் கழற்றிப் பைக்குள் போட்டுக் கொண்டான். யாரோ 'திபு திபு' என்று ஓடிவரும் சத்தம் கேட்கவே, அவனும் விரைந்து சந்தைத் தாண்டி மறு புறம் வந்தான். இன்னும் சந்தில் ஓடிவரும் சத்தம் கேட்டது அவனுக்கு. ஒருவேளை அவர்கள் அவனை அடையாளம் கண்டு பிடித்து விடுவார்களோ?



அங்கே ஓரமாகக் கழுதை ஒன்று நின்று அரைக்கண் மூடியபடி தவம் செய்து கொண்டிருந்தது. அதன் முதுகில் சலவைக்குப் போடும் அழுக்குத் துணிகளின் பெரிய மூட்டை ஒன்று இருந்தது.

கேசவன் சுற்றுமுற்றும் பார்த்தான். விளக்குக் கம்பத்தின் கீழ் ஒரு கிழவி 'கம்மர் கட்' விற்றுக் கொண்டிருந்தாள். தன் கையில் ஈ ஓட்டுவதற்காக இருந்த குச்சியைத் தூங்கி வழிந்து கொண்டே ஆட்டிக் கொண்டிருந்தாள் கிழவி.

தெருவில் நடந்து கொண்டிருந்த இரண்டொருவரும் ஏதோ கவனத்தில் போய்க் கொண்டிருந்தார்கள்.

மின்வெட்டும் நேரத்தில் கேசவன் சட்டைப் பையிலிருந்து பர்சை எடுத்துக் கழுதையின் முதுகின் மீதிருந்த துணி மூட்டைக்குள் திணித்தான். மீண்டும் ஓட்டமும் நடையுமாக இரண்டு தெருக்கள் தாண்டி வந்த பிறகுதான் அவனுக்கு நிம்மதியாக மூச்சு வந்தது.

இப்பொழுது யாரும் அவனைத் தொடர்ந்து வந்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை தான் செய்தது முட்டாள்தனமோ என்று அவனுக்கே இப்பொழுது சந்தேகம் வந்தது.

இம்மாதிரி நேருவது அவனுக்கு இதுதான் புது அனுபவம். எக்கச்சக்கமாக அகப்பட்டுக் கொண்டிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று நினைத்தபோதே அவனுக்கு வியர்த்து விட்டது. மார்பு படபடவென்று இன்னும் அடித்துக் கொண்டிருந்தது.

கேசவன் கையால் மார்பை அழுத்திக் கொண்டான். சட்டைப்பையில் கைபட்ட போது அங்கு அவனுடைய பேனா கையில் தட்டுப்படவில்லை. அவனுக்குத் 'திக்' என்றது.

'பிக்பாக்கெட்' செய்த பர்சோடு அவசரத்தில் அவனுடைய சொந்தப் பேனாவையும் அல்லவா அந்த மூட்டைக்குள் திணித்துவிட்டு வந்திருக்கிறான்!

பத்து நிமிட இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் வேறு வழியாகக் கழுதை இருந்த இடத்துக்கு வந்தான். ஆனால் இப்பொழுது கழுதையைக் காணவில்லை!

ஓரளவுக்கு அவன் இதை எதிர்பார்த்தவன் தான். 'போனால் போகிறது. ஆள் அகப்பட்டுக் கொள்ளாமல் இருந்தால் போதும்' என்றுதான் அவன் முதலில் அதை ஒளித்து வைத்தான். ஆனாலும் அத்தனை விரைவில் கழுதையை ஓட்டிச் சென்றுவிடுவார்கள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

"உம்! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டக் கொடுத்துவைக்கவில்லை" என்று முகவாயைத் தடவிக் கொண்டான். அன்று அவனுக்கு ஆதாயம் ஒன்றுமில்லாவிட்டாலும், பேனா போனது நஷ்டக் கணக்கில் அல்லவா வந்து முடிந்துவிட்டது!

இனி அந்தக் கழுதையைத் தேடிக் கொண்டு எங்கே போவது? எல்லாக் கழுதைகளும் பார்ப்பதற்கு வேறு ஒரே மாதிரி அல்லவா



இருக்கின்றனை? துணி மூட்டையின் அடையாளத்தையும் அவன் சரியாகப் பார்த்து வைத்துக் கொள்ளவில்லை.

'அது, எந்தச் சலவைத் தொழிலாளியுடையதோ? உம், அவன்பாடு அதிர்ஷ்டம்' என்று எண்ணிக் கொண்டான் கேசவன். மேலே நடந்து சென்றவன் கண்ணில் அந்தத் தெருவின் கோடியில் இருந்த லாண்டரி பட்டது.

அந்த லாண்டரியிலிருந்து அழுக்குத் துணிகளைச் சேகரித்து எடுத்துக்கொண்டு போவதற்காகத்தான் ஒரு சலவைத் தொழிலாளி அப்பொழுது வந்திருக்க வேண்டும். அந்த ஆளுடைய கழுதையைத்தான் சற்றுத் தள்ளி ஓரமாக நிறுத்தி வைத்திருக்க வேண்டும்.

கேசவன் லாண்டரியின் படிமீது ஏறி நின்றான். ஒரு பொடியன் கரிக் கூடையை ஆராய்ந்து கொண்டிருந்தான்.

" இன்னா சார் வேணும்?" என்று கேட்டான் பையன் கறுகறுப்பாக.

" உங்க முதலாளி இருக்காரா ?"

இதற்குள் கேட்டுத் தடுப்பு மறைப்புக்குப் பின்னாலிருந்து முண்டாபனியும், பாடிக்கு மேல் கட்டிய வேஷ்டியுமாக ஓர் ஆள்வந்தார்.

"என்ன சார், என்னவேணும் உங்களுக்கு?"

" ஒன்றுமில்லே, நீங்க எந்தச் சலவைக்காரரிடம் உங்க லாண்டரித் துணிகளைப் போடுவது வழக்கம். தெரிஞ்சுக்கலாமா :

'லாண்டரி' முதலாளி இப்பொழுது சற்றுப் ' பிகு 'வுடன் கேசவனை ' நிதானித் 'தார்!

" ஏன், என்ன சமாசாரம்? எங்க வாடிக்கைக்காரங்க நாலுபேர்கள் இருக்காங்க !"

" சற்று முன்னே யாராவது இங்கே வந்து துணி எடுத்துக் கொண்டு போனார்களா ?"

" எப்பா, நம்ப கன்னையனைக் கேக்கிறாப்போல இருக்கு.இவுரு?" என்றுகுறுக்கிட்டான் பொடியன்.

" ஆமாங்க. கன்னையன்னு ஓர் ஆளு. அவரும் நம்ப சலவைக்காரர்தான். வந்து போயி அரை அவருகூட ஆயிருக்காது" என்றார் கடை முதலாளி.

கேசவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "என்னகன்னையனா?" என்று அவனையறியாமல் வாய் விட்டுக் கேட்டு விட்டான்.

" ஏன் என்னங்க விஷயம் ?" என்று கேட்ட லாண்டரிக்காரரிடம் "ஒன்னுமில்லீங்க. ரொம்ப நன்றி உங்களுக்கு" என்று கூறி விட்டு அங்கிருந்து மெல்ல நழுவினான் கேசவன்.

"இன்னைக்குப்பா இவுரு நம்ப கன்னையனைக் கேக்கிறாரு? ஸி. ஐ. டி.யா இவுரு?" என்று அக்கறையோடு விசாரித்த பொடியன் மீது எரிந்துவிழுந்தார் லாண்டரிக்காரர்.

"அட சீ! நீ உன் வேலையைப் பாரு. இந்நேரம் நான் ரெண்டு துணிக்குப் 'பொட்டி' போட்டிருப்பேன். எங்கிருந்தோ வந்தான் ஐயா, கடன்காரனுட்டம்! உம், நீ ஜல்தி ஆவட்டும்!" என்று பையனைத் துரிதப்படுத்தி விட்டு மறைப்புக்குப் பின்னே மீண்டும் 'பொட்டி போடுவ'தில் மும்முரமாக ஈடுபட்டார் லாண்டரிக்காரர்.


மறுநாள் காலை.

'சார்!' என்று கூப்பிட்டுக் கொண்டே வந்த கன்னையனைப் பார்த்ததும் திடுக்கிட்டு விட்டான் கேசவன்.

"ஒரு சின்னத் தப்பு நேர்ந்துபூடுத்துங்க. நேத்து ராவு பூராவும் தூக்கமே யில்லீங்க. 'பின்னே நீ போயி அவுருகிட்டே சேர்த்துப்புட்டு வந்து மறுவேலை பாரு'ன்னு என் பொஞ்சாதி வேறே அரிச்சிக்கிட்டே யிருந்தாளுங்க" என்று சொல்லிக் கொண்டே மேசை மீது ஒரு மணிபர்சையும், ஒரு பேனாவையும் பணிவுடன் வைத்தான் கன்னையன்.

கேசவனுக்கு எல்லாம் விளங்கிவிட்டது.

தொடர்ந்து கன்னையனே சொல்ல ஆரம்பித்தான்: "நேத்து உங்க பேனா கலர் பையா பகத்திலே யிருந்ததனாலே சட்டுனு நினைவுக்கு வந்துதுங்க. அதுக்கு ஏத்தமாதிரியே பர்சிலே இருபது ரூபாயுங்க! நீங்க ஏதோ பரீட்சைக்குப் பணம் கட்டணும்னு வேறே சொல்லிக்கிட்டிருந்தீங்களா; 'ஐயோ, அவுரு எப்படித் தவிச்சிக்கிட்டிருக்காரோ'ன்னு எம் பொஞ்சாதி வேறே அலட்டிக்கிட்டே யிருந்தாளுங்க. நேத்து நீங்க போட்டுக்கிட்டிருக்க சட்டை



யோடே அப்படியே ரூபாய மறந்தா இத்தையும் போட்டு விட்டாப்பலே! இந்தாங்க, எடுத்துப் பத்திரமா வையுங்க!''

கேசவன் ஒரு நிமிடம் தயங்கினான்.

'கன்னையனுக்கு நன்றி சொல்லிவிட்டு, 'நாஸ்தா'வுக்கு அரை ரூபாய் கொடுத்து விட்டுப் பேசாமல் அவனை அனுப்பிவிடுவதா? அல்லது பரீட்சைக்கு நேற்றே நண்பரிடம் கடன் வாங்கிக் கட்டி விட்டதாகச் சொல்லி அவனுடைய பழைய பாக்கியை முழுவதும் தீர்த்து விடுவதா?'

கன்னையன் செய்த காரியம் துணியை மட்டுமின்றிக் கேசவனின் மனத்தை அல்லவா வெளுக்கச் செய்துவிட்டது!

படித்துப் பாருங்கள்!

மந்திரச் சிலை

சம்பவங்களால் மட்டுமின்றி மனோநிலைகளால்கூட மர்மத்தை உண்டுபண்ண இயலும். அதே போல், சம்பவம் என்றாலே அதில் ஒரு துடிப்பு இருக்கத்தான் வேண்டுமென்பதில்லை. மனோநிலைகளைப் போல் அதிலும் இனம் தெரியாத ஓர் அமைதியைக் காண முடியும். குழந்தைகளுக்கென எழுதிய ஒரு கதையில், நிகழ்ச்சி, உணர்ச்சி இரண்டிலுமே இவ்விரு தன்மையும் இருப்பதை எடுத்துக் காட்டும் ஆசிரியர் பாராட்டுக்குரியவராகிறார். வீரதீர சாகசச் செயல்களும், வெகு நுட்பமான மனப் பான்மைகளும் விரோதமில்லாதபடி இசைந்துள்ளன இக்கதையில். பெற்றோர்கள் இவ்வித நூல்களைக் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுத்தால் அவர்களுடைய இரசனை உணர்வு (Aesthetic sense) நல்ல முறையில் உருவாகும்.

இந்த மதிப்புரையில் ஏதோ பெரிய பெரிய வார்த்தையாகப் போட்டிருக்கிறதே என்று அஞ்ச வேண்டாம். குழந்தைகள் சுவைத்து அனுபவித்துப் படிக்கும் வகையில், அலுப்பே தட்டாதபடி அமைந்துள்ள கதைதான் இது. குழந்தைகள் இலக்கியம் படைப்பதிலேயே நீண்ட அனுபவம் பெற்றவரல்லவா இதன் ஆசிரியர்?

ஆசிரியர்: வாண்டு மாமா; வெளியீடு: அருணோதயம், ராயப் பேட்டை, சென்னை-14 விலை: ரூ. 1-00.

மூன்று நண்பர்கள்

மணியான பயல் மணி; பட்டான இதயம் படைத்தவன் பட்டு; அந்தக் கிட்டுவோ படு கெட்டு. இந்த மூன்று நண்பர்களும் எப்படி வீர தீர சாகசம் செய்து சமுதாயத்துக்கே நண்பர்களாயினர் என்பதைச் சுவைபடக் கூறும் இக்கதை அவர்களை இளம் உள்ளங்களுக்கெல்லாம் நண்பராக்கி வைக்கிறது. பெரியோர்களும் ரசிக்கும் வகையில், முக்கியமாகச் சிறியோர்களுக்கென்றே எழுதப்பட்டுள்ள மர்மக் கதை இது. மர்மம் என்றாலும் தான் என்ன? துடிப்புடன், தனிப்புடன் வாசிக்கும் மாதிரியில் பக்கத்துக்குப் பக்கம் புதுப் புது மர்மம். உணர்ச்சிகளும், நிகழ்ச்சிகளும் செறிந்த இந்தக் கதையைப் படிக்கும் சாதுக் குழந்தைகளுக்குத் தயாராகக் 'கொழு மோர்' காய்ச்சி வைத்துக் கொள்ளுவது நலம். ஆசிரியர் வாண்டுமாமாவின் நடையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இக் கதையில் போட்டி போட்டுக் கொண்டு ஓடும் கார்களைவிட அதி வேகமாகத் தங்கு தடையின்றிச் செல்கிறது அது.

ஆசிரியர்: வாண்டுமாமா; வெளியீடு: அருணோதயம், ராயப்பேட்டை, சென்னை-14 விலை: ரூ. 1-50.

பொதுமக்களும் பொருளாதாரமும்

'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்று கண்டது தமிழகம். அந்தப் பொருளைப் பற்றியும், அதைக் குறித்த பொருளாதாரக் கலையையும் பொதுமக்கள் யாவரும் அவசியம் அறிய வேண்டும். இந்த உயரிய எண்ணத்துடனே இந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள் தென்மொழிகள் புத்தகடிரஸ்டினர். அதுவும் பொருளாதாரச் சிக்கல்கள் பெருகி வரும் இன்றைய நிலையில் விலைவாசிகள், உற்பத்தி, தேசிய வருமானம், பணத்தின் மதிப்பு, பாங்க் முறைகள், வாழ்க்கைத்தர நிர்ணயம், அந்நியச் செலாவணி, சர்க்காரின் வரிவிதிப்புடன் கொள்கைகள் இவை பற்றிச் சகலரும் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். இத்தகைய அறிவை அவர்கள் பெற நிச்சயமாக உதவும் முறையில் அமைந்திருக்கிறது இந்தப் புத்தகம். பாமரருக்கும் புரியும்படியான எளிய முறையில் அர்த்த சாஸ்திர தத்துவங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. அதோடு ஆங்கிலத்திலுள்ள மூல நூலை எழுதியுள்ள ஸ்ரீ வி. கே. நரசிம்மனும், பேராசிரியர் கே. வாசுதேவனும் கட்சிச் சார்புகள் ஏதுமேயின்றி, மாறுபட்ட கோட்பாடுகளைச் சீர்தூக்கிப் பார்க்கிறார்கள். இந்தப் புத்தகத்தின் ஏழாவது அத்தியாயத்தைப் படித்துப் பார்க்கும்போது, நம் சர்க்கார் உண்டாக்கி வரும் பண வீக்கம் எவ்வளவு ஆபத்தானது என்பதை யாரும் உணர முடியும். இதே போல் பதின்மூன்றும் அத்தியாயம், சோஷலிஸத்தின் நிலைகளை வெள்ளிடை மலையாக எடுத்துக் காட்டுகிறது. சோஷலிஸ பாணியைப் பறைபறையும் நம் சர்க்கார் அதே சமயத்தில் கலப்புப் பொருளாதாரத்தைப் பின்பற்றுவதாகவும் அல்லவா மாயம் செய்கிறது? இவற்றுக்குள்ள மாறுபாடுகளை அறியவும் இந்த நூல் உதவும்.

தமிழ் மொழி வழக்குக்கு இயைந்த முறையில் மிகவும் தெளிவான நடையில் மொழி பெயர்த்திருக்கிறார் ஸ்ரீ எம். எஸ். சிவஸ்வாமி அவர்கள். அடுத்த பதிப்பில் அச்சுப் பிழைகள் தவிர்க்கப்படுமென நம்புகிறோம்.

பிரசுரம்: அவர் இந்தியா டைரக்டரீஸ் அண்ட் பப்ளிகேஷன்ஸ், 53, வாலாஜா ரோட், சென்னை-2; விலை: ரூ. 1-95.


"தச்சு வேலையில் சிறந்தவன்" என்று அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.
நான் பலவீனமடைந்து சரியாக வேலையே செய்ய முடியவில்லை. எங்கள் மேஸ்திரி தினமும் இரண்டு வேளை போர்ன்-வீடா அருந்தச் சொன்னார்.
அவருடைய டாக்டரும் அதையே சொன்னாராம். நானும் அதைக் கடைப்பிடித்தேன். சக்தியும் பலமும் பெற்று ஊக்கத்துடன் வேலை செய்ய முடிந்தது.
இப்பொழுது அதிக வேலைகூட என்னால் செய்ய முடிகிறது.
எல்லாம் போர்ன்-வீடா தந்த சக்தி.
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURY'S SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
நான் இவ்வளவு திறமையாக வேலை செய்வதற்கு சக்தியளித்தது
Cadbury's
BOURN-VITA
சக்திக்கும் வலிமைக்கும்


உங்கள்
கேசத்திற்கும்
தலைக்கும்
ஆரோக்கியத்தையும்
போஷாக்கையும் அளியுங்கள்!
கால்கேட் ஹேர் டானிக் லெனோலின் என்ற ஓர் அற்புதமான எண்ணெயுடன் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இது தலையில் இயற்கையாக உண்டாகும் எண்ணெய்களை வற்றாது புதுப்பித்து— கேசத்தை ஆரோக்கியத்துடனும், சேர்த்தியாகவும் இருக்க உதவுகிறது.
COLGATE
HAIR TONIC
Lanolin
புதிய கால்கேட்
ஹேர் டானிக்
லெனோலின் கலந்தது


பெரிய டியூப் நோபின்
வாங்கி பணத்தை சேமியுங்கள்
ஒரு பெரிய டியூப் 3
சிறிய டியூபுகளுக்கு சமானம்
தி கல்கத்தா கெமிக்கல்
கம்பெனி லிட்.
கல்கத்தா-29
தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1

அவிநாசி அப்பர்

...தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்...

சைவ சமய குரவர்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமான் என்னும் மலைநாட்டு மன்னனுடைய சிறந்த நண்பர். அந்த நண்பரது அழைப்பின் பேரில் அவர் இருந்து அரசு செய்த திருவஞ்சைக் களத்துக்கே செல்கிறார். சோழ நாட்டிலிருந்து சேரநாடு செல்லும் வழியில் கொங்கு நாட்டையும் கடக்கிறார். வழியில் புக்கொளியூர் என்ற சிற்றூருக்கு வருகிறார். அங்கு அந்தணர்கள் வாழ்கிற ஒரு தெரு வழியாக அவரும் அடியவர்களும் நடக்கும்போது ஒரு வீட்டில் மங்கல வாத்தியங்கள் ஒலிப்பதைக் கேட்கிறார். அதே சமயத்தில் அந்த வீட்டுக்கு எதிர் வீட்டிலிருந்து அழுகை ஒலி எழுவதையுமே கேட்கிறார். அங்கு சற்றுத் தயங்கி நின்று இப்படி ஒரு குடும்பத்தினர் குதூகலிக்கவும் மற்றொருவர் கதறி அழவும் காரணம் என்ன என வினவுகிறார். அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள்: ஐந்தாண்டுகளுக்கு முன் ஐந்து வயது நிரம்பிய அந்தணச் சிறுவர்கள் இருவர் பக்கத்தில் உள்ள குளத்தில் குளிக்கச் சென்றனர். குளித்துக் கொண்டிருக்கும்போது அவர்களில் ஒருவனைக் குளத்தில் கிடந்த முதலை இழுத்துச் சென்று விழுங்கிவிட்டது. மற்றொருவன் மட்டும் வீடு வந்து சேர்ந்துவிட்டான். அப்படித் தப்பிப் பிழைத்த பையனுக்கு இன்று உபநயனம் நடக்கிறது. அதுதான் அந்த வீட்டில் மங்கல ஒலி. முதலையுண்ட பையனைப் பெற்றவர்கள் எதிர்வீட்டுக்காரர்கள். தங்கள் பிள்ளையிருந்தால் அவனுக்கும் உபநயனம் செய்து மகிழ்ந்திருப்போமே என்று எண்ணியிருக்கிறார்கள். அந்த ஏக்கம் காரணமாகவே அழுதிருக்கிறார்கள் என்கிறார்கள். இதைக் கேட்ட சுந்தரரின் உள்ளம் கருணையால் நெகிழ்ந்திருக்கிறது. அந்தப் பிள்ளைகள் இருவரும் நீராடிய குளம் எங்கே யிருக்கிறது என்று கேட்டு அக்குளக் கரைக்கே நடந்திருக்கிறார். அவர் பின் ஊரே திரளாகச் சென்றிருக்கிறது. குளக்கரை சென்று சேர்ந்ததும் பாடத் தொடங்கியிருக்கிறார். அவரோ இறைவன் விரும்புகிறபடியெல்லாம் தமிழ் பாக்கள் பாடி அவரை மகிழ்விக்கிறவர் ஆயிற்றே. பாட்டு ஒன்று, இரண்டு, மூன்று என்று வளர்ந்திருக்கின்றது. பின்னர் நான்காவது பாட்டு வருகிறது. பாட்டிலே வேண்டுகோள் ஒன்றும் இல்லை. ஒரு கட்டளையே பிறக்கிறது.

உரைப்பார் உரைப்பவை
    உள்க வல்லார் தங்கள் உச்சியாய்
அரைக்காடு அரவா! ஆதியும்
    அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப்
    புக்கொளியூர் அவிநாசியே
கரைக்கால் முதலையைப்
    பிள்ளை தரச் சொல்லு காலனையே.

என்பது பாட்டு. உத்தரவு இறைவனுக்குத் தான். இறைவன், காலன் மூலமாக முதலையிடம் பிள்ளையைத் தரச்சொல்ல வேண்டுமென உத்தரவு. வன்தொண்டராம் சுந்தரரின் உற்ற தோழன் ஆயிற்றே இறைவன். இந்த உத்தரவுக்கு அடிபணியாமல் இருப்பானா? முதலை குளத்தில் நீந்திக் கொண்டு வருகிறது. ஐந்து வருஷங்களுக்கு முன்பு தான் உண்டு ஜீரணித்த பையனை அப்படியே உமிழ்கிறது. அதிலும் அதிசயம் என்னவென்றால் ஐந்து வருஷங்களுக்கு முன் ஐந்து வயதுப் பாலகனாக உண்ட பையனை இப்போது பத்து வயதுப் பையனாகவே உமிழ்கிறது. பெற்றோருக்கும் மற்றோருக்கும் ஒரே மகிழ்ச்சி. பையனை ஐந்தாண்டு வளர்க்க வேண்டிய சிரமங்கூட இல்லாமல் அல்லவா முதலை தன் வயிற்றிலேயே வளர்த்திருக்கிறது? இனி இரண்டு பையன்களுக்கும் குறிப்பிட்ட நல்ல முகூர்த்தத்திலேயே உபநயனம் நடக்கிறது. இப்படி ஓர் அதிசயம் நடந்திருக்கிறது புக்கொளியூர் என்னும் அவிநாசியில். அந்த அவிநாசியில் இருப்பவர்தான் அவிநாசி அப்பர். அந்த அவிநாசி அப்பரைக் கண்டு வணங்கவே செல்கிறோம் நாம் இன்று.

அவிநாசி கோவை மாவட்டத்தில் அவிநாசித் தாலுகாவின் தலைநகரம். நகரம் என்று சொல்ல லாயக்கற்ற சிறிய ஊர்தான். கோயம்புத்தூரிலிருந்து வடகிழக்காய் இருபத்து ஐந்து மைல் பஸ்ஸிலோ காரிலோ சென்றால் இவ்வூர் வந்து சேரலாம். இவ்வூருக்கு நேரடி ரயில் பாதை கிடையாது என்றாலும் கோவை ஈரோடு ரயில் பாதையில் திருப்பூர் ஸ்டேஷனில் இறங்கி வடமேற்காய் எட்டு மைல் பஸ்ஸிலோ வண்டியிலோ போனாலும் வந்து சேரலாம். இந்தப் பாதையில் போவதில் ஒரு சௌகரியம். வழியில் மூன்றாவது மைலில் திருமுருகன் பூண்டி என்ற பாடல் பெற்ற தலம் இருக்கிறது. முருகன் தன் தந்தையான சிவபெருமானை வழிபட்ட தலம். இங்குள்ள கோயில் சிறிய கோயில் தான். கோயில் வாயிலில் கோபுரம் இராது. சந்நிதி மேற்கு நோக்கியது; அங்கு கோயில் கொண்டிருப்பவர் முருகநாதர். அம்மை முயங்கு பூண் முலையாள். சுவாமி சந்நிதிக்கு வலப்புறம் முருகனுக்குத் தனி சந்நிதி. இந்த முருகன் சிறந்த வரப்பிரசாதி. பைத்திய நோய் தீர்க்கும் சிறந்த வைத்தியனாகவே இன்றும் விளங்குகிறான். இக்கோயில் சுந்தரரோடு வரலாற்றுத் தொடர்புடையது. அவரது நண்பர் சேரமான் பெருமான் கொடுத்த பொருளை எடுத்துக் கொண்டு இந்த வழியில் வந்திருக்கிறார் சுந்தரர். சிவபிரான் ஒரு வேடிக்கை செய்ய விரும்பியிருக்கிறார். தம் பூத கணங்களை வேடர்களாக்கி, சுந்தரர் கொண்டு வந்த பொருளைப் பறிக்கச் சொல்கிறார். பொருளைப் பறி கொடுத்த சுந்தர



கருணாம்பிகை ஆலய விமானம்

ருக்கு ஒரே கோபம். அந்தச் சமயத்தில் பக்கத்திலிருந்த பிள்ளையார் சுந்தரரைக் கூப்பிட்டு, கொள்ளையடித்தவர் இருக்கும் இடத்தைச் சொல்கிறார். இந்தப் பிள்ளையார் இன்றும் ஊர்ப் பக்கத்திலுள்ள குன்றின்மேல் கூப்பிடு விநாயகர் என்ற பெயரோடு விளங்குகிறார். சுந்தரர் மிகுந்த கோபத்துடனேயே கோயில் வாயில் வந்து 'எல்லை காப்பது ஒன்று இல்லையாகில், எத்துக்கு இருந்தீர் எம்பிரான் நீரே?' என்றே திட்டுகிறார். இவர் திட்டையெல்லாம் புகழ் மாலையாக ஏற்றுக்கொண்டு திருடிய பொருள்களையெல்லாம் திரும்பக் கொடுத்துச் சுந்தரரை வழியனுப்பியிருக்கிறார் முருகநாதர். இந்தக் கோயிலில் ஒரு சிறிய குடவரை. அங்கு வேட்டுவ உருவத்தில் வந்த இறைவன், பொருள் பறிகொடுத்த சுந்தரர் எல்லாருமே செதுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்றும் ஐந்து மைல் மேற்கு நோக்கி நடந்துதான் அவிநாசியப்பர் கோயிலுக்கு வர வேணும். கோவை பவானிப் பெருஞ்சாலையில் வந்தால் தேர் முட்டி தெரியும். அதன் பக்கத்தில் ஒரு வாயிலும் தெரியும். ஆனால் அது கோயில் அல்ல. அந்த இடத்திலிருந்து கொஞ்சம் சுற்றி வளைத்துக் கொண்டு தெற்கே வந்தால்தான் கோயில் வாயில் வந்து சேரலாம். கோயில் கிழக்கு நோக்கி யிருக்கும். கோயில் வாயிலில் கோபுரம் முழுதும் கட்டப்படாமல் அடித்தளத்துடனேயே இருக்கும். கோயிலைச் சுற்றி வீதிகள் இல்லை. கோயிலுள் இரண்டு பிராகாரங்கள் உண்டு. கோயில் வாயிலில் உள்ள செல்வ விநாயகர், மணிவாசகர், சுந்தரர் எல்லோரையும் வணங்கியே உள் செல்ல வேண்டும். சுவாமி சந்நிதியை அழகிய வேலைப்பாடமைந்த நவரங்க மண்டபம் அழகு செய்யும். அங்கு ஊர்த்துவ தாண்டவர், காளி, வீரபத்திரர் முதலியோரது சிலைகள் உண்டு. இந்த மண்டபம், அர்த்த மண்டபம் எல்லாம் கடந்தே கருவறையில் உள்ள இறைவனைக் காண வேணும். அவிநாசி அப்பர் சுயம்பு மூர்த்தி. காசி விசுவநாதரது வேரில் கிளைத்த மூர்த்தி என்பார்கள். இதனால்தானே 'காசியில் வாசி அவிநாசி' என்றும், இத் தலத்தையே தென்காசி, வாரணாசி என்றும் கூறுகின்றனர்? இந்த இறைவனைத்தான், 'அரிய பொருளே! அவிநாசி அப்பா!' என்று கூவியழைத்திருக்கிறார் மணிவாசகர். அவிநாசி அப்பரை வணங்கி விட்டு, வெளி வந்து நவரங்க மண்டபத்தைக் கடந்தே அம்மன் சந்நிதிக்குச் செல்ல வேணும். செல்லும் வழியில் ஒரு மண்டபம். திருக்கல்யாண மண்டபம் என்பார்கள். இந்த மண்டபத்துக்குள் ஒரு மேடை. மண்டபத்தில் ஏறினாலும் இந்த மேடைமீது ஏற முடியாது. அங்குதான் கோயிலின் செப்புச் சிலைகளையெல்லாம் வைத்து நல்ல இரும்புக் கிராதி போட்ட கதவுகளால் பூட்டி வைத்திருக்கிறார்களே. கொஞ்ச நேரம் காத்திருந்தாவது நிர்வாகிகளைத் திறவுகோல் கொண்டு வரச் செய்து அங்குள்ள செப்பு வடிவங்களையெல்லாம் பார்த்து விட வேண்டியதுதான். அங்கு, வழக்கமாக உள்ள சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் இவர்களுடன் பிக்ஷாடனர், பைரவர், வில்லேந்திய வேலன், இரண்டு அம்பிகைகள் எல்லாம் இருப்பர். அத்துடன் அறுபத்து மூவரும், நல்ல பெரிய செப்புப் படிமங்களாக நிற்பர். இவர்களோடு முதலை வாயிலிருந்து பிள்ளையை அழைத்த சுந்தரருமே நிற்கிறார். சுந்தரரை வடித்தவன் முதலையை வடிக்க மறந்திருக்கிறான். ஆனால் சமீப காலத்தில் ஒரு முதலையையும் செய்து வைத்திருக்கிறார்கள். அந்த முதலை உடல் பருத்துக் கட்டுக்குட்டென்று இருக்கும். ஆம், ஐந்து வயதுப் பையனைப் பத்து வயது வரை வயிற்றுக்குள்ளேயே வைத்து வளர்க்கும் பொறுப்பு அல்லவா இருந்திருக்கிறது அந்த முதலைக்கு? இவற்றையெல்லாம் பார்த்துவிட்டே அன்னை கருணாம்பிகை சந்நிதிக்கு நடக்க வேணும்.

வழக்கமாக இறைவனுக்கு இடப் பக்கத்தில் இருக்கும் அன்னை இங்கு வலப் பக்கத்தில் கோயில் கொண்டிருக்கிறாள். இதற்கு ஒரு கதை. காசியில் இறைவனுக்கும் இறைவிக்குமே ஒரு பிணக்கு. இருவரும் அதனால் ஒருவரை விட்டு ஒருவர் விலகி வாழ்கிறார்கள். 'டைவோர்ஸ்' ஒன்றும் செய்துகொண்டதாகத் தெரியவில்லை. அம்மை திரும்பவும் இறைவனை அடையத் தவம் புரிகிறாள். தவத்துக்கு இரங்கிக் காசி விசுவநாதர் அவிநாசிக்கு எழுந்தருளி அம்மையை ஏற்றுக்கொள்கிறார். 'கட்டில் தலை திருப்பி வைத்தால் தலைவலி போம்' என்பதற்கேற்ப இடம் மாறி உட்கார்ந்து பிணக்கைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள் போலும்! அம்பாள் கோயில் முன்பும் ஒரு பெரிய மண்டபம். அதிலும் சிற்ப வடிவங்கள். அவை சிறப்பானவை அல்ல. கருவறையிலுள்ள கருணாம்பிகையைத் தரிசிக்கலாம். அக் கருவறையின் மேல்புறச் சுவரில் ஒரு தேள் செதுக்கப்பட்டிருக்கிறது. அதையும் வணங்குகின்றனர் மக்கள். தேள் எப்படி இங்கு வந்தது என்ப

தற்குத் தல வரலாற்றில் விளக்கம் ஒன்றுமில்லை. தேனுக்கும் அருளும் கருணை வாய்ந்தவள் கருணாம்பிகை என்று விளக்க முனைந்த கலைஞன் கற்பனையில் உருவாகியிருக்கலாம் அந்தத் தேன். நாமும் அன்னையின் கருணையை நினைந்து வாழ்த்தி வணங்கிவிட்டு வெளியே வரலாம். இந்தக் கோயிலில் நான்கு தீர்த்தங்கள். கோயிலுக்கு உள்ளேயே காசிக் கங்கை என்னும் கிணறு, கோயிலுக்கு எதிரில் நீராழி மண்டபத்துடன் கூடிய திருக்குளம். நள்ளாறு கோயிலுக்கு வடபுறம் ஓடுகிறது. கோயிலுக்கு முன்புள்ள திருக்குளத்துக்கு எதிரில் கோயிலுக்கு வடபுறமாக ஒரு தனிக் கோயில் இருக்கிறது. அங்கு அம்பிகை தவக் கோலத்தில் இருக்கிறாள். இது அவளைக் கருணாம்பிகையாக இறைவன் ஏற்றுக்கொள்ளும் முன் இருந்த தவக்கோலம். இங்கு பாதிரிமரம் ஒன்றும் இருக்கிறது. அன்று திருப்பாதிரிப்புலியூரில் காணாமல் தவித்தோமே, அந்த மரத்தை இங்கேயாவது பார்க்க முடிந்ததே என்பதில் மகிழ்ச்சி.

இக்கோயிலைக் கட்டிய பெருமையைச் சோழ மன்னர்களே தட்டிக்கொண்டு போகிறார்கள். ஆதித்த சோழன் காலம் முதல் இருநூற்று ஐம்பது ஆண்டுகள் கொங்கு நாடு, சோழ கேரள மண்டலம் என்ற பெயரோடு சோழர் ஆட்சியில் இருந்திருக்கிறது. 1149 முதல் 1183 வரை சோழ மண்டலத்தை ஆண்ட குலோத்துங்கன் என்னும் கொங்குச் சோழன் காலத்தில் இக்கோயில் முதல் முதல் கட்டப்பட்டிருக்க வேண்டும். இவன்தன் சாமந்தகனான மருதன் மலையன் என்னும் குலோத்துங்க சோழ விக்கிரமன் இக்கோயிலில் நந்தா விளக்கு ஒன்று எரிய நிபந்தங்கள் ஏற்படுத்தியிருக்கிறான். இந்தக் குலோத்துங்கனுக்குப் பின் இந்த நாட்டை ஆண்ட வீரசோழன், வீரராஜேந்திரன் முதலியோர் காலத்தில் சோழியான், ஏரானபுரத்து வணிகன், ஆற்றூருடையான், திருப்புறம்பயமுடையான் முதலிய காரியஸ்தர்கள் பலவகைத் தானங்களை இக்கோயிலுக்குச் செய்திருக்கிறார்கள். சோழர்களுக்குப் பின் இக்கொங்கு நாட்டை ஆண்டவர்கள் பாண்டியர்கள். கொங்குச் சோழர்களுக்குச் சளைக்காமல் கொங்குப் பாண்டியர்களும் அவிநாசி அப்பர் ஆலயத்துக்குப் பல திருப்பணிகளையும், பல தானங்களையும் செய்திருக்கிறார்கள். இவர்களில் வீரபாண்டியன், சுந்தரபாண்டியன், குலசேகரப்பாண்டியன் முதலியோர் முக்கியமானவர்கள். பாண்டியர்களுக்குப் பின் ஹொய்சளர்களும், மைசூர் அரச வம்சத்தினர்களும் செய்த திருப்பணிகள் பலப்பல. இன்றும் மைசூர் மகாராஜா இந்தப் பக்கம் வரும்போதெல்லாம் அவிநாசியப்பரைத் தரிசிக்காமல் செல்வதில்லை.

'என்ன என்னவெல்லாமோ கதை வளர்த்துக் கொண்டிருக்கிறீர். முதலையுண்ட பாலனை வரவழைத்த திருக்குளம் எங்கிருக்கிறது' என்று நீங்கள் முணுமுணுப்பது காதில் கேட்கிறது. அங்கு அழைத்துப் போகாமல் இருப்பேனா? கோயிலிலிருந்து மூன்று நான்கு பர்லாங் தூரத்தில் தென்மேற்குத் திசையில் ஓர் ஏரி இருக்கிறது. அதனை இன்று தாமரைக் குளம் என்று அழைக்கின்றனர். அந்தக் குளக்கரையில் ஒரு சிறு கோயில் இருக்கிறது. அக்கோயிலுள் சுந்தரர் இருக்கிறார். அவர் முன் முதலை வாயினின்றும் பிள்ளை வெளியே வருவது போன்ற சிலை உருவம் ஒன்றும் இருக்கிறது. குளக்கரையில் ஒரு பெரிய ஆலமரம். அங்கிருந்துதான் பாடியிருக்கிறார் சுந்தரர், தமது தேவாரப் பாடல்களை. இன்றும் பங்குனி உத்திரத்தில் அவிநாசி அப்பர், அந்தக் குளக்கரைக்கு எழுந்தருளுகின்றார். முதலை வாய்ப் பிள்ளையை அழைத்த திருவிளையாடல் உத்சவமாகவே கொண்டாடப்படுகிறது. இந்த வரலாற்றினை,


அவிநாசி அப்பர், கருணாம்பிகை

நாட்டார் அறிய முன்னாளில்
நன்னாள் உலந்த ஐம்படையின்
பூட்டார் மார்பில் சிறிய மறைப்
புதல்வன் தன்னைப் புக்கொளியூர்
தாட்டாமரையின் மடுவின்கண்
தனிமா முதலைவாய் நின்று
மீட்டார் கழல்கள் நினைவாரை
மீளா வழியில் மீட்பனவே.

என்று சேக்கிழார் பாடி மகிழ்கிறாரே. அந்தக் காலத்தில்தான் இந்த அதிசயம் நடந்ததென்றில்லை. சில நூறு ஆண்டுகளுக்கு முன் குருநாத பண்டாரம் என்பவர் அவிநாசியில் வாழ்ந்திருக்கிறார். குளத்தில் ஏற்பட்ட உடைப்பை அடைக்க வரவில்லை என்பதற்காக அரசாங்க ஊழியர்கள் அவர் பூஜித்த சிவலிங்கத்தை எடுத்துக் குளத்தில் எறிந்திருக்கிறார்கள். குருநாத பண்டாரமோ பூஜை செய்யாமல் உணவருந்துவதில்லை. பூஜை செய்யவோ லிங்கம் இல்லை, பட்டினியாய்க் கிடந்திருக்கிறார். வேறு வழியில்லை அவிநாசி அப்பருக்கு. பண்டாரத்தின் லிங்கத்தை ஒரு மீனை விழுங்கச் செய்து அந்த மீனை நீந்தி வந்து லிங்கத்தைக் கரையில் உமிழவும் செய்திருக்கிறார். இதற்குக்கூட ஒரு சிற்ப வடிவம் அங்கே இருக்கிறது.

மல்லியம் மங்களம்

காந்தன்

சதா சண்டைவிட்டு எதற்கும் ரகளை செய்யும் மாமியார் ஒருத்தி. அவள்தான் மல்லியம் மங்களம்; வீட்டில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் சதா ஒட்டுக் கேட்டு அவ்வப்போது தாயாருக்கு அஞ்சல் செய்யும் நாத்தி ஒருத்தி; வீட்டில் என்ன நேர்ந்தாலும் 'எல்லாம் அவன் செயல்' என்று சதா கூறிக் கொண்டு ஒன்றிலும் தலையிடாமல் ஒதுங்கி ஒதுங்கிப் போகும் மாமனார்; குடும்பத்தில் நேரும் சச்சரவு தாங்காமல் வீட்டை விட்டுச் சதா வெளியிலே இருக்க விரும்பும் மூத்த மகன் ராஜு; குடும்பச் சச்சரவு காரணமாகத் தன் காதலைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் தவித்து, தன் கல்யாணத்துக்குத் தானே தடையாயிருந்த இளைய மகன் கோபு; அன்பின் உருவமாய், பண்பின் சிகரமாய், பொறுமையின் வடிவமாய்த் திகழ்ந்த மூத்த மருமகள் பாக்கியம்; இந்தக் குடும்பத்தில் ஒரு மருமகளாக வந்து அகப்பட்டுக் கொண்டு விட்ட இளைய மருமகள் ராதா; ராஜுவின் மனச் சோர்வைப் போக்க முயன்று அவனுடைய தவறான நோக்கத்துக்கு இலக்கான ரோஹிணி; இவ்வளவு பேரும் சேர்ந்து ''மல்லியம் மங்கள''த்தை உருவாக்கி, மங்களகரமாக முடித்து வைக்கின்றனர்.

மாமியாரின் கொடுமையைத் தவிர இந்தக் கதையில் அதிகமாகத் தோன்றுவது மனைவியின்மேல் கணவன் கொள்ளும் சந்தேகம் தான். ஒருவன் உடன் பிறந்த தம்பிக்கும் தன் மனைவிக்குமே மாசு கற்பிக்க முற்படுவதைக் காண மிகவும் சிரமமாகத்தான் இருக்கிறது. கற்புக்கரசியின் பெருமையை வெளிப்படுத்துவதற்கும் தம்பி கோபுவின் நல்ல குணத்தைக் காட்டுவதற்கும் வேறு ஏதாவது சம்பவத்தைப் புனைந்திருக்கலாம். கோபு தன் அண்ணியின் கழுத்தில் வைர மாலையைப் பூட்டுகிறான். அந்தச் சமயம் பார்த்து அவனது அண்ணன் ராஜு அங்கு வந்து அந்தக் காட்சியைப் பார்க்கிறான். ஏற்கெனவே தங்கை மாலதியின் கோள் சொல்லும் திறமையினால் ராஜுவின் மனத்தில் மனைவியின் மீது சந்தேகக் கறை படிந்திருக்கிறது. இப்பொழுது அந்தச் சந்தேகம் வலுக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நம் மனத்திலும் வேதனை வலுக்கிறது.

மாமியார், மருமகள் சண்டை, மாமியாரின் விசுவரூபம் முதலியனவெல்லாம் மிகப் பண்டைக் காலத்தைச் சேர்ந்தவையாயினும், குடும்ப வாழ்க்கையை ஒட்டி யிருப்பதால் பார்க்கும்படி யிருக்கின்றன.

பழைய ரஸ்தாவிலேயே போய்க் கொண்டிருந்த இரைக் கதைக்கு, கோபு ஒரு திருப்பம் கொடுக்கிறான். எப்பொழுதும் தாழ்ந்து போய்க் கொண்டிருந்த தந்தைக்கு வீர மூட்டியவன் கோபுதான். வி. ஆர். ராஜகோபால் கோபுவாக வருகிறார். இதுவரையில் எத்தனையோ படங்களில், எத்தனையோ விதமான பாகங்கள் தாங்கித் தமாஷாக நடித்து வந்த ராஜகோபால் இதில் முக்கிய பாகமேற்று நடித்து மூக்கின் மேல் விரல் வைக்கும்படி செய்து விட்டார்.

சேவா ஸ்டேஜ் குழுவின் நாடகங்களில் நீண்ட காலமாக நடிக்கும் எஸ். என். லட்சுமி தான் மல்லியம் மங்களம். எதிலும் குற்றம் கண்டு பிடித்து மருமக்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் ஆதி காலத்து 'மாடல்மாமியா'ராக நன்றாய்நடிக்கிறார். கட்டின பசுப்போன்ற நல்ல மருமகள் பாக்கியமாக வரும் பண்டரிபாய் எப்படி



நடித்திருக்கிறார் என்று சொல்ல வேண்டியதில்லை. எப்படி நடிக்க வேண்டுமோ அப்படி நடித்திருக்கிறார்.

கோபுவின் காதலி ராதாவாக வரும் மைனாவதி தம் பாகத்தைச் சரியாகச் செய்திருக்கிறார். அவர் ஆடியிருக்கும் நடனம் அவசியம்தானா என்று படம் பார்க்க வந்த என் நண்பர் என்னைக் கேட்டார். மாமியார் அத்தனை ஆட்டம் ஆடினால், மருமகள் கொஞ்சமாவது ஆடவேண்டாமா என்று அவருக்குச் சமாதானம் கூறினேன்!

வீட்டுப் பிடுங்கல் பொறுக்க முடியாமல் அடிக்கடி பம்பாய் சென்று கொண்டிருந்த ராஜு ரயில் வண்டியில் தன் நண்பனின் தங்கை ரோகிணியைக் கண்டு சலனம் அடைகிறான். ரோகிணி ராஜுவினிடம் மிகவும் நெருங்கிப் பழகுகிறாள். கடைசியில் ராஜு அவளை மணம் செய்து கொள்ளும் அளவுக்குத் துணிந்தவுடன் அவள் தான் உடன் பிறந்த தங்கையாகவே அவனுடன் பழகி வந்ததாகச் சொல்லி எல்லோரையும் நம்ப வைக்க முயல்கிறாள். ஆனால் அது அவ்வளவு சரியாயில்லை. அவள் நல்ல எண்ணத்தோடு பழகியிருந்தால் ஒருமுறை கூட 'அண்ணா' என்று அழைக்காமல் இருப்பாளா? ராஜுவினிடம் கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக் குழைந்தும் இழைந்தும் பழகியபோது இருந்த இயல்பான நடிப்பு, ரோகிணியினிடம் கடைசியில் இல்லை. அதாவது ராஜுவைத் திருத்தி, தன்னை, அவனது சகோதரியாகக் கூறிக்கொள்ளும் போது ரோகிணியின் முக பாவம் உணர்ச்சியால் பொங்கவில்லை. அதனால் அந்தப் பாத்திரம் சப்பென்று போய்விடுகிறது. ரோகிணியாக வருபவர் தேவிகாவாதலால் தளுக்குக்கும் மினுக்குக்கும் குறைவில்லை.

மாலி என்ற மாலதி ராஜுவின் தங்கை, அதாவது மல்லியம் மங்களத்தின் செல்வ மகள், தாயாரின் கொடூர குணத்துக்கு அவ்வப்போது தூபம் போடுபவள். கற்பகம் அந்தப் பாத்திரத்தை ஏற்றுத் திறமையாய் நடிக்கிறார். கணவனோடு சண்டை போட்டு, அவன் வீட்டுக்குப் போகாமல் பழி வாங்குகிறாள். கதையில் பல சதிகள் உருவாவதற்காக அசட்டு மாலதியை அவசியம் மன்னித்து விடவேண்டியதுதான்!

எஸ். வி. சகஸ்ரநாமத்துக்கு ராஜுவின் பாத்திரம் பொருத்தமானதுதான். நன்றாய்த் தம்பியை அடித்து நொறுக்குகிறார்; பதிலுக்குத் தம்பியிடம் நன்றாய் அடிபடுகிறார். படத்தில் நன்றாகவும் நடிக்கிறார்.

ராஜுவின் தந்தை குணசேகர முதலியார் பாகம் எஸ். வி. சுப்பையாவுக்கு ஏற்ற பாத்திரந்தானென்றாலும், ஏனோ அவ்வளவாகச் சோபிக்கவில்லை. மகன் மூலம் வீர உணர்ச்சி பெற்று வீறுகொண்டெழுந்து ஓங்கிய கையுடன் மல்லியம் மங்களத்தை அடக்கச் சென்றபோது நடிப்புத் திறமை பளிச்சிடுகிறது. மற்றச் சந்தர்ப்பங்களில்தான் 'எல்லாம் அவன் செயல்!' என்று இருந்து விடுகிறாரே!

சின்ன வயசிலிருந்து என்னதான் நெருங்கிப் பழகியிருந்தாலும், வயது வந்த வாலிபனான கோபு வைர மாலையை அண்ணியின் கழுத்தில் தானே பூட்டி விடுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. வேண்டுமென்றே திணிக்கப்பட்ட நிகழ்ச்சியாகவே தோன்றுகிறது.

தாய் மல்லியம் மங்களத்தின் கொடுமை தீர்ந்த பிறகுதான் தன் மனைவி ராதாவை வீட்டுக்கு வரவழைக்க வேண்டும் என்று கோபு நினைக்கிறான்; தான் மாற்றாந்தாய்க் கொடுமையிலிருந்து தப்புவதற்கு விரைவில் கணவன் வீட்டுக்குப் போய் விடுவது நல்லதென்று ராதா துடிக்கிறாள். இந்த இருவித உணர்ச்சிகளும் கதையின் முக்கிய அம்சங்களாக விளங்குவதுடன் நன்றாகவும் அமைந்திருக்கின்றன. கதைக்கு ஓரளவு 'சஸ்பென்ஸா'வும் இருக்கிறது.

மேஜர் வேலுவாக (மாலதியின் மாமனார்) கே. சாரங்கபாணி தோன்றுகிறார். ராணுவத்தில் சேவை செய்து ரிடையர் ஆன ஒரு இறுக்குப் பிடித்த மேஜர் வீட்டிலேயே கலாட்டா பண்ணிக் கொண்டிருக்கிறான். அவனுடைய அட்டகாசங்கள் கதையோடு பொருந்தாவிட்டாலும், ஹாஸ்யம் என்ற அளவில் கூட அந்த அசட்டுத்தனங்களைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லையே! சிறந்த ஹாஸ்ய நடிகரான சாரங்கபாணி அந்தப் பாத்திரத்தைச் சோபிக்கச் செய்ய முயன்றிருக்கிறார்.

ஏ. வீரப்பன் மாலதியின் கணவன் குமரவேலுவாக வந்து நன்றாய் நடித்து நாட்டியமும் ஆடுகிறார். எஸ். சௌந்தரராஜனின் டைரக்ஷன் நன்றாயிருக்கிறது.

''சிங்கார வேலா விளையாட வா!'', ''அவளின்றி நான் இல்லை பெண்ணே'' என்னும் பாடல்கள் நன்றாயிருக்கின்றன. இசையமைப்பும் இனிமையாயிருக்கிறது.

தமிழில் பல நல்ல படங்களையெடுத்து இருபத்தைந்து ஆண்டுகளாகப் பிரசித்தி பெற்று விளங்கும் தமிழ் நாடு டாக்கீஸாரின் வெள்ளி விழா வெளியீடாக ''மல்லியம் மங்களம்'' வந்திருக்கிறது. தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளரான பி. எஸ். ராமையா கதை, வசனம் எழுதியிருக்கிறார். இருந்தும் படம் பல வாரங்கள் ஓடும் என்று உறுதி கூறுவதற்குப் படத்தில் ஒன்றுமில்லை.




அழகுமிக்க தோற்றம்
மெல்லிய சருமத்திற்கு சமன்மூட்டவும்,
மிருதுவாகவும் வெண்மையாகவும் திகழச்
செய்வதற்கு ஒரு ஸ்நோ அவசியம்; அதுதான்
"'ஹாஸலீன்' ஸ்நோ". உஷ்ணப்
பிரதேசங்களுக்கென தனி முறையில் தயாரிக்கப்
பட்டது "'ஹாஸலீன்' ஸ்நோ"
குளுமையுடன் சுகம் தருகிறது. ஏமாற்றம்
செய்ய முடியாத இதன் பாக்கிங் ஒன்றே
இதன் தூய்மைக்கு உத்தரவாதம்.
HAZELINE SNOW
"'HAZELINE' SNOW"
"'ஹாஸலீன்' ஸ்நோ"
டிரேட் மார்க்
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு

கர்த்தாவின் பூதம்

ரவீந்திரநாத் டாகூர்

(ரவீந்திரநாத் டாகூரின் 'லிபிகா' என்ற வசன கவிதை நூலில் வரும் ஒரு ரஸ ரசனை. இது இன்றைய பாரதம் உள்ள நிலையை எவ்வளவு பொருத்தமாக விளக்குகிறது!)

1

நாட்டின் கர்த்தாவுக்கு முதுமை வந்து அவர் மரணத் தறுவாயில் இருக்கையில் நாட்டு மக்கள் அனைவரும் ''ஐயோ! நீங்கள் மறைந்து விட்டால், அப்புறம் எங்கள் கதி என்னவாகும்?'' என்று கதறினர். கர்த்தாவின் மனமும் வேதனைப்பட்டது. 'நான் போன பிறகு நாட்டில் அமைதியை நிலைச் செய்ய யார் இருக்கிறார்கள்?' என்று சிந்தனையில் ஆழ்ந்தார்.

மரணம் வரும்போது யாரால்தான் அதைத் தடுக்க முடியும்? கடவுளின் குரல் கேட்டது. 'கவலை வேண்டாம். உங்கள் கர்த்தா பூதமாகச் சில காலம் உலாவட்டும். மனிதனுக்குத்தான் சாவு. பூதத்துக்குச் சாவில்லை.'

2

நாட்டு மாந்தருக்கு நிம்மதி ஏற்பட்டது. வருங்காலத்தை யோசித்தால் எத்தனையோ சங்கடங்கள் எழும். ஆனால் கர்த்தாவின் பூதத்திடம் நம்பிக்கை வைத்துவிட்டால் மூளையை வாட்டிக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லையல்லவா? மக்களுக்குத் தலை இல்லாமல் போகவே தலைவலியும் இல்லாமல் போயிற்று. சிலர் மட்டும் நமக்கு இயல்பான மூளையை உபயோகித்து நாட்டுக்கு நல்லதை வருக்கையில் இந்தக் கர்த்தா பூதம் அவர்களுடைய காதுகளைக் கிள்ளித் திருகியது. அதன் கையிலிருந்து தப்புவதோ அதை எதிர்த்து நிற்பதோ அதன் மீது வழக்குத் தொடுப்பதோ அப்படி எளிதான காரியமன்று. நாட்டில் பெருவாரியான மக்கள் இந்தப் பேய் ஆட்சியில் கண்ணை மூடிக் கொண்டு நடக்கலாயினர். தத்துவப் பேரறிஞர்கள், ''இப்படிக் கண்மூடித்தனமாகச் செல்வதுதான் உலகிலேயே தொன்மை தொட்டு வரும் ஓர் ஒழுங்காகும். இதைத்தான் விதி வகுத்த வழி என்பர். படைப்பின் ஆதியில் புழுக்கள்தாம் இப்படி அணிந்து செல்லுமாம். புல்லினிடையிலும், மரங்களிலும் இத்தகைய ஒழுங்கைக் காணலாம்'' என்ற வர் புருவத்தைத் தூக்கி.

இதைக் கேட்டுப் பூத ஆட்சிக்கு உட்பட்ட நாடு தன் பண்டைப் பெருமையை நினைந்து பெருமிதத்தால் பொங்கியது.

இந்தக் கர்த்தா பூதத்தின் ஏறுண்டுதான் பூதாகாரமான சிறை அதிகாரி. அந்தச் சிறைக்கூடத்தின் மதில் மனா புலனுக்கு எட்டாத ஒரு மாயப் பொருள். ஆகவே, எந்திரம் செய்து அதிலிருந்து எப்படி வெளியேறுவதென்ற பிரச்னைக்கே இடமில்லை. இந்தப் பெரும் சிறையில் ஒப்பின்றி சுழலும் செக்கிலிருந்து கடைத் தெருவில் விற்று விலையாக்குவதற்கு உழக்கு எண்ணெய் கூடக் கிடைப்பதில்லை. இதை இழுக்கும் மனிதருடைய உரந்தான் தேய்ந்து மாய்ந்து வந்தது. உரம் செத்த மனிதன் எதற்கு உதவுவான்? உண்ணச் சோறும் உடுக்கத் துணியும், வாழ உடல் நலமும் அவசியமா என்ன? அமைதி நிலவுகிறதே, அது போதும்.

இப்படி ஒரு பூத அரசியல் மற்ற நாடுகளில் தலைவிரித்து ஆடினால் அதை விரட்ட அந் நாட்டு மக்கள் மந்திரவாதியைத் தேடிப் பிடிப்பார்கள். ஆனால் இந்த ராஜ்யத்தில் அந்தத் தொல்லையே இல்லை. காரணம் அந்த மந்திரவாதியைக்கூட இந்தக் கர்த்தா பூதம் ஆட்டி வைக்கிறதே!


3

நாட்கள் விரைந்தன. இந்தப் பூத ஆட்சியைக் குறித்து யாருமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பொறுமையும் இழந்துபோகவில்லை. 'மக்கள் பெருமைப் பட்டதெல்லாம் என்ன, பூதத்தின் பிடிக்கு உட்பட்டு வேலியைத் தாண்டிப் போகாமல் 'போ' என்றோ, 'மே' என்றோ குரல்கூடத் தராமல் ஆட்டு மந்தைபோல், கட்டிப் போட்ட இடத்திலேயே, வருங் காலத்தில் அக்கறையின்றி அகப்பட்டதைத் தின்று விட்டுத் தூங்குகிறோம்' என்ற சித்தாந்தம் மெல்லப் பரவத் தொடங்கியது.

ஆனால் ஒரு சிறு விஷயம் காரணமாகக் கிளர்ச்சி மூண்டது. வேறெந்த நாட்டிலும் இதுபோல் ஒரு பூதம் ஆட்சி செலுத்தவில்லை. அங்கேயுந்தான் மனிதர் இழுக்கும் செக்கு சுழல்கிறது. ஆனால் இரத்தத்துக்குப் பதிலாக எண்ணெயைத்தான் பிழிகிறது; வருங்காலத்திலும் தேர் உருளை நன்கு சுழன்று ஓடுவதற்குத்தான்-விழலுக்குப் பாய்ச்ச அல்ல. அங்கே மக்கள் இப்படி மயங்கிக் கிடக்கவில்லை. பயங்கர விழிப்புடன் இருக்கின்றனர்.

4

இம்மாபெரும் பூதத்தின் ஆளுகையில், ஊரும் அடங்கியது. உறங்கடா என் கண்மணி' என்று தாலாட்டிசைதான் எங்கும் ஒலிக்கிறது. குழந்தை வரைக்கும், அதை வளர்ப்பவர் வரைக்கும் இது நலம் தரும் விஷயமே. ஆனால் ஊர் அடங்க வேண்டிய பிரச்னை ஒன்று இருக்கிறதே. என்னென்னவோ பயங்கரங்கள் இந்தக் குழந்தையைத் தூங்கவிடாமல் 'பூச்சி' காட்டுகின்றனவே; இந்தத் தாலாட்டிசையைக் கெடுக்க ஏதாவது வந்து தொலைகிறதே. இதனால் நாட்டிலுள்ள கோமணிகள், ''இது ஏன் இப்படி?'' என்று விசாரத்துக்குள்ளாயினர்.



பெண் : உபயோகம் இல்லாத வல் லுக்களை யெல்லாம் எங்கப்பா பிறத்தி யார் தலையில் கட்டி விடுவார்!

மாப்பிள்ளை : என் தலையிலும் ஒன் றைக் கட்டியிருக்கிறார். தெரியுமோ?

பெண் : ? ? ?...

அவர்கள் கூட்டம் போட்டு, தம் குடுமி யைத் தட்டி, ஒரு குரலாய், "இது நம் கர்த்தா பூதத்தின் பிசகன்று; பூதம் காத்த நம் நாட்டின் தவறும் அன்று; 'பூச்சி' காட்டுகிறார்களே அவர்களுடைய தப்புதான். அவர்கள் எதற்காக இப்படிச் செய்கிறார்கள்?" என்று பேசிப் பேசி அலுத்துப் போயினர்.

நாட்டு மக்கள் இவ்வாய்தர் மொழியைக் கேட்டு, "அதுதான்.......அப்படித்தான்" என்று ஆறுதல் அடைந்தனர்.

தவறு யாருடையதாக இருந்தால் என்ன, நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் இந்தப் பூதத் தின் கிங்கரர்கள் இறுமிறுமென்று சுற்று கிறார்கள். பெரும்பூதங்கள் (பேர் வாளில்லாப் பேர்வழிகள்) நாட்டின் வழிதுறை யெங்கும் நடமாடுகின்றனர். நல்மக்களுக்கு வீட்டில் நிம்மதியுமில்லை, வெளியே வந்து மூச்சுவிடு வதற்கும் வழியுமில்லை. எந்தப் பக்கம் பார்த் தாலும், 'வரி கொடு, இன்னும் வரி' என்ற கெடுபிடியே. 'எங்கிருந்து கொடுப்பது இந்த வரிப் பணத்தை'என்பதே இப்போது பிரச்னை. இதற்கிடையில் நாளாதிசையிலிருந்து வெட் டுக்கிளிக் கூட்டம் பண்ணைகளில் இறங்கிக் கதிரைப் பாழ்படுத்துகின்றன. இதையெல் லாம் கவனிப்பதற்கு இதுவா சமயம்? உஷா ராக இருப்பவர் இவர்கள் பக்கம் சேருவதே இல்லை; வீண் தொல்லை எதற்கு என்றுதான். ஆனால் இப்படி ஒதுங்கி வேடிக்கை பார்ப்ப வர்கள் இடுமென்று இவர்களுடன் கலந்து கொள்ள வருகின்றனரே. இந்த விந்தைப் போக்கைக் கண்டு கோமணிகள் பழைய கவடிகளைப் புரட்டி "பத்திரம் இவர்கள் நல்ல எண்ணம் உடையவர்கள்; ஜாக்கிரதை அவர்கள் ஒரு மாதிரி, சேர்வதுகூட பாபம். உஷாராயிருங்கள் மக்களே. ஏதோ தொட்ட தும் தொடாததுமாய்ப் பழகுங்கள். ஈரப்பந்தி மிலை வைப்பது: விழித்திருப்பதுபோல் உறங் குங்கள்" என்று உரைவழங்கினர்கள். இதைக் கேட்டு மக்கள் ஆனந்த ரவசராயினர். ஆனால் ஒரு பிரச்னை மட்டும் தீரவில்லை. 'வரிப் பணம் எங்கிருந்து கொடுப்பது?' என்பதுதான்.

மயானத்திலிருந்து ஒரு குரலொலி 'ஓ' என்று வந்து, இதற்குப் பதில் தந்தது: 'ஏன் உங்கள் மானத்தை விற்று, கௌரவத்தைப் போக்கி, ரத்தத்தைச் சிந்திக் கொடுங்கள்' பிரச்னைகள் எழுந்தால் ஒன்றோடு நிற்பதில்லை. பிறுபிறுவென்று ஒன்றன்பின் ஒன்றாய்ப் பல பிரச்னைகள் வரும். 'இந்தப் பூதத்தின் ஆட்சி இப்படியே ஊழிக்காலம் வரையில் நீடிக்குமா?' என்ற பிரச்னை வந்தது.

இதைக் கேட்டதும் குழந்தைகளைத் தாலாட் டித் தூங்கப் பண்ணும் பாமி, அத்தை, பாட்டி இவர்கள் குழாம் காதைப் பொத்தி, 'ஐயோ! வந்தது கேடு காலம் என் முப்பாட்டனார் காலத்தில் கூட இப்படி ஒரு கேள்வியை யாரும் போட்டதாகத் தெரியவில்லை. அப்படி யாரும் எங்கள் கத நித்திரைக்குப் பங்கம் வந்து விட்டதே, கடைசியில்" என்று ஒப்பாரி வைத்தனர்.

இந்தப் பிரச்னையைக் கிளப்பியவன் "அது தெரிகிறது. ஆனால் இன்று இந்த வெட்டுக் கிளிக் கூட்டம் இப்படி நாட்டில் புகுந்து தொல்லை இழைக்கிறதே...இதைத் தடுக்க என்ன வழி சொல்லுங்கள்" என்றான்.

அந்தப் பாட்டிக் குழாத்தினர், "வெட்டுக் கிளியைப் பார்த்து ஹரிநாம சங்கீர்த்தனம் செய்தால் ஓடி விடாதா?" என்றனர்.

இந்தக் காலத்துப் பிஞ்சுகள் சில ஆத்திரத் துடன் எழுந்து, "எப்படியாவது இந்தப் பூத ஆட்சியிலிருந்து நாட்டை மீட்போம்" என்று அறைகூவினர்.

பூதத்தின் ஏவலாட்கள் கண்கள் கோபத் தால் சிவந்து பிதுங்க "ஏய், பசங்களா, சும்மா இருங்களடா. இன்னும் செக்கு நிற்க வில்லை, ஓடிக் கொண்டிருக்கிறது" என்று வெருட்டினர்.

இதைக் கேட்டு, அவ்வீரர் இருவர் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போயினர்.

விஷயத்தை ஆராய்வோம். நாட்டின் கர்த்தா உயிருடன் இல்லை; இறந்து போகவும் இல்லை; பூதமாகத்தான் மாறி விட்டார். இரண்டும் கெட்டதோர் நிலை. நாட்டை அந்தப் பூதம் நேரிடையாக ஆட்டவுமில்லை; அதை விட்டு அகலவுமில்லை.

நாட்டில் ஓர் இருவர்-அவர்கள் பகல் வேளை யில் இந்தப் பூத சிப்பந்திகளுக்குப் பயந்து எதையும் வெளிப்படையாகப் பேசவில்லை—நடுநிசியில் கை கட்டிய வண்ணம் கர்த்தா பூதத்தை அணுகி, "கர்த்தா, தாங்கள் விலகிப் போக நாள் இன்னும் வரவில்லையா?" என்று குறி கேட்டனர்.

அதற்கு அப்பெரும்பூதம், "அட, முட்டாள் களே! பிடித்துக் கொள்ளவோ, விட்டுத் தொலைக்கவோ நான் யார், என்னால் என்ன ஆகும்? நீங்கள் என்னை விட்டுப் போனாலே நான் விலகிப்போன மாதிரி" என்றது.


"பயமாக இருக்கிறதே, கர்த்தா?" என்ற னர் அவர்கள்.

"அங்கேதான் அந்த பூதம் ஊன்றிக் கொண்டிருக்கிறது" என்றார் கர்த்தா.

தமிழாக்கம் : த. நா. குமாரசுவாமி

ரெக்ஸ்

ஜெல்லி



இன்பமான காட்சி...மிகுந்தசுவை...மிகவும்நல்லது!

பழங்களின் மணம் கமழும், எளிதில் தயாரிக்கக்கூடிய ஒரு இனிப்பு இதோ இருக்கிறது. ரெக்ஸ் ஜெல்லி கிரிஸ்டலை தண்ணீரில் கலக்கி, உறைய வையுங்கள்.

குடும்பத்தார் விரும்பும் போஷகமளிக்கும், இலேசான ஓர் சிற்றுண்டி. உடம்புதேறுவதற்கும்கூட இன்றியமையாதது. ரெக்ஸ் ஜெல்லி கிரிஸ்டல் அறுவகைச் சுவைகளில் கிடைக்கின்றன. ராஸ்பெரி, ஸ்ட்ருபெரி, லெமன், பைனபிள், ஆரஞ்சு, செர்ரி.



கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) ப்ரைவேட் லிட்.

இந்தியாவிற்கான ஏஜெண்டுகள்: பாரி அண்டு கோ லிமிடெட்.

அழகாயிருப்பது எப்படியென்று கூறியதற்கு சந்தோஷம்

நீங்கள் கூறுவதுபோல் சுலபமான வழி

பிரதிதினமும் கூந்தலில் ஸ்வஸ்திக்

பர்ப்யூம்டு காஸ்டர் ஆயில் தேய்த்து வாரிக்கொள்வதே

ஸ்வஸ்திக் பர்ப்யூம்டு காஸ்டர் ஆயில்

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்.



சொர்க்கத்தின் நிழல்

ஜெகசிற்பியன்

அத்தியாயம் இருபத்துமூன்று

பாசபங்கமடைந்த இரு உள்ளங்களின் ஒரு மொத்த வடிவமாய்ப் பாழ்த்துக் காணப்பட்டது அந்தப் பங்களா. பல காலமாக மனித வாசமே அற்றுப் போன மாதிரி எங்கும் எதிலும் ஒரு வாட்டத்தன்மை விரவிக் கிடந்தது. அந்த வாட்டக் கறை படிந்த ஒரு சோகச் சிலையாய்க் கூடத்தறையிலே குன்றிக் குறுகி உட்கார்ந்திருந்தார் டாக்டர் ராமநாதன். சுந்தரியம்மாள் எங்கே? அவள் எங்கேயிருக்கிறாள் என்றே தெரியவில்லை. கமலி மட்டும் சமையலறையில் நடமாடிக் கொண்டிருப்பது தெரிகிறது. எப்போதும் போல் அவள் மகிழ்ச்சியுடனேயே காணப்படுகிறாள்.

இரு கை விரல்களையும் கூடாரம்போல் குவித்துச் சேர்த்து வாய்க்கு நேரே வைத்துக் கொண்டு, பூட்டிக் கிடந்த விவேகானந்தனின் அறைக் கதவையே வெறிக்கப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்த ராமநாதன் சட்டென்று பின்னால் திரும்பி, 'ஏ, கண்ணாயிரம்!'' என்று உரக்கக் கூப்பிட்டார்.

வராந்தா மூலையில் குன்னம் பிடித்து உட்கார்ந்திருந்த கண்ணாயிரம், ''ஐயா, எசமான்!'' என்று குரல் கொடுத்துக் கொண்டே எழுந்து ஓடி வந்தான்.

''எதற்கடா இந்த அறையைப் பூட்டிப் போட்டிருக்கிறாய்? திறந்து வைப்பதற்கென்ன?'' என்று கோபமாகக் கேட்டார்.

கண்ணாயிரம் தலையைச் சொறிந்து கொண்டு தன் எஜமானரைப் பீதியுடன் பார்த்தான்.

''வீட்டை விட்டுப் போனவன் திரும்பி வரவே மாட்டான் என்று நீ தீர்மானம் பண்ணிவிட்டாயா? அதனால்தான் அந்த அறைக் கதவை இழுத்துப் பூட்டி வைத்திருக்கிறாயா?'' என்று மீண்டும் இரைந்தார் ராமநாதன்.

கண்ணாயிரத்தின் கண்களில் வியப்புக் குறி தென்பட்டது. ''அப்படின்னு நம்ம சின்ன ஐயா திரும்பி வரப் போறாருங்களா எசமான்?'' என்று தன்னை மீறிய ஆவலுடன் குழைந்து கேட்டான்.

டாக்டர் அவனை விழித்துப் பார்த்தார். பிறகு தம் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு, ''யாரடா அப்படிச் சொன்னது?'' என்று எரிந்து விழுந்தவர், ''சரி, சரி, போ! அந்த அறை பூட்டியே கிடக்கட்டும்!'' என்றார் கரகரத்த குரலில். குனிந்த தலையுடன் அங்கிருந்து நழுவினான் கண்ணாயிரம்.

கூடத்தறையிலிருந்து எழுந்த இந்தச் சத்தத்தைக் கேட்டுத்தானோ என்னவோ, சுந்தரியம்மாள் காப்பித் தம்ளருடன் அவசரமாக அங்கு வந்தாள். தன் கணவரின் முகத்தைப் பட்டும் படாதது மாகப் பார்த்த அவள், ''வந்து ரொம்ப நேரமாகுதா? என்னைக் கூப்பிடவே இல்லையே!'' என்றாள் புன்முறுவலுடன்.

டாக்டர் தம் மனைவியைத் திரும்பிப் பார்த்துவிட்டு, காப்பியை எடுத்துப் பருகிக் கொண்டே, ''நான் வந்து அரை மணி நேரமாகிறது!'' என்று சலிப்புடன் சொல்லித் தம்ளரைக் கீழே வைத்தார்.

சுந்தரியம்மாள் எப்போதும் போலத்தான் காணப்பட்டாள். அவள் எவ்விதக் கவலைக்கும் உள்ளாகியிருப்பதாகத் தெரியவில்லை. சதா அவளது முகத்தில் தவழும் அந்தப் புன்னகையில்கூட மாற்றமோ குறைவு ஏதும் தென்படவில்லை. ஆனால், டாக்டரோ? அவர்தான் ஆளே மாறிப் போயிருந்தார். கடந்த இரண்டு மாதங்களுக்குள் ஓர் இருபது வருஷ மூப்பின் தளர்ச்சி அடைந்த விட்ட மாதிரி தோற்றமளித்தார்.

காப்பித் தம்ளரை எடுத்துக் கொண்டு அங்கிருந்து போகத் திரும்பினாள் சுந்தரியம்மாள்.

சட்டென்று தலைநிமிர்ந்த ராமநாதன் மெலிந்த குரலில், ''சுந்தரி, விவேகானந்தனைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா? அவன் எப்படி இருக்கிறானாம்?'' என்று வினவினார்.

சுந்தரியம்மாள் அவர் முகத்தைப் பார்க்காமல் வேறு பக்கம் திரும்பி நின்று கொண்டு, ''நீங்கள் ஏன் எப்போதும் அவனைப் பற்றியே நினைத்து நினைத்து இப்படி உருகிக் கொண்டிருக்கிறீர்கள்? நம்மை மதிக்காமல் வீட்டை விட்டுப்போன அந்தக் கழிதலை எக்கேடு கெட்டுப்போனால் நமக்கென்ன? இனி அவனைப் பற்றி என்னிடம் எதுவும் கேட்காதீர்கள்!'' என்று உள்ளடங்கிய ஆத்திரத்துடன் சொன்னாள்.

டாக்டரின் முகத்தில் அவலச் சிரிப்பொன்று படர்ந்தது. ''ஹூம்! உனக்

கென்ன, சுலபமாகச் சொல்லிவிட்டாய். ஆனால், உன்னைப்போல் என் மனசைக் கல்லாக்கிக் கொள்ள முடியவில்லையே!'' என்று கம்மிய குரலில் சொன்ன அவர் ஒரு பெருமூச்சு விட்டு, ''ம்.... நீ ஏன் இப்படி வெறுப்படைந்து பேசுகிறாய் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. என்மேல் இருக்கும் கோப தாபத்தை உன் தம்பியின்மீது காட்டுகிறாய். அவனை வெறுப்பதுபோல் என்னை வெறுக்கிறாய். அது நியாயம்தான். என்னால்தானே அவன் வீட்டை விட்டு வெளியேறினான்? நான் வாய்த்துடுக்காகச் சொன்னதைக் கேட்டுத்தானே அவன் மனம் உடைந்து போனான்? குற்றம் என் பேரில்தான்!'' என்றார்.

ஊசியால் குத்தப்பட்டவள் போல் துடித்து நிமிர்ந்த சுந்தரியம்மாள், ''ஐயையோ! தயவுசெய்து அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்! நீங்களும் என்னை வெறுத்து ஒதுக்காதீர்கள்!'' என்று அடைத்த குரலில் படபடத்தாள். ''பிள்ளைக்குப் பிள்ளையாய் அவனை நேசித்தோம். அந்த ஒரு பேச்சை அவனால் பொறுக்க முடியவில்லையே! இப்படிப் பட்டவன் நமக்கு என்னத்தைச் சாதித்து விடுவான்? அவன் வீட்டிலிருப்பதும் ஒன்றுதான்; வெளியே இருப்பதும் ஒன்றுதான்!''

''சரி, சரி; நம் பெருமையைப் பற்றி நாமே பேசிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அவன் நமக்கு எதையும் சாதிப்பான் என்று எதிர்பார்த்து நான் அவனை நேசிக்கவில்லை. என்னுடைய பிள்ளையாகவே அவனை எண்ணியிருந்தேன். அதை அவன் புரிந்து கொள்ளவில்லை. அதுதான் என் மனத்துக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது.'' அடைத்த குரலில் சொல்லித் தம் வழுக்கைத் தலையைத் தடவிவிட்டுக் கொண்டார் ராமநாதன்.

சுந்தரியம்மாளின் கண்கள் கலங்கின. அவள் முன்றானையால் முகத்தைப் பொத்திக் கொண்டாள். சற்று நேரம் அவர்களிடையே ஆழ்ந்த அமைதி நிலவியது.

டாக்டர் தம் மனைவியை மெள்ளத் திரும்பிப் பார்த்து, 'ஆமாம்! அவனைப் பற்றித் தினமும் ஏதாவது சேதி சொல்வாய்! கடந்த மூன்று நாட்களாக அப்படி ஒன்றுமே சொல்லவில்லையே, ஏன்?'' என்று கேட்டார்.

'ஏதாவது தெரிந்தால்தானே சொல்வதற்கு?'' என்று கவலை தோய்ந்த தொனியில் சொன்னாள் சுந்தரியம்மாள்.



"இதற்கு முன்னே உனக்கு எப்படி அவனைப் பற்றிய தகவல் கிடைத்தது?"

"அந்த நாடக நடிகை கோமதி என்ற பெண் தினமும் என்னைச் சந்தித்து அவனைப் பற்றிய தகவல்களைச் சொல்லி வந்தாள்! ஆனால், கடந்த மூன்று நாட்களாக அவள் ஏனோ வருவதில்லை. வராமலிருப்பதற்குக் காரணமும் தெரியவில்லை. ஒருகால் அவனுக்கு இந்த விஷயம் தெரிந்து, அவளைக் கண்டித்துப் பயமுறுத்தி விட்டானோ என்னவோ! எனக்கு இப்போது அவனைப் பற்றிக்கூடக் கவலை இல்லை; அந்தப் பெண்ணைப் பார்க்காமல் இருப்பதுதான் மனசுக்கு ரொம்பவும் கவலையாக இருக்கிறது. இந்தக் காலத்தில் அப்படி ஒரு பெண்ணைப் பார்ப்பது தான் கஷ்டம்!"

"ஓகோ!" என்று தலையசைத்தவாறு மௌனமானார் ராமநாதன். சற்று நேரங் கழித்துத் தமக்குள் பேசிக் கொள்பவர்போல் தணிந்த குரலில் சொன்னார்: "எதற்குக் கேட்டேன் என்றால், கடந்த இரண்டு மூன்று நாட்களாக அவனைப் பற்றிக் கேள்விப்படும் விஷயங்கள் மிகவும் கவலையளிப்பதாக இருக்கின்றன. சரியான பக்கபலமின்றித் தேர்தலில் தலையிட்டதால் மிகமிகச் சிரமப்படுகிறான். அவனுடன் போட்டியிடும் ஆசாமி எப்படிப்பட்டவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். சேவை மனப்பான்மையுடன் தார்மீக அடிப்படையில் மக்களின் வாக்குகளைப் பெறும் ஓர் உயரிய முயற்சியை, அந்த மனிதர் வெறும் குத்துச் சண்டைப் போட்டியாக எண்ணிச் சட்டத்துக்குப் புறம்பான பல துணிகர காரியங்களைச் செய்து வருகிறார். அவரைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. நாம் கற்று வைத்திருக்கும் ஜனநாயக தத்துவத்தின் இலட்சணம் அது. இத்தமாதிரியான ஒரு பயங்கர விஷக் குட்டையில் நம் பிள்ளை போய்க் காலைவிட்டுக் கொண்டிருக்கிறானே என்பதுதான் என் கவலை. இப்போது அவன் உயிர் ஆபத்தான நிலையில் உலவி வருவதாகக்கூடக் கேள்விப்பட்டேன். பத்திரிகைகளில் அவனது தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலே நிகழும் கலாட்டாச் செய்திகளைப் படிக்கும்போதெல்லாம் என் மனம் பதறுகிறது. தேர்தலுக்கு இன்னும் ஐந்து நாட்கள்தாம் இருக்கின்றன. அது நடந்து முடியும்வரையில் கடவுள்தான் அவனைக் காப்பாற்ற வேண்டும்."

கஸ்தூரியம்மாளின் உடல் நடுங்கியது. ஏதோ தூர்க் கனவு காண்பவள் போல் மிரள மிரள விழித்தாள் அவள்.

"இன்னொரு விஷயம்கூடக் கேள்விப்பட்டேன், கஸ்தூரி! அவனுடைய பெயரில் நாம் பாங்கியிலே போட்டு வைத்திருந்த பதினையாயிரம் ரூபாயில் கிட்டத்தட்ட பதினாலாயிரம் வரை எடுத்துத் தேர்தல் செலவுக்காகச் செலவழித்துவிட்டு, மேற்



கொண்டு யாரிடமாவது கடன் வாங்க யோசித்துக் கொண்டிருக்கிறானும். இன்று காலை கோவிந்தராஜன் இந்தத் தகவலை என்னிடம் சொன்னார்" என்று மிகுந்த கவலையோடு கூறினார் ராமநாதன்.

இதைக் கேட்டு மேலும் பதறிவிட்ட சுந்தரியம்மாள், "என்னங்க இது! அநியாயமாக இருக்கிறதே! இரண்டே மாதத்திலே பதினைந்தாயிரத்தையா செலவழித்துவிட்டான்?" என்று பிரமித்த குரலில் குமுறினாள்

"பின்னே என்ன? தேர்தல் என்பது ஒரு சாதாரண விஷயமா? அது ஒரு பணம் தின்னி நோயாயிற்றே! பணக்காரர்களை மட்டும் தேடிச் செல்லும் சில நோய்கள் இருக்கின்றன. அந்த நோய்களில் இந்தத் தேர்தல் நோய் என்பதும் ஒன்று. இதற்குப் பணத்தாலேயே நடைபாவாடை விரித்தால்தான் குணம் காண முடியும். இல்லையானால் ஆளையே குளோஸ் பண்ணி விடும்!" என்று கூறி அவலச் சிரிப்புச் சிரித்த டாக்டர் ராமநாதன் மீண்டும் தொடர்ந்து. "பாங்கியிலிருந்த பணத்தையெல்லாம் செலவழித்து விட்டானே என்பதற்காகக்கூட நான் கவலைப்படவில்லை. மேற்கொண்டு யாரிடமாவது கடன் வாங்கி, அப்புறம் அதைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் திண்டாடுவானே என்பதை நினைத்தால்தான் மனம் ரொம்பவும் சஞ்சலப்படுகிறது" என்றார்.

"அப்படி ஆயிரக்கணக்கிலே அவனுக்குக் கடன் கொடுக்க யார் இருக்கிறார்கள்...?"

"ஏன்? நமது சிவப்பிரகாசத்திடம் போய்க் கேட்டால் அவர் இல்லை என்று சொல்லிவிடுவாரா?"

"ஐயையோ! அது நமக்குத்தானே அவமானம்? நீங்கள் அப்படி ஏதாவது கேள்விப்பட்டீர்களா?"

"சேச்சே! சும்மா பேச்சுக்கு அப்படிச் சொல்லி வைத்தேன். ஆனால், நம்மைவிட அவன் ரோஷக்காரன் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்!" என்று சிரித்தார் ராமநாதன்.

சுந்தரியம்மாளுக்கு இப்போதுதான் சரியாக மூச்சுவிட முடிந்தது.

"ஆனாலும், சுந்தரி! அவனை இந்த நிலையில் கஷ்டப்பட வைக்க என் மனம் இடம் தரவில்லை......" என்று இழுத்தார் ராமநாதன்.

"நாம் என்ன செய்ய முடியும்?" என்றாள் சுந்தரியம்மாள் சலிப்புடன்.

ஒரு கணம் தயங்கிய ராமநாதன் மெல்லச் சிரித்தவாறு, "வந்து......அவனுடைய பாங்கிக் கணக்கில் ஓர் ஐயாயிரம் ரூபாய் கொண்டுபோய்ப் போட்டு விடலாம் என்று நினைக்கிறேன்!" என்றார்.

சுந்தரியம்மாள் தன் கணவரை வியப்புடன் ஏறிட்டு நோக்கினாள். பிறகு வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு, "அதெல்லாம் இனிமேல் ஒரு செப்பாலடித்த தம்படிகூட அவனுக்குக் கொடுக்கக் கூடாது. நம்மை விட்டு அத்தனை முறைப்பாகப் போனவனுக்கு நாம் ஏன் உதவி செய்ய வேண்டும்? உருப்படாத கழுதை, நன்றாகக் கஷ்டப்பட்டால்தான் புத்தி வரும். நீங்கள் இப்படி அவன்மேல் அதிகப்படியான அக்கறை காட்டிக் காட்டித்தான் அவனைக் கெடுத்துவிட்டீர்கள். அதெல்லாம் கூடாது. அவனுக்கு ஒரு பைசா கூடக் கொடுக்கக் கூடாது!" என்று ஆத்திரத்துடன் உரக்கச் சொன்னாள்

டாக்டர் இதைக் கேட்டுக் கடகடவெனச் சிரித்தார். "இப்போது இப்படித்தான் பேசுவாய். தப்பித் தவறி அவன் தேர்தலில் ஜெயித்து விட்டானானால், அப்புறம் பார்க்கிறவர்களிடமெல்லாம், 'விவேகானந்தன் எம்.எல் ஏ. என்னுடைய தம்பியாக்கும்' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்வாய்!" என்றார் கேலியாக.

சுந்தரியம்மாளுக்கும் சிரிப்பு வந்து விட்டது. "உங்களுக்குத்தான் அப்படிச் சொல்லிக்கொள்ள ஆசையாய் இருக்கிறதாக்கும்!" என்று நகைத்தாள் அவள். சற்று நேரம் கழித்து ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவளாய், "ம்...நாம் ஆசைப்பட்டதுபோல அந்தக் கல்யாணம் முடிந்திருந்தால் இந்தமாதிரி வேண்டாத சம்பவங்களெல்லாம் நடந்திருக்காது!" என்று முனகினாள்.

ராமநாதன் இதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் மௌனமாயிருந்தார்.

சுந்தரியம்மாள் சற்றே அருகில் வந்து, "ஏங்க! அந்தப் பெண் தேவகி எதற்காக நம் பிள்ளையைச் செய்துகொள்ள மாட்டேன் என்று சொன்னாள்? அந்த விவரத்தை என்னிடம் நீங்கள் சொல்லவே இல்லையே!" என்று தணிந்த குரலில் கேட்டாள்.

"இப்போது எதற்கு அந்தப் பழைய குப்பையைக் கிளறுகிறாய்?" என்றார் டாக்டர் சலிப்புடன்.

"நான் அதைத் தெரிந்துகொள்ள வேண்டாமா?"

"எல்லாம் உனக்குத் தெரிந்த விஷயம் தான்! உன்னுடைய தம்பி ஒரு கடைந்தெடுத்த 'மகவாதி' என்பதை அவள் தெரிந்து கொண்டிருக்கிறாள். அந்தப் பெண் ஓர் அபூர்வப் பிறவி. அசைக்க முடியாத தெய்வ நம்பிக்கை உள்ளவள். அப்படிப்பட்டவள், வறட்டுத்தனமான குயுக்திவாதம் செய்து கொண்டு மனஇளக்கமின்றித் திரியும் அவனை எப்படி

ஈறுகளை உறுதியுடனும்
பற்களை ஆரோக்கியத்துடனும்
சுவாசத்தை நறுமணத்துடனும்

இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்

பனிச்சென்று ஒளிவீசும் வெண்மையும்
ஆரோக்கியமுமான பல் வரிசைகளை
அடைய வேண்டுமானால்

போர்ஹான்ஸ்

பற்பசையை உபயோகியுங்கள்



ஈறுகளின் உறுதிக்காக என்றே டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் கண்டுபிடித்து அளிக்கும் விசேஷத் துவர்ப்புப் பொருள் கலந்துள்ள பற்பசை இது ஒன்றுதான்.

Geoffrey Manners & Co. Private Ltd.

8-27

ஸ்பென்ஸர் அளிக்கும் சேவை

சீதளம், ஜலதோஷம், தசை வலி
ஜுரம் முதலியவைகளுக்கு

C.A.Q

REGD. TRADE MARK

கேள்வியும் சந்தேகமும் வேண்டாம்

திரவ மருந்தாகவும், கேப்ஸ்யூலாகவும் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

சி. ஏ. க்யூ. ஒன்றே-
அதை தயாரிப்பவர்
ஸ்பென்ஸரே

ஸ்பென்ஸர் & கம்பெனி லிமிடெட்

மதராஸ் : : பம்பாய் : : கல்கத்தா : டில்லி மற்றும் கிளைகள்


ஆல மரத்தடி நிழலிலே...
முன்பெல்லாம் சாதாரணமாக நம்நாட்டு கிராமவாசிகள்
அன்றாட வேலை முடிந்தவுடன் ஆலமரத்தின் நிழலில்
கூடி பொழுதைக் கழிப்பது வழக்கம்.
இப்பொழுதோ அவர்கள் மத்தியில் டிரை-செல்
ரேடியோ செட் ஒன்று செய்தி அறிக்கைகளையும்,
அவர்களுக்குப் பிடித்தமான பாட்டுக்களையும் ஒலிபரப்பிக்
கொண்டு அவர்களை இன்பத்தில் ஆழ்த்தி வருவதை
சாதாரணமாகக் காண்கிறோம்.
இக்காலத்து கிராமவாசிகள் ரேடியோ நிகழ்ச்சிகளை
மிகத்தெளிவாகக் கேட்பதற்கு அதிக சக்தி அளிக்கக்கூடிய
எஸ்ட்ரெலா பாட்டரிகளையே உபயோகிக்க விரும்புகிறார்கள்.
நீண்ட காலம் உழைக்கக்கூடியதும், டிரை-செல்
பாட்டரி உற்பத்தியில் 20 வருஷ அனுபவத்தினால்
தயாரிக்கப்பட்டதுமான எஸ்ட்ரெலா பாட்டரிகள்
வெளிநாடுகளில் உற்பத்தியாகும் சிறந்த பாட்டரிகளுக்கு
சமமானவையென்று பரிசோதனைகள்
மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.
உங்கள் ரேடியோவிற்கு ஒரு எஸ்ட்ரெலா பாட்டரியை
இன்றே பொருத்துங்கள். இது உங்களுக்குத் தேவையான
எல்லா அனுகூலங்களையும் ஒருங்கே அளிக்கவல்லது.
எஸ்ட்ரெலா
ரேடியோ பாட்டரி
இப்பொழுது உங்கள்
ரேடியோ டீலரிடம் கிடைக்கிறது
ESTRELA
எஸ்ட்ரெலா பாட்டரீஸ் லிமிடெட்
பம்பாய் • மதராஸ் • டெல்லி • கல்கத்தா • கான்பூர்

விரும்புவான்? 'இருதயமுள்ள ஒருவனைத் தேடுங்கள்' என்று கருக்கமாகச் சொல்லி விட்டாளாம் தன் தந்தையிடம்! நல்ல வேளை, எதுவும் நடக்கா முன்பே இதை அவள் தெரிந்துகொண்டு விட்டாள். கல்யாணத்துக்குப் பின் தெரிந்திருந்தால் நிலைமை என்ன ஆகியிருக்கும்? அதை நினைத்துப் பார்க்கவே என்னால் முடிய வில்லை!'' ஓங்கிப் பெருமூச்சு விட்டுச் சோபாவில் சாய்ந்தார் ராமநாதன்.

'' எல்லாம் என்னால் வந்த வினை! அந்தப் பெண்ணின் மனத்தையோ, நம் பிள்ளையின் மனத்தையோ சரியாகப் புரிந்து கொள்ளாமல் அவசரப்பட்டுக் கல்யாணப் பேச்சை எடுத்தது என் னுடைய தவறுதான். நான் பெண் பார்க்கப் புறப்பட்டபோது அவன் ஏதோ என்னிடம் சொல்ல வாயெடுத் தான். நான்தான் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் போய்விட் டேன். ஒருகால், அவனுக்கும் அவளை மணந்து கொள்ள விருப்பமில்லாமல் இருந்ததோ என்னவோ! ஆரம்பத் திலேயே உங்கள் பேச்சைக் கேட்டிருந் தால் இந்தமாதிரித் தொல்லைகளே வந் திருக்காது. பாவம். அந்த நல்ல பெண் இப்போது நம் வீட்டுக்குக்கூட வருவது இடையாது. நான் போய் அவளைப் பார்க்க எனக்கே வெட்கமாய் இருக் கிறது'' என்று வருந்திக் குமைந்து கூறிக் கொண்டே அங்கிருந்து போகத் திரும்பிய சுந்தரியம்மாள் ஏதோ நினைத்துக் கொண்டவளாய்த் தயங்கி நின்றாள். பிறகு பயத்துடன் தன் கணவரைப் பார்த்து, '' ஏங்க! ஒரு விஷயம் சொல்கிறேன். கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

டாக்டரின் பார்வை அவள் பக்கம் திரும்பியது

'' ஒன்றுமில்லை!...வந்து....அவன்தான் சிறுபிள்ளை: புத்தியில்லாமல் கோபித்துக் கொண்டு போய்விட்டான். இப்போது தன் தவற்றை நன்றாக உணர்ந் திருப்பான். ஆனால் நம்மிடம் திரும்பிவர அவனுக்குப் பயமாக இருக்கும். அத்தான் திட்டுவாரே என்று தயங்கிக் கொண் டிருப்பான். அவன் கஷ்டப்படுவதாக நீங்களே சொல்கிறீர்கள். இப்படியே அவனை விட்டு விட்டால் என்ன ஆவான்? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்...''

'' சரி தான்; இப்போது நீ என்ன சொல்கிறாய்?''

'' நான்......என்ன சொல்கிறேன் என் றால்......வந்து......நான் போய் அவனைக் கூப்பிட்டுப் பார்க்கிறேனே......?''

குபீரென்று சிரித்துக்கொண்டே எழுந் தார் டாக்டர் ராமநாதன். ''எனக்குத் தெரியும்! நீ இப்படிச் சொல்வாய் என்று எனக்கு முன்பே தெரியும்!'' என்று அடக்க முடியாத சிரிப்புடன் சொன்ன அவர், '' நானும் அப்படித்தான் நினைத் துக் கொண்டிருக்கிறேன். நீ போய் உன் வேலையைப் பார்'' என்றார்.

சுந்தரியம்மாளின் முகம் மலர்ந்தது. தன் கணவரை வியப்பு பொங்கப் பார்த்தாள் அவள்.

'' அது சரி; கமலி எங்கே?'' என்று கேட்டுப் பேச்சின் திசையை மாற்றினார் ராமநாதன்.

'' சற்றுமுன் மாடிக்குப் போனாளே, நீங்கள் பார்க்கவில்லையா?'' என்றாள் சுந்தரியம்மாள்.

''அவளைப் பற்றிக்கூட நான் உன்னிடம் கொஞ்சம் தனியே பேசவேண்டி யிருக்கி றது'' என்று புன்முறுவலுடன் சொன்ன ராமநாதன், '' இப்போது நேரமில்லை.



நான் மருத்துவ விடுதிக்குப் போகவேண்டி யிருக்கிறது. பிறகு சொல்கிறேன்'' என்றவாறு அலமாரியிலிருந்து எதையோ எடுக்கச் சென்றார்.

'' நானும் கோயிலுக்குப் போய்வர வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்து நகர்ந்தாள் சுந்தரியம்மாள். பத்து நிமிஷங்களுக்குப் பிறகு அவள் கமலியிடம் சொல்லிக் கொண்டு கோயி லுக்குப் புறப்பட்டுப் போய்விட்டாள். அலமாரியிலிருந்து எடுத்த ஏதோ ஒரு புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார் ராமநாதன்.

மாடியிலிருந்த கமலி, தோட்டத் துக்குப் போவதற்காகப் படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

டெலிபோன் மணி கணகணத்தது. புத்தகத்தில் தம் கவனத்தை ஆழ்த்தி வைத்திருந்த ராமநாதன் பின்னால் திரும்பி, ''கமலி, யாரென்று கேளம்மா!'' என்று கூறினார்.

கமலி ஓடிவந்து டெலிபோன் ரிஸீ வரைக் கையில் எடுத்தாள்.

"ஹலோ!...யாரு பேசறது? என்ன! ...அ...நீங்களா?" என்றவாறு பரபரப்புடன் ரிஸீவரை விலக்கி வைத்துக் கொண்டு டாக்டரைப் பார்த்து விழித்தாள் கமலி

"என்ன, மகளே! யார் பேசறது?... இப்படிக் கொடு!" என்று சொல்லிக் கொண்டே வந்த டாக்டர் ரிஸீவரை வாங்கி, "ஹலோ! யார் பேசறது?...... ஆமாம், நான்தான்!...நீங்கள்?......ஓ, மிஸ்டர் சாரங்கனா? சௌக்கியம் தானா?.. ஏன் இந்தப் பக்கமே வருவதில்லை?...... உமது நண்பன் சௌக்கியம்தானே?...... தெரியாதா?...சரி, என்ன விஷயம்?...... ஏன் மிஸ்டர் இப்படி உளறுகிறீர்?...... தெளிவாகப் பேசுமே!......என்ன!...... கோமதியா?...ஆமாம்,...அவள் இங்கு வரவில்லையே!....ஹலோ!....ஹலோ!... போனை வைத்து விட்டாயா?..." என்றவாறு ரிஸீவரை வைத்து விட்டுத் தமக்குள் சிரித்து, "இவன் ஓர் அபூர்வ மனுஷன்!" என்றார். பிறகு தம் கைக் கடிகாரத்தில் மணி பார்த்தார். ஆறு ஆகியிருக்குது. "கமலி, நான் மருத்துவ விடுதிவரை போய்வருகிறேன். நீ வீட்டில் பத்திரமாயிரு!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

கமலிக்கு ஏற்பட்ட படபடப்பு இன்னும் தணியவில்லை. டாக்டர் இருக்கும் போது சாரங்கன் தன்னைப் போனில் கூப்பிட்டு விட்டானே என்ற பயத்தால் ஏற்பட்ட படபடப்பு அது. அந்தப் பயம் ஒருவாறு நீங்கியதும் தனக்குத் தானே கலகலவெனச் சிரித்துக் கொண்டு போய்ச் சோபாவில் சாய்ந்தாள். அவள் உடலும் உள்ளமும் மகிழ்ச்சியால் குறுகுறுத்தன. முகம் நாணச் சிவப்பேறி மலர்ந்தது.

'உண்மையில் அவர் என்னிடம் பேசத்தான் போன் செய்தாரா? அல்லது டாக்டரிடம் பேச அழைத்தாரா? இல்லை. அந்தக் குறும்புக்கார மனிதர் என்னிடம் பேசவே போன் செய்திருப்பார்! துரதிர்ஷ்டவசமாக டாக்டர் இருந்து விடவே, என்ன சொல்வதென்று தெரியாமல் ஏதோ உளறியிருக்கிறார்! கோமதி வந்தாளா என்று கேட்டுவிட்டு, 'டக்' கென்று போனை வைத்துவிட்டிருக்கிறார். பொல்லாத மனிதர்! என்னிடம் என்ன சொல்ல எண்ணியிருப்பார்? என் மனத்தினுள்ள மூன்றெழுத்தை அவர் தம் வாய்ப்படச் சொல்லி விடுவதென்று துணிந்திருப்பாரோ?...ஐயோ, அந்த இன்பச் செய்தியை என் காதுபடக் கேட்க முடியாமலாகி விட்டதே!'

கமலியின் முகம் மேலும் சிவந்து மலர்ந்தது. அந்த டெலிபோன் கருவியைப் பார்க்கவே வெட்கப்படுகிறவள் போல் முகத்தைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்.

சற்று நேரங் கழித்து மீண்டும் டெலிபோன் மணி அலறியது. சாரங்கன்தான் மறுபடியும் போன் செய்கிறான் என்று எண்ணிய கமலி குதூகலத்துடன் துள்ளி எழுந்து ஓடிப் போய் மேஜையின் மீது ஒயிலாக குனிந்து சாய்ந்து கொண்டு ரிஸீவரை எடுத்தாள்.

அத்தியாயம் இருபத்து நான்கு

"ஹலோ! யார் பேசறது? சுந்தரியம்மாளா? ஓ...கமலியா?... ஆமாம்; நான்தான் பேசுகிறேன். உன் பெரியம்மா இல்லையா? எங்கே, கோயிலுக்குப் போய் இருக்கிறார்களா? உன் பெரியப்பா? அவரும் இல்லையா? சரி; ஒன்றுமில்லை ... வந்து ... உன் அத்தான் விவேகானந்தனைப் பற்றி...ஏதாவது... தகவல்?... இல்லையா?.... சரி...நானா?... நான்...திருமூர்த்தி நகர் மியூஸிக் டைரக்டரின் வீட்டிலிருந்து பேசுகிறேன். அதெல்லாம் வேண்டாம்! முடிந்தால் நானே மறுபடியும் போன் செய்கிறேன்!"

நடுக்கமுறும் கையிலிருந்த ரிஸீவரை வைத்து விட்டு ஆயாசத்துடன் கீழே உட்கார்ந்தாள் கோமதி. கண்கள் இருண்டது போலவும் மயக்கம் வருவது போலவும் இருந்தது அவளுக்கு. சமாளிக்க முடியாத களைப்பு பசி வயிற்றைக் கிள்ளியது. எவ்வளவு நேரம்தான் அந்த மண் கூஜாவிலிருக்கும் பழைய தண்ணீரைக் குடித்து வயிற்றை நிரப்புவது? கிட்டத்தட்ட இருபது மணி நேரமாக இந்த வீட்டிலே அவள் அடைந்து கிடக்கிறாள். ஒரே புழுக்கம். மின்விசிறியின் காற்றில் அனல் மணக்கிறது. என்ன பயங்கரமான சோதனை!


நேற்றிரவு பதினொன்றரை மணிவாக்கில், வஞ்சகமாகப் பேசிக் கோமதியை அழைத்து வந்து இந்த வீட்டில் அடைத்து விட்டுப் போன ஜமதக்கினி, இதோ மறுநாள் மாலை ஆறு மணியாகியும் திரும்பி வரவில்லை. அவருடைய திட்டம் என்னவாகியிருக்கும்? எந்த வகையில் கோமதியைப் பழி வாங்க அவர் எண்ணியிருப்பார்?

அவளுக்கு அவரைப் பற்றி நன்றாகத் தெரியும். அவர் ஒரு பயங்கொள்ளி மனிதர். கோழையிலும் படு கோழை. ஆனால் தனக்குப் பிடிக்காதவர்களை

வஞ்சம் தீர்க்கப் பல சாதுரியமான காரியங்களைச் செய்து சிக்கலில் மாட்டிவிட்டு வேடிக்கை பார்த்து மகிழ்வார். அது அவருடைய பொழுதுபோக்கு. இதிலே அவருடைய மூளை ரொம்பவும் அபாரமாக வேலை செய்யும். அவர்தான் அம்மாதிரிச் சிக்கல்களுக்குக் காரணம் என்பதை மற்றவர்களால் கண்டுபிடிக்கவே முடியாது. அவ்வளவு சாமர்த்தியமாகத் தம் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வார். அவருடைய அந்தத் திருவிளையாடல்களுக்குப் படத் துறையிலிருக்கும் எத்தனையோ பேர்கள் பலியாகிப் பல கஷ்டநஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள். எனவே, இப்போது அவர் கோமதியையும் ஏதோ ஒரு பயங்கரச் சிக்கலில் சிக்க வைத்து வேடிக்கை பார்க்கவே இப்படி ஒரு துணிகரக் காரியத்தைச் செய்திருப்பார். அவ்வாறில்லையென்றால் அவரது வீட்டிலிருக்கும் டெலிபோனை அப்புறப்படுத்தாமல் அல்லது அதைப் பூட்டாமல் அவளைக் கொண்டு வந்து அடைத்து விட்டுப் போவாரா? அவள் அடைபட்டிருக்கும் விஷயத்தைப் போலீஸுக்கோ அல்லது வேறு யாருக்குமோ போன் மூலம் தெரிவித்துத் தம்மைக் குற்றவாளியாக்கி விட்டுத் தப்பிச் செல்ல முயல்வாள் என்று அவருக்குத் தெரியாதா? நிச்சயமாகத் தெரிந்திருக்கும். அது தெரிந்தும் இப்படிச் செய்திருக்கிறார் என்றால் அதற்கு ஒரு காரணம் இருக்கத்தானே வேண்டும்? சுலபமாகச் சொல்ல வேண்டுமானால் இப்போதுள்ள நிலையில் கோமதியின் மீது அவர் எவ்வளவு பெரிய திருட்டுக் குற்றத்தையும் சாட்டலாம். ஏற்கனவே இந்த வீட்டில் குடியிருந்து வெளியேறியவள் அல்லவா?

இவ்வாறெல்லாம் தன் சிந்தனையை ஓட்டிய கோமதி, போன் இருக்கும் பக்கமே திரும்பவில்லை. பீதியால் நடுங்கித் துடிக்கும் தன் நெஞ்சை அழுத்திப் பிடித்தவாறு ஒரு முழு இரவை எப்படியோ கழித்தாள்.

பொழுது புலர்ந்தது. ஜமதக்கினி அப்போதும் திரும்பி வரவில்லை. தெருவில் போவோர் வருவோரைக் கூவியழைத்து உதவி கோரவும் அவளுக்கு அச்சமாக இருந்தது. உதவி கேட்கப் போய் அது வேறு விதமாக முடிந்து விட்டால் என்ன செய்வது? அவளோ ஓர் ஏழை நடிகை. உற்றார் உறவினர் அற்ற அநாதைப் பெண். அவள் மீது உண்மை அன்பு கொண்ட ஒரே மனிதனான சாரங்கனையும் மனம் நோக வைத்து விட்டிருக்கிறாள். இந்நிலையில் அவள் யாரை நம்ப முடியும்? அவள் நம்பினாலும் உலகம் அவளை நம்ப வேண்டுமே! உயிரே போவதானாலும் ஜனங்களின் கேலிப் பேச்சுக்கு இலக்காகக் கூடாது என்று தன் மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டாள்.



"விசாரணைக் கமிட்டி இந்த ஒரு வருஷத்திலே என்ன செய்ததென்று பார்க்க இன்னொரு விசாரணைக் கமிட்டியைப் போட்டுவிட வேண்டியதுதான் போலிருக்கு!"

பிற்பகல் பத்து மணிக்கு மேல் ஆகிவிட்டது. அப்போதும் ஜமதக்கினி வரவில்லை. இருதலைக்கொள்ளி எறும்பு போல் தத்தளித்துக் கொண்டிருந்த கோமதிக்கு ஓர் எண்ணம் தோன்றியது. சாரங்கனின் காரியாலயத்துக்குப் போன் பண்ணி அவனை வரச் சொல்லலாமா என்று நினைத்தாள். இப்படி நினைக்கவே அவளுக்கு மிகவும் அவமானமாயிருந்தது. ஆனால் வேறு வழி தோன்றவில்லை. அவள் மெல்ல எழுந்து டெலிபோன் அருகில் சென்றாள். அசந்தர்ப்பமாக அவளுடைய பார்வை ஜன்னலுக்கு வெளியே தெருப் பக்கமாகச் சென்றது. மறுகணம் அங்கே யாரையோ கண்டு திடுக்கிட்டவள் போல் பின்னால் நகர்ந்தாள். அவள் உடல் ஒரு குலுங்குக் குலுங்கியது. ஜன்னல் கதவை ஒருக்களித்துக் கொண்டு மீண்டும் வெளியே எட்டிப் பார்த்தாள்.

தெருவின் மறு பக்கமிருந்த ஒரு மரத்தடியில், தலைவிரிகோலமாய்ச் சோர்ந்து துவண்டு நின்று கொண்டிருந்தான் மோகனசுந்தரம். நேற்றிரவு முதல் இதுவரை அவன் வீட்டுக்கே செல்லாமல் தெருத் தெருவாகச் சுற்றியலைந்திருக்-

கிறான் என்பதைப் புழுதி படிந்த சேறேறிய அவன் உடைகள் அறிவித்தன. உடலெங்கும் வியர்வை ஆறாகப் பெருக, ஜமதக்னியின் வீட்டையே பரிதாபமாகப் பார்த்தவாறு நின்றிருந்தான் அவன்.

பயமும் வியப்பும் மனத்தை உருட்டிப் புரட்டி யெடுக்க அப்படியே திகைத்து நின்று விட்டாள் கோமதி. 'இந்த மனிதர் ஏன் இங்கு வந்து நிற்கிறார்?' அவளுடைய வாய் மெல்ல முனகியது. இச்சமயம் ஜமதக்னி வந்து விட்டால் நிலைமை விபரீதமாகுமே என்று அஞ்சி நடுநடுங்கினாள். இந்த வீட்டில் அவள் அடைபட்டிருக்கும் விஷயம் தெரிந்து தான் அவன் இங்கே வந்திருக்கிறானோ? நிச்சயமாக அது அவனுக்குத் தெரிந்திருக்க முடியாது. ஏதோ ஓர் ஊகத்தின் பேரில்தான் வந்திருப்பான். இல்லையானால், தொலைவிலேயே தயங்கி நின்று கொண்டிருக்க மாட்டான் அல்லவா? கோமதியின் மீது அவன் எத்தகைய ஆழ்ந்த அன்பு வைத்திருந்தால் இப்படி ஓர் இரவும் பகலுமாக விடாமல் தேடி அலைந்திருப்பான்!—அவள் மனம் சிலிர்த்துக் கரைந்தது.

மறுகணமே, மோகன்மீது அவளுக்குக் கோபம் குமுறிப் பொங்கியது. 'வேண்டாம் வேண்டாம் என்று வெறுத்துத் தள்ளினாலும் இவன் ஏன் இப்படி என்னை நிழல் போல் பின்தொடர்ந்து தொல்லை தருகிறான்? இவனுடைய நல்வாழ்வுக்காக நான் அந்த யோசனை சொன்னதால் தானே இன்று இந்தப் பயங்கரச் சூழ்நிலையில் சிக்கிக்கொண்டு தவிக்கிறேன்' என்றெல்லாம் அவள் தன் மனத்துக்குள்ளாகவே சினந்து சீறிக் கொண்டாள். விவேகானந்தனின் அன்பைப் பெற முடியாமற் போனதற்கு இவனும் ஒரு காரணம் என்று எண்ணியபோது அவளுடைய கோபம் உச்சநிலையை அடைந்தது. உள்ளிருந்தவாறே உரக்கக் கூவி ஏசிப்பேசி அவனை விரட்டியடிக்க வேண்டுமெனக் கொதித்தாள். ஆனால்?...... கோமதி இந்த வீட்டில் இருக்கிறாள் என்பதை மோகன் தெரிந்துகொண்டால் நிலைமை என்ன ஆகும்? ஆவேச ஆர்ப்பாட்டம் செய்து ஊரைக் கூட்டி விடுவான். சாத்திக் கிடக்கும் வீட்டின் கதவைப் பிளந்து நொறுக்கிக் கொண்டு உள்ளே புகுந்து விடுவான். அப்படிச் செய்யக்கூடிய வெறி நிலையில்தான் இப்போது அவன் நின்று கொண்டிருக்கிறான்.

"ஐயோ, தெய்வமே!" என்று நெஞ்சை அழுத்திப் பிடித்துப் பொருமியவாறு தரையில் அப்படியே உட்கார்ந்து விட்டாள். சாரங்கனுக்குப் போன் பண்ண வேண்டும் என்ற எண்ணமே இப்போது அவளிடமிருந்து அகன்றுவிட்டது.

அவ்வப்போது அவள் எழுந்து, மோகனசுந்தரம் போய் விட்டானா என்று ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டே யிருந்தாள். ஆனால், மோகன் அங்கிருந்து போகவே இல்லை. பைத்தியக்காரனைப் போல் தனக்குள் ஏதோ முனகியவாறு அங்கேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

மாலை நான்கு மணிக்குமேல் ஆகி விட்டது. மோகன் இன்னமும் அந்த மரத்தடியை விட்டு அகலவில்லை. ஜமதக்னியும் வரவில்லை. திக்குத் திசையறியாத காட்டில் தனியே விடப்பட்ட சின்னஞ்சிறு குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள் கோமதி. அவள் தன்னைப் பற்றிமட்டும் நினைத்து இப்படி அழவில்லை. விவேகானந்தனின் கதி என்ன ஆயிற்றோ என்று எண்ணியே அவள் குமுறிப் பொருமினாள். அந்தக் கவலைதான் அவளைப் பெரிதும் வாட்டிப் பிழிந்தது. நேற்றிரவு விவேகானந்தனின் வீட்டுக்குச் சென்ற அவ்விரண்டு முரடர்களும் அவனுக்கு ஏதேனும் ஆபத்து விளைவித்து விட்டிருப்பார்களோ?—இந்தப் பயங்கரச் சதி விஷயம் தனக்குத் தெரிந்திருந்தும் அவனைத் தன்னால் காப்பாற்ற முடியாமல் விதி சதி செய்து விட்டதே என்று அவள் விம்மி விம்மி அழுதாள்.


மணி ஐந்தரையாகியது. கோமதி மெள்ள எழுந்து வெளியே எட்டிப் பார்த்தாள். மோகனசுந்தரம் எங்கே? அவனை அங்கு காணோம்! சடாரென்று ஓடிப் போய் டெலிபோனை எடுத்து, சாரங்கனின் பத்திரிகாலயத்துக்கு 'ரிங்' பண்ணினாள். இன்று முழுக்க அவன் ஆபீஸுக்கு வரவில்லை என்ற பதில் கிடைத்தது. குழம்பிச் சோர்ந்த கோமதி சற்று நேரங் கழித்து, சுந்தரியம்மாளுக்குப் போன் செய்தாள். அங்கு அவளும் இல்லை, டாக்டரும் இல்லை என்று கமலி சொல்லிவிட்டாளே! விவேகானந்தனைப் பற்றியும் தனக்கு ஒன்றும் தெரியாதெனக் கூறிவிட்டாளே!...இனி என்ன செய்வது!......

அளவுக்கு மீறிய துக்கத்தால் மயக்கமடைந்தவள் போல் கீழே சாய்ந்தாள் கோமதி. அதே சமயம், வாசலில் ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

"எந்தக் கோட்டையைப் பிடிக்க இத்தனை ஆழ்ந்த யோசனை?" என்று இனிய குரலில் கேட்டுக் கொண்டே புன்முறுவல் பூசிய முகத்துடன் நவயுக வாலிபர் சங்கத்தின் காரியாலயத்துக்குள் பிரவேசித்தாள் கமலி.

களைத்த முகத்துடன் ஒரு நோயாளியைப் போல் நாற்காலியில் சாய்ந்து

அஜீரணத்தால் உங்கள் அலுவல்கள் பாதிக்கப்படாமலிருக்க....



ஹ்யூலட்ஸ் மிக்சர்

சாப்பிட்டபின் ஏற்படும் அஜீரணத்தையும் வயிற்று வலியையும்



அடியோடு குணப்படுத்தும்

ஹ்யூலட்ஸ் மிக்சர் எரிச்சலை உண்டாக்கும் அமிலத்திலிருந்து இரைப்பையின் சுவற்றைக் காப்பாற்றுவதோடு வயிற்று வலியையும் உடனே போக்குகிறது. 80 வருஷங்களுக்கு மேலாக உலகத்திலுள்ள எல்லா டாக்டர்களும் சிபாரிசு செய்யும் மருந்து இதுவே.

குழந்தைகள்: குழந்தைகளின் வயிற்று உபாதையை நீக்கவல்லது ஹ்யூலட்ஸ் மிக்சர்.

வயிற்றுக்கடுப்புக்கு அபினி கலந்த ஹ்யூலட்ஸ் மிக்சரை உபயோகியுங்கள்.

ஸி. ஜே. ஹ்யூலட் அண்ட் ஸன்
(இந்தியா) பிரைவேட் லிமிடெட்,
86/A, நைனியப்ப நாயக்கன் தெரு,
மதராஸ்-3

JWT CJH-1726a

கண்ணை மூடிக் கொண்டிருந்த சாரங்கன் திடுக்கிட்டு நிமிர்ந்து கமலியைப் பேந்தப் பேந்தப் பார்த்து விழித்தான்.

"ரொம்பவும் நெஞ்சுத் தைரியம் கொண்ட ஆசாமிதான் நீங்கள்? வீட்டில் பெரியவர்கள் இருப்பார்களே என்ற எண்ணம் கூட இல்லாமல் எனக்கு ஏன் போன் செய்தீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே அவன் எதிரில் போய் விறைப்பாக நின்றாள் கமலி.

'இது என்ன புதிய சோதனை?' என்று தனக்குள் முனகிக் கொண்ட சாரங்கன் அவளைப் பரிதாபமாக ஏறிட்டுப் பார்த்தான். ஓர் இரவும் ஒரு பகலுமாகக் கோமதியைத் தேடி எங்கெங்கோ சுற்றி அலைந்துவிட்டு அப்போதுதான் அங்கு வந்து சேர்ந்திருந்த அவன் முகம் சவம் போல் வெளுத்து விட்டிருந்தது.

"என்னிடம் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் ஒரு கடிதம் எழுதுவதற்கென்ன அதைக் கூடவா சொல்லிக் கொடுக்க வேண்டும்?" என்று நாணம் கலந்த குறும்புக் குரலில் சிடுசிடுத்தாள் கமலி.

"மன்னிக்க வேண்டும், அம்மணி! நான் டாக்டருக்குத்தான் போன் பண்ணினேன். துரதிர்ஷ்ட வசமாக நீங்கள் வந்து..." என்று தடுமாறினான் சாரங்கன்.

"போதும் நிறுத்துங்கள், உங்கள் கேலிப் பேச்சை!" என்று திடீரென்று சீறிய கமலி சட்டென்று எழுந்து நின்று, "என்னை என்ன, சின்னப் பாப்பா என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? குறும்பு செய்ததுமல்லாமல் அதை மறைக்கக் கோமாளி வேஷம் வேறு போடுகிறீர்களே!" என்றாள் அதட்டலான குரலில். மீண்டும் அவள் தொடர்ந்து, "யாரை ஏமாற்றுகிறீர்கள்? எனக்குத்தான் நீங்கள் போன் செய்தீர்கள். என் பெரியப்பா இருப்பது தெரிந்தும், பேச்சை மாற்றி, கோமதி இருக்கிறாளா என்று ஏதோ வாயில் வந்ததை உளறிக் கொட்டிவிட்டு ஓடி விட்டீர்கள்! ஆனால், கொஞ்ச நேரத்துக்கெல்லாம் உங்கள் குட்டு உடைந்து விட்டது! நீங்கள் யாரை விசாரித்தீர்களோ அவளே அடுத்த ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் எங்கள் வீட்டுக்குப் போன் பண்ணினாள். ஒருவேளை நீங்களே அவளை விட்டுப் போனில் என்னைக் கூப்பிடச் சொன்னீர்களோ என்னவோ! நல்ல வேளையாக அப்போது என் பெரியப்பா வீட்டில் இல்லை! இருந்திருந்தால் உங்களைப் பற்றி அவர் என்ன நினைத்திருப்பார்?" என்றாள். அவனுக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்துவிட்டது.

ஆனால் சாரங்கனோ? அவன் ஏதோ தேவவாக்கைக் கேட்டவன்போல் சடாரெனத் துள்ளி எழுந்தான். "நீங்கள் என்ன சொன்னீர்கள், கமலி? எனக்குப் பின் யார் உங்களுக்குப் போன் பண்ணியது?" என்று பரபரப்புடன் கேட்டான்.

"ஆஹாஹா! என்ன பிரமாதமான நடிப்பு!" என்று உதட்டை நெளித்து மூக்கைச் சுளித்துக் கேலி செய்தாள் கமலி.

"உண்மையாகத்தான் கேட்கிறேன்: சொல்லுங்கள், கமலி!" என்று துடிதுடித்தான் சாரங்கன்.

"உங்களுக்கு ஒன்றுமே தெரியாது. இல்லையா?"

"ஐயோ, தெரியாமல்தான் கேட்கிறேன்; சொல்லுங்கள் அம்மணி!"

"உங்கள் அருமைத் தங்கை கோமதிதான் போன் பண்ணினாள்."

"கோமதியா? எங்கிருந்து? எப்போது?"

"சற்றுமுன்தான்! திருவூர்த்திநகரில், மியூஸிக் டைரக்டர் ஜமதக்கினி என்பவரின் வீட்டிலிருந்து அவள் பேசுவதாகச் சொன்னாள்!"

சாரங்கன் சரேலென்று வெளியே பாய்ந்து ஓடினான். ஒன்றும் புரியாமல் திகைத்து நின்ற கமலியும் அவனைப் பின் தொடர்ந்து விரைந்தாள்.

"வணக்கம், சார்!" என்று ஒரு கூழைக் கும்பிடு போட்டுக்கொண்டே, வேர்க்க விறுவிறுக்க வாசற்படியின்மேல் ஏறி நின்றான் சாரங்கன். அவன் பின்னால் வந்து ஒதுங்கி நின்றாள் கமலி.

"ஓ....மிஸ்டர் சாரங்கனா! சௌக்கியம்தானே?" என்று அமர்த்தலாகக் கேட்டுக் கொண்டே கம்பீரமாக நடந்து வராந்தாவுக்கு வந்தார் ஜமதக்கினி.

"உங்கள் புண்ணியத்திலே சௌக்கியம்தான் சார்!"

"உங்களுடைய இண்டிமேட் பிரண்ட் மிஸ்டர் விவேகானந்தன்?"

"பகவான் புண்ணியத்திலே அவனும் சௌக்கியம்தான் சார்!"

"என்ன, இப்படித் திடீர் விஜயம்?"

"ஒன்றுமில்லை!...வந்து...உங்கள் வீட்டிலே கோமதி வந்திருக்கிறாளாம். அவளைப் பார்த்து விட்டுப் போவதற்காக..." என்று வார்த்தைகளை மென்று விழுங்கினான் சாரங்கன்.

கண்களை இடுக்கிக் கொண்டு சற்று நேரம் யோசனையிலிருந்த ஜமதக்கினி, "கோமதியா?...ஓ...அந்த நடிகையா? அவள் ஏன் இங்கு வரப் போகிறாள்?" என்றார் அலட்சியமாக.

திக்கித் திணறிய சாரங்கன் அப்படியே மரம்போல் நின்றுவிட்டான்! (தொடரும்)

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam

குறைந்த அளவு குழந்தைகள்...
குதூகலமான குடும்பங்கள்

ஜம்ஷெட்பூரில் பிரதிதினமும் மாலையில் தொழிலாளர்களின் மனைவிமார்கள் டாடா ஸ்டீல் ஆலையினரால் நடத்தப்படும் தாய்மை—குழந்தை பராமரிப்புக்கான ஏழு விடுதிகளில் கூடுகிறார்கள். அங்கு தேர்ச்சி பெற்ற ஆலோசகர்கள் கட்டுப்பாடற்ற குழந்தைப் பேற்றினால் விளையும் கேடுகளை விளக்கி கர்ப்பத் தடுப்பு மருந்துகளை அடக்க விலைக்கு விநியோகிக்கிறார்கள். இதுபோன்ற நிலையங்கள் மேன்மேலும் நிறுவப்படுகின்றன. ஜம்ஷெட்பூரில்தான் முதல் முதலாக 1959ம் ஆண்டிலிருந்து கர்ப்பத் தடுப்பு மருந்துகள் பரவலான அளவில் பயன்படுத்தப் படுகின்றன.

இந்த முயற்சியில் முக்கியமாக குறிப்பிடத் தக்கது ஆண்களுக்கான ஆபரேஷன். 1951ம் ஆண்டிலிருந்து தொழிலாளர் களிடையே குடும்பக் கட்டுப்பாட்டை பிரபலப்படுத்தும் முயற்சியில் முன்னணியில் இருக்கும் டாக்டர் ஹர்பன்ஸ் லால் அவர்களின் உதவியால் இத்தகைய ஆபரேஷன்கள் செய்யப்படுகின்றன. லண்டன் ராயல் காலேஜ் ஆப் சர்ஜன்ஸ் அங்கத்தினரான டாக்டர் லால் இதுவரை 475 ஆபரே ஷன்கள் வெற்றிகரமாக நடைபெறக் காரணமாவார்.

பெருகிவரும் ஜனத்தொகையைக் குறைப்பதையே தேசிய குறிக்கோளாகக் கொண்டு, ஜம்ஷெட்பூரில் இந்த நவீன முறை முதன் முதலாக அமுல் நடத்தப்படுகிறது. ஜம்ஷெட் பூரில் தொழில், வயிற்றுப்பிழைப் பிற்காக மட்டுமல்ல, வாழ்க்கை வழிகாட்டியாகவும் உள்ளது.



ஜம்ஷெட்பூர்

எஃகு நகரம்

The Tata Iron and Steel Company Limited JWTTN 4613

REGISTERED No. M. 4592
Registered as a Newspaper in Ceylon

